ஒரே நேரத்தில் ஆறு நாடுகளில் வெளியாகும் ஒரே ஒரு தமிழ்ப் பத்திரிகை

பீற்றர் ஜோசப் அன்ட் அசோசியேட்ஸ்

- TRAFFIC TICKETS
- ACCIDENT CLAIMS
- IMMIGRATION

சம்பந்தப்பட்ட சேவைகளுக்கு அழையுங்கள்

2425 Eglinton Ave. East, Suite 212
(Kennedy & Eglinton)

416 757-7707 • 416 537-7737
Fax: 416 757-7709

இதழ்: 09 15 ஜூலை 2002 விலை: 1.25 டொலர் மலர்: 32

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: எஸ்.எஸ்.குகநாதன் கனடா பதிப்பு: பரமேஸ்வரன்

பல் வைத்தியர்கள்

DR. ILLANGO & ASSOCIATES

Dr. இளங்கோ
Dr. இரவீந்திரன்
Dr. ஜானகி
Dr. பத்மா

SCARBOROUGH (416) 292-7004
MISSISSAUGA (905) 270-7844

27 NOV 2002

குரு பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

வை.கோ.வைக் கைது செய்த பொடோ சட்டம்

தமிழீழ, ஸ்ரீலங்கா செய்தி சினிமா - வார பலன்

# வடகடலில் புலிகளின் படகு மீது கடற்படை துப்பாக்கிச்சூடு

## அவசரத்தில் புலிகள் மீது குற்றம் சுமத்தும் கண்காணிப்புக்குழுத் தலைவர்



நோர்வேயின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் நடைபெற்று வருகின்ற இலங்கைத்தீவுக்கான சமாதான முயற்சிகளைப் பாதித்து நிலைமைகளைச் சீர்குலைக்கக் கூடிய மிகமிகப் பாரதூரமான சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் அதாவது 13ம்திகதி சனிக்கிழமை மன்னார் வளைகுடாவிற்கு வடமேற்கே இரணைதீவிற்குத் தெற்காக உள்ள கடற்பரப்பில் இடம் பெற்றுள்ளது.

கடந்த பெப்ரவரி 23ம் திகதி முதல் நடைமுறையில் இருக்கின்ற யுத்தநிறுத்தத்தையே குழப்பும் சதித் திட்டத்துடன் மாத்திரமல்லாது அவ்வாறு குழப்பப்பட்டதற்கான பழியை விடுதலைப்புலிகள் மீது சுமத்தும் சதி நோக்குடன் நன்கு திட்டமிட்டு ஸ்ரீலங்கா கடற்படை தொடர்ச்சியாக தமிழீழக் கடற்பரப்பில் வலுச் சண்டைக்கு இழுக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் ஆசீர்வாதத்துடனும் அங்கீகாரத்துடனும் கடற்படையினரின் ஒரு சாரார் திட்டமிட்ட முறையில் யுத்த நிறுத்தத்தைக் குழப்ப முற்படும் அயோக்கியத்தனத்தைப் சரி வர உணராமல் கொழும்புத் தரப்பின் பிரச்சார ஊதுகுழல்களும் ஒரு சில பாதுகாப்பு அதிகாரிகளும் வழங்குகின்ற செய்திகளை ஆற அமர ஆராயாது அதனை உண்மை என்று எண்ணி கண்காணிப்புக் குழுவினரும் நடந்து முடியும் சம்பவங்களை புலிகள் மீது பழியைப் போட்டு வருவது வேதனைக்குரியது. அவ்வாறான ஒரு சம்பவமே (4ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளின் படகுகள் மீது ஸ்ரீலங்கா கடற்படை துப்பாக்கிச் சூடு

## அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் செயல் என தமிழ்ச்செல்வன் கடிதம்!

இரணைதீவு கடற் சம்பவத்தில் கடற்படை தான் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறியது. எங்கள் ட்றோலரில் சட்டவிரோதமான ஆயுதங்கள் எதுவும் இல்லை என்று தெரிந்து கொண்ட பின்னரும் கடற்படையினர் ட்றோலரை நோக்கிச் சுட்டனர். அதுவும் கண்காணிப்புக்குழுவினர் இருவர் ட்றோலரில் இருக்கிறார்கள் என்பது தெரிந்திருந்தும் கூட. அத்துடன் ட்றோலரை காங்கேசன்துறைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தனர். மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கொழும்பிலுள்ள கண் காணிப்புக்குழுத் தலைமையகத்திற்கு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ள தாவது இரணைதீவுக்கடலில் 13.07.2002 இடம்பெற்ற மோதல் வகையான சம்பவம் தொடர்பாக தங்களின் உடன் கவனத்தைக் கோருகிறேன். இரணைதீவுக் கடலில் மீன் பிடியில் ஈடுபட்டிருந்த எங்கள் ட்றோலர்களில் ஒன்று ஐந்து மணியளவில் இரணைதீவு குடாவுக்குள் நுழைந்த சமயம் ஸ்ரீலங்கா கடற்படையின் இரண்டு டோரா படகுகளை ட்றோலரின் மாலுமிகள் கண்டனர். (4ம் பக்கம் பார்க்க)



# இராணுவத்தை விட்டு தப்பியோடியோர் 35,000 பேர்

சமீபத்திய வருடங்களில் இராணுவத்தை விட்டு சுமார் 35ஆயிரம்பேர் ஓடியிருக்கின்றார்கள். இது இராணுவத்தின் மொத்த பலத்தில் கால்வாசியாகும். இராணுவ ஆய்வாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றார். பிரிவினைப் போர் ஆரம்பமான பின்னர் இராணுவத்தை விட்டு விலகி ஓடியோரின் எண்ணிக்கை சுமார் 50ஆயிரத்தை எட்டும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ கூறியிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருக்கும் இந்தக் காலகட்டத்தில் கூட இராணுவத்தில் இணைய இளைஞர்கள் ஆர்வம் காட்டவில்லை. இராணுவத்தில் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த மே மாதம் 8ம் திகதி முதல் ஜூன் 30ம்திகதி வரை 54 நாட்கள் இராணுவத்திற்கு புதிதாக ஆட்திரட்டும் முயற்சி எடுக்கப்பட்டது. குறைந்து 5000 பேரைத் திரட்டலாம் என்ற எதிர்பார்ப்புடன் தான் இந்த முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. ஆனல் 470 பேரே இணைந்தனர்.

# வை.கோ.வை விடுவிக்க வேண்டும்

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்அறிக்கை

ஈழத்தமிழருக்காக குரல் கொடுத்த குற்றத்திற்காக இன்று சிறையில் வாடும் எமது உடன்பிறப்பான வை.கோவுக்கு எமது முழு ஆதரவை வழங்குவதோடு அவரை உடன்விடுதலை செய்ய வேண்டும் என்று கோருகின்றோம். யாழ்.பல்கலைக்கழக ஒன்றியம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. வை.கோ. கைது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது தமிழீழ மக்களின் விடுதலைப்போராட்டத்திற்காக குரல் கொடுத்து வந்த வை.கோபால்சாமி தமிழ நாட்டில் பேய் ஆட்சி செய்யும் ஜெயலலிதாவின் அரசினால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை ஒட்டு மொத்த தமிழ்இனத்தாலுமே இன்று வன்மையாகக் (இம் பக்கம் பார்க்க)

வாகன விபத்தா?
இலவச ஆலோசனை

வாகன விபத்துக்கள் பற்றிய முழுமையான இலவச ஆலோசனைகளைத் தமிழில் அளித்திடும் ஒரே நிறுவனம்

நீண்ட காலமாக ஒரே இடத்தில் இயங்கும் நிறுவனம்

Tel: (416) 631-6464
(416) 630-7788
Fax: (416) 631-9703

- சம்பள இழப்பீடுகள்
- வணிக இழப்பீடுகள்
- எதிர்கால சம்பள இழப்பீடுகள்
- கல்விக்கான இழப்பீடுகள்
- மறுதொழில் பயிற்சித்தல்
- சட்ட உரிமைகள்
- வீட்டுப் பராமரிப்புச் செலவுகள்
- குழந்தைகள் பராமரிப்புச் செலவுகள்
- சிறப்பு மருத்துவச் செலவுகள்

தொடர்புகளுக்கு:
KILLY & BALA
1110-A Wilson Ave., Suite 211, Downsview, ON M3M 1G7

THE INSURANCE CLAIMS SPECIALISTS

**ஈழநாடு வாசகர்கள், வர்த்தகர்கள் விளம்பரம் செய்வோர் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கும்.

பிறந்தநாள், மரணஅறிவித்தல்கள், நினைவஞ்சலிகள் மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டும் ஞாயிறு இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சமூகநல விளம்பரங்கள் சனிக்கிழமை மாலை 6.30 மணி வரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். தங்கள் ஆதரவிற்கு நன்றி

**வாசகர்களே! விளம்பரதாரர்களே!**

ஈழநாட்டில் விளம்பரம், அறிவித்தல்கள் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் உங்கள் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம்.

SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

A.R.K.MARKET
31 - 35 ST.DENNIS DRIVE
(DONMILLS / EGLINTON)

DAILY NEEDS
2537A PHARMACY AVE
(FINCH / PHARMACY)

JAFFNA SUPER STORES
1221 MARKHAM RD # 14
(MARKHAM / EELESMERE)

KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

AGP MART
4A WADE AVE
TORONTO

UTHAYA'S SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

**மிஸிசாகா:**

THARSHNA'S SUPER MARKET
27 DUNDAS ST EAST
MISSISSAUGA

**மொன்றியல்:**

MARCHE THURGA
444 JEANTALON WEST
(514) 276 - 9262

**மேலதிக தொடர்புகளுக்கு:
பரமேஸ்: (416)266 - 9919**

**வாசகர்களின் கவனத்திற்கு!**

ஈழநாட்டில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்களும் ஐரோப்பிய மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் வெளியாகும் பதிப்புக்களிலும் இடம் பெறும் என்பதையும் ஐரோப்பிய வானொலியில் உடனுக்குடன் இலவசமாக ஒலிபரப்பாகும் என்பதையும் அறியத் தருகின்றோம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளவும். (905) 653 - 3000 (416) 266 - 9919


# சர்ச்சைக்குரிய பிரதேசங்களில் ஹர்த்தல் நடத்துவதற்கு தடை

மோதல்களுக்கு வழி வகுக்கக்கூடிய பிரதேசங்களில் ஹர்த்தால்கள் நடத்துவதை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

அப்பிரதேசங்களில் சமூகத் தலைவர்களின் ஒத்துழைப்புடன் நல்லெண்ண நடவடிக்கைகளை எடுக்கக் கண்காணிப்புக்குழுவினர் கோரப்பட்டிருக்கின்றனர். வாழைச்சேனைப்பகுதியில் கண் காணிப்புக்குழு அலுவலகம் ஒன்றைத் திறக்கவும் கோரப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நாடாளுமன்றத்தில் 12ம்திகதி வெள்ளிக்கிழமை இவற்றை அறிவித்தார். கிழக்கு மாகாணச் சம்பவங்கள் தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை விடுத்து, அமைச்சர் சபையில் உரையாற்றினார். வாழைச்சேனைப் பகுதியில் ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்ய மூவர் கொண்ட குழு ஒன்றை அரசாங்கம் நியமிக்கும் என்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் வாழைச்சேனை நகரைப் புனரமைக்க அரசு தீர்மானித்திருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

மூதூர், வாழைச்சேனைக கலவரங்களில் ஆறு முஸ்லிம்களும், மூன்று தமிழர்களும் கொல்லப்பட்டனர். 56 முஸ்லிம்களும் 25 தமிழர்களும் காயமடைந்தனர் என்றும் தெரிவித்த அவர் பொலிசார் பாரபட்சமாக நடந்து கொண்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இதனை உடனடியாக விசாரணை செய்ய பிரதிப்பொலிஸ்மாஅதிபர் ஆனந்தராஜாவை மட்டக்களப்புக்கு அனுப்பினோம்.

அத்துடன் உண்மையான குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்காக குற்றப் புலனாய்வுப் பொலிசார் விசாரணையில் ஈடுபட்டிருக்கிறார்கள் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# விடுதலைப்புலிகள் மீதான தடையை அரசு நீக்கியதும் பொ.ஜ.முன்னணி, ஜே.வி.பி. யுடன் பேசுவோம் என்கிறார் தமிழ்ச்செல்வன்

விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்பட்டதும் பொ.ஜ.முன்னணி, ஜே.வி.பி., சிஹல உறுமய உட்பட தென்னிலங்கை அரசியல் கட்சிகளுடன் பேச நடவடிக்கை எடுப்போம்.

விடுதலைப்புலிகள் இயக்க அரசியல் துறைப் பொறுப்பாளரான தமிழ்ச்செல்வன் கடந்த புதன்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்ற ஒரு சந்திப்பின் போது இதைக்கூறிய அவர்

தென்னிலங்கை அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்துவதால் இனப்பிரச்சனையைத் தீர்க்க நிரந்தர அரசியல் தீர்வைக்காண முடியும் என்ற நம்பிக்கையை விடுதலைப்புலிகள் இயக்கம் கொண்டிருக்கிறது என்றும் சொன்னார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் முற்றாக நிறைவேற்றப்பட்டவுடன் இரு தரப்பினரும் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும். எவ்வாறாயினும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் திகதியை அரசே தீர்மானிக்க வேண்டும் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பணிமனை ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணிக்கு நெடுந்தீவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்கு அருகில் உள்ள கட்டிடம் ஒன்றில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பிரமுகர்கள் பலரும் உரையாற்றினர். இரவு மகா வித்தியாலய மண்டபத்தில் சமாதானச் சூழலை வலியுறுத்தும் இன்னிசை நிகழ்ச்சி ஒன்றும் இடம்பெற்றது. நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# எமது உறுப்பினர்கள் இனிக் கைதானால் பதில் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் திருமலை மாவட்ட தளபதி பதுமன் எச்சரிக்கை

எமது உறுப்பினர்கள் இனிக் கைது செய்யப்பட்டால் சூழ்நிலைக்கு தகுந்தவாறு பதில் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டி நேரிடும் என்று விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட தளபதி பதுமன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நடந்த கண்காணிப்புக்குழுவுடனான உயர்மட்ட சந்திப்பில் அவர் இப்படித் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரொண்ட் புருகோவிட், சமாதானச் செயலணியைச் சேர்ந்த கலாநிதி குணவர்த்தனா, விங் கொமாண்டர் விக்கிரமசிங்க, விடுதலைப்புலிகளின் தரப்பில் தளபதி பதுமன், புலித்தேவன், திலக் ஆகியோர் கலந்து கொண்டனர். சம்பூரில் ஒன்றரை மணி நேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் மூதூரில் நடந்த சம்பவங்கள், விடுதலைப்புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்ட சம்பவங்கள் ஆகியன தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

இதுவரை தமது தரப்பில் 8 போராளிகள் கிழக்கில் கைது செய்யப்பட்டதாகவும் எம்மை ஆத்திரமூட்டும் வகையில் இந்த நடவடிக்கைகள் அமைகின்றன என்றும் எனவே எமது போராளிகள் கைது செய்யப்படுவதை நிறுத்த வேண்டும் என்றும் தளபதி பதுமன் அங்கு தெரிவித்தார்.

இலங்கை அரசிடம் இது தொடர்பான உறுதியை பெற்றுத்தர வேண்டும் என்று தளபதி பதுமன் கண்காணிப்புக் குழுவினரிடம் மேலும் கேட்டுக் கொண்டார்.

# சகாவைச் சுட்டுக் கொன்ற சிப்பாய் பின்னர் தற்கொலை!

காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலைப் பகுதியில் பணியாற்றிய சிப்பாய் ஒருவர் சக சிப்பாயைச் சுட்டுக் கொலை செய்து விட்டு பின்னர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளார். இந்தச் சம்பவம் 11ம்திகதி இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

நான்காவது படைப்பிரிவைச் சேர்ந்த ரணசிங்க ஆராட்சிலாகே சுமித் சமரசிங்க (வயது 28) சிப்பாய் தன்னுடன் பணியில் இருந்த சிப்பாயான உம்கம்ப தேவயலாகே குணசிறி (வயது 29) என்பவரைச் சுட்டுக் கொலை செய்ததாகவும் தன்னைத் தானே சுட்டார்.


**ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்**



தொடர்புகளுக்கு: **சுவாமி சோமேஸ்வரக் குருக்கள்**
(பிரதம குருக்கள், தலைவர், ஜோதிடர், திருமணப் பதிவாளர்)

3057 Universal Drive, Mississauga, ON L4X2E2
TEL: (905) 602-2068/629-2050 FAX: (905) 629-4428

**பூசை நேரம்**
காலை 8.00 மணி
பகல் 12.00 மணி
மாலை 7.00 மணி
செவ்வாய் - வெள்ளி
மாலை 7.30 மணி

Website:
www.homestead.com/smma/temple.html

**கோயில் திறந்திருக்கும் நேரம்**
காலை 7.00 முதல்- 01.00 வரை
மாலை 6.00 முதல்- 9.00 வரை
விசேட நாட்களில் நேரங்கள் மாற்றியமைக்கப்படும்

# ஈழநாடு

EEZHANADU
P.O.BOX 878
STATION 'Q'
TORONTO - ONT
CANADA - M4T 2N7

**தொலைபேசி:**
**(905) 653 - 3000**
**(416) 266 - 9919**
**(416) 528 - 1867**
**தொலைநகல்:**
**(905) 653 - 4031**
**தலைமையகம்:**
EEZHANADU
19 BD DE LA CHAPELLE
FRANCE
TEL: (1) 53 26 59 21

**பிரதம நிர்வாகி:**
**எஸ்.பாலச்சந்திரன்**

**பிரதம ஆசிரியர்:**
**எஸ்.எஸ்.குகநாதன்**

**கனடா பதிப்பு:**
**பிரதம ஆசிரியர்**
T.K.பரமேஸ்வரன்

**சுவிஸ்சர்லாந்து**
EELANADU
POST FACH 60
CH 4302 AUGST
ABO CHF 130
TEL: 061 /813 1552

**ஜேர்மனி**
EELANADU
GROLITZE STR 6
41460 NEUSS
TEL: 02131 / 101748

**அவுஸ்திரேலியா**
EELANADU
170 HOTHLYN DRIVE
CRAIGLEBURN
VICTORIO 3064
TEL: (03) 3056246

**லண்டன்**
EELANADU
38 MOFFAT ROAD
LONDON - U.K
SW 177 EZ


ஈழநாட்டில்பிரசுரமாகும் அனைத்து விடயங்களும் முன் அனுமதியின்றி மீள் பிரசுரம் செய்ய முடியாது.

# புலிகள் மீதான தடை தொடர்ந்தாலும் சமாதான முயற்சிகளுக்கு ஆலோசனை வழங்கப்படும் என்கிறார் இந்திய வெளியுறவு அமைச்சர் சின்ஹா

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த்சின்ஹா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்தார். தற்போதைய சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பாக பிரதமர் ஜஸ்வந்த்சின்ஹாவுக்கு விளக்கமளித்தார்.

இந்தியாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடை தொடர்ந்து இருக்கும். அந்தத் தடை இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சியை எந்தவகையிலும் பாதிக்காது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா தெரிவித்தார்.

இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்ப முன் இந்தியச் செய்தியாளருக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார். இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான நடவடிக்கைகளுக்குத் தேவை ஏற்பட்டால் இந்தியா ஆலோசனைகள் வழங்கும்.

இனப்பிரச்சனை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சனை. அதை உள்நாட்டிலேயே தீர்க்க வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பமும் நிலைப்பாடுமாகும். பேச்சுமூலம் தீர்வு காணும் முயற்சிகளை இலங்கை தொடர வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார். சமாதான முயற்சிகளில் இந்தியாவின் பங்களிப்பு தொடர்பாக ஜனாதிபதி எடுத்துக் கூறினார். பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கும் அவசியம் குறித்து சின்ஹா எடுத்துக் கூறினார்.

# தம்மைப் பதவி விலக்க முடியாது என்கிறார் ஜனாதிபதி

குற்றவிசாரணைப் பிரேரணை ஒன்றின் மூலம் தம்மைப் பதவி விலக்குவதற்கு அளும் ஐக்கிய முன்னணி அரசு எடுத்திருக்கும் முயற்சிகளை எதிர்கொள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயார் என்றும் தமக்கு எதிராக குற்றவிசாரணைப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு அடிப்படை ஏதும் இல்லை என்றும் ஜனாதிபதி குமாரதுங்க கருதுகின்றார் என்றும் ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம்பீரிஸ் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தகவல் வெளியிட்டார். ஐ.தே.முன்னணி அரசின் அதிகாரத்தை நீக்குவதற்கான அரசமைப்புத் திருத்தங்களைச் செய்வதற்கு அரசு தரப்பு தயாராகி வருவதும் குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதியின் செயலகத்துக்கென 240 கோடி ரூபா செலவில் சொகுசு வாகனங்கள் கொள்வனவில் ஊழல் இடம்பெற்றதாகத் தெரிவித்து. அதனுடன் ஜனாதிபதியைத் தொடர்புபடுத்தி அரசுத்தரப்பில் ஊழல் இடம்பெற்றதாகத் தெரிவித்து அதனுடன்



ஜனாதிபதியைத் தொடர்புபடுத்தி அரசுத்தரப்பில் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை ஜனாதிபதியின் பேச்சாளர் அடியோடு நிராகரித்தார். பாதுகாப்பு விவகாரங்களுக்காக 2000 மற்றும் 2001 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்த வாகனங்கள் வாங்கப்பட்டன. என்று அவர் சொன்னார்.

அந்த நேரத்தில் ஜனாதிபதிக்கும் அவரது மூத்த அமைச்சர்களுக்கும் புலிகளினால் அதிகளவு உயிராபத்து நிலவியது. இதனால் இந்த வாகனங்களை கொள்வனவு செய்யப்பட்டன. 2000 டிசம்பரில் கொழும்பில் ஜனாதிபதியின் உயிருக்கு உலை வைக்கும் தற்கொலைத் தாக்குதல் நடந்த சமயம் ஜனாதிபதியைக் காப்பாற்றியது இடைநடுவில் நின்ற இந்த வாகனங்களுள் ஒன்று தான் என்றார் ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ்.

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் இடம்பெற்ற கலவரங்கள் குறித்து ஜனாதிபதி ஆழ்ந்த கவலையுற்றிருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதியின் பேச்சாளர் மக்களை அச்சுறுத்திப் பணம் பறிக்கும் நடவடிக்கையில் பெரிய அளவில் புலிகள் ஈடுபட்டதே இக் கலவரங்களுக்குக் காரணம் என்றும் இது முழுஅமைதி முயற்சியையுமே பின்னடைய வைத்துவிடும் என ஜனாதிபதி கருதுவதாகவும் குறிப்பிட்டார்.

# கலவரங்களின் பின்னணியில் தீயசக்திகளின் சதி என்கிறார் கருணா

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் இடம்பெற்ற கலவரங்கள், வன்முறைச் சம்பவங்கள் என்பவற்றின் பின்னணியில் சில தீய சக்திகள் தீவிரமாகச் செயற்பட்டுள்ளன. முஸ்லிம் சமூகத்தில் உள்ள சில தீவிரவாதிகளும் இராணுவத்துக்கு அடிவருடிகளாகச் செயற்படும் சில தமிழ்த் தரப்பினருமே இவற்றில் சம்பந்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கருணா. கொக்கட்டிச்சோலைக்கு விஜயம் செய்தகண்காணிப்புக்குழுத் தலைவர் ரொன்ட்புரு கோவிட் டுடன் நடத்திய பேச்சுக்களின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது கருணா மேலும் தெரிவித்ததாவது தமிழ் - முஸ்லிம் மக்களிடையே உறவுகளைப் பலப்படுத்தி அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு விடுதலைப்புலிகள் உத்தரவாதம் அளித்துள்ளனர். எனவே இரு இன மக்களும் தீயசக்திகளின் செயலுக்குத் துணை போகக் கூடாது என்றார்.

பொலிஸ் காவலரண்களுக்கு மத்தியில் உள்ள வர்த்தக நிலையங்களே கலவரத்தின் போது தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த போராளிகள் அவர்களது குடும்பங்களைச் சந்திக்க விரும்புகின்றனர். எனவே அவர்களுக்கான கடல்வழிப் போக்குவரத்தை ஆரம்பிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கருணா கண்காணிப்புக் குழுவிடம் கேட்டுக் கொண்டார்.

இந்தச் சந்திப்பின் போது இரு இனங்களிடையேயான சமாதானத்தை வலுப்படுத்தும் நோக்குடன் இரு இனங்களையும் சேர்ந்த தலா 15 பேர்களைக் கொண்ட நட்புறவுக் குழுக்களை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## டியூசனுக்கு ஆள் தேவை

Woodbridge பகுதியில் முதலாம் வகுப்பு முதல் 7ம் வகுப்பு வரையான மாணவர்களுக்கு ஒரே இடத்தில் (பத்து மாணவர்கள்)வந்து வாரத்தில் மூன்று நாட்கள் டியூசன் சொல்லிக் கொடுப்பதற்கு ஆள் தேவை. பல்கலைக்கழக மாணவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு (905) 653 - 3000

# விடுதலைப்புலி ஆதரவு தொடரும் ஜெயலலிதாவின் மிரட்டலுக்கு அஞ்ச மாட்டேன் என்கிறார் ராமதாஸ்

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆதரவுக்காக பொடோ சட்டம் பாயும் என்ற தமிழகமுதல்வர் ஜெயலலிதாவின் எந்த மிரட்டலுக்கும் அஞ்சுபவன் அல்ல என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கூறினார். வேலூருக்கு அருகே செய்தியாளர்களுக்கு டாக்டர் ராமதாஸ் அளித்த பேட்டியொன்றில்

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆதரவுக்காக பொடோ சட்டம் பாயும் என்ற முதல்வர் ஜெயலலிதாவின் எந்த மிரட்டலுக்கும் அஞ்சுபவன் அல்ல. ம.தி.மு.க. பதிவு செய்யப்பட்ட தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி. அதை தடை செய்ய மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என சட்ட வல்லுனர்கள் கூறுகின்றனர். ம.தி.மு.க. தடை செய்யப்பட்டால் அதை எதிர்ப்போம். பொடோ சட்டத்தை எதிர்த்து சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கும் எண்ணம் பா.ம.க.வுக்கு இல்லை.

சட்டம் எங்கே? ஒழுங்கு எங்கே? தமிழகத்தில் இருக்கிறது. தமிழகத்தில் கொலை, கொள்ளை கற்பழிப்புச் சம்பவங்கள் நடந்து வருகின்றன. அவற்றில் ஜெயலலிதா கவனம் செலுத்தவில்லை. கள்ளத் துப்பாக்கிகள், நாட்டு வெடிகுண்டுகள் இளைஞர்கள் கையில் கிட்டாத அளவில் அரசு கவனம் செலுத்தலாம் என்றார் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர்.




R ROYAL ACCIDENT BENEFITS

To claim proper compensation for your damages, wage loss and all insurance benefits you are legally entitled to.

"We Fight For Your Right"

நீங்கள் வாகன விபத்துக்களினால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா?
இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்!
வாகன விபத்தால் பாதிப்பானவர்களுக்குரிய
- உரிமைகள்
- நன்மைகள்
- பாதுகாப்புகள்

உங்களுக்குரிய
- தற்போதைய / எதிர்காலச் சம்பள இழப்புகள்
- கல்வி /வணிக இழப்புகள்
- வீட்டு /குழந்தைப் பராமரிப்புச் செலவுகள்
- மருத்துவ வசதிகள்

போன்றவற்றை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள அழையுங்கள்
குமார்

Call: KUMAR
TEL: (416) 283-8000
FAX: (416) 283-3567
1200 Markham Road, Suite 105
Scarborough, ON M1H 3C3
(Markham & Ellesmere)


# விடுதலைப்புலிகளின் படகுகள் மீது ஸ்ரீலங்கா கடற்படை துப்பாக்கிச் சூடு அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் செயல் என தமிழ்ச்செல்வன் கடிதம்!

இரணைதீவு கடற் சம்பவத்தில் கடற்படை தான் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறியது. எங்கள் ட்றோலரில் சட்டவிரோதமான ஆயுதங்கள் எதுவும் இல்லை என்று தெரிந்து கொண்ட பின்னரும் கடற்படையினர் ட்றோலரை நோக்கிச் சுட்டனர். அதுவும் கண்காணிப்புக்குழுவினர் இருவர் ட்றோலரில் இருக்கிறார்கள் என்பது தெரிந்திருந்தும் கூட. அத்துடன் ட்றோலரை காங்கேசன்துறைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தனர். மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கொழும்பிலுள்ள கண்காணிப்புக்குழுத் தலைமையகத்திற்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது இரணைதீவுக்கடலில் 13.07.2002 இடம்பெற்ற மோதல் வகையான சம்பவம் தொடர்பாக தங்களின் உடன் கவனத்தைக் கோருகிறேன். இரணைதீவுக் கடலில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த எங்கள் ட்றோலர்களில் ஒன்று ஐந்து மணியளவில் இரணைதீவு குடாவுக்குள் நுழைந்த சமயம் ஸ்ரீலங்கா கடற்படையின் இரண்டு டோரா படகுகளை ட்றோலரின் மாலுமிகள் கண்டனர். திடீரென அதிலிருந்த படையினர் ட்றோலரின் திசை நோக்கி சுடத் தொடங்கினர். இதனால் அது சேதமடைந்தது. கரையிலிருந்த கடற்புலிகளின் பிராந்தியத் தளபதி உடனடியாக சம்பந்தப்பட்ட றோடாவுக்கு பொறுப்பான தளபதியுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியதோடு ட்றோலரை நோக்கிச் சென்றார். என்ன நடந்தது என்பது குறித்து ட்றோலர் மாலுமிகளிடம் விசாரித்து அறிந்த அவர் பின்னர் தமது படகுடன் கடற்படை றோடாவை நோக்கிச் சென்றார். கண்காணிப்புக்குழுவின் கொடியுடன் காணப்பட்ட அந்த டோராவை நெருங்கியதும் கண்காணிப்புக்குழு உறுப்பினர் இருவர் அதில் இருப்பதைக் அவர் கண்டார்.

அவர்களின் முன்னிலையில் தேவைப்பட்டால் எமது ட்றோலரை கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுடன் கடற்படையினர் வந்து சோதனையிடுவதற்கு அனுமதி வழங்க எங்கள் பிராந்தியத் தளபதி தானாக முன் வந்து அனுமதி அளித்தார். அதன்படி கண்காணிப்புக்குழு உறுப்பினர்களும் கடற படை அதிகாரிகளும் எமது ட்றோலரை ஒரு மணி நேரம் சோதனையிட்டனர். தாங்கள் சட்டவிரோதமெனக் கருதும் எதுவும் அதில் இல்லை என அறிவித்தனர்.

இந்நிலையில் ட்றோலரை மேற்கொண்டு செல்வதற்கு அனுமதிக்கலாம் என்று கண்காணிப்புக்குழு உறுப்பினர் ஒருவர் கூறினார். கடற்படையினரும் அதற்கு ஒத்திசைந்தனர். ஆனால் திடீரென கடற்படை அதிகாரி ஒருவர் ட்றோலரை காங்கேசன்துறைக்குக் கொண்டு செல்லும்படி தனக்கு



தலைமையகத்தில் இருந்து உத்தரவு வந்திருப்பதாகக் கூறினார். இந்நிலையில் பத்து கடல் மைல் தொலைவுகளுக்கு உட்பட்ட எமது கடற்பாதைக்குள் எங்களுடைய ட்றோலர் இருப்பதால் அது யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறிய செயல் அல்ல என்பதை எமது பிராந்தியத்தளபதி விளக்கினார்.

இந்த விவகாரம் நடந்து கொண்டிருக்கையில் கண்காணிப்புக்குழுவின் கொடியுடன் இருந்த கடற்படையின் றோடாவும் மற்றைய இரு டோராக்களும் எமது ட்றோலரைச் சுற்றி வட்டமிட்டன. எமது ட்றோலரில் இருந்த மூன்று கடற்படையினரும் கடலில் பாய்ந்து தங்களது படககளை எட்டுவதற்காக அவற்றை நோக்கி நீந்தத் தொடங்கினர். கடற்படையினரின் மூன்று படகுகளுமாகச் சேர்ந்து எமது ட்றோலரைத் தொடர்ந்து இடித்த வண்ணம் இருந்ததால் ஏற்படக்கூடிய ஆபத்தை உணர்ந்து கொண்ட எமது பிராந்தியத் தளபதி ட்றோலரை கரைக்குக் கொண்டு செல்ல முடிவு செய்தார்.

கண்காணிப்புக்குழு உறுப்பினர்களுக்கு அவர்களது பாதுகாப்புக்கு உறுதி வழங்கப்பட்டதோடு அவர்கள் கரைக்குக் கொண்டு வரப்பட்டனர். இந்தத் தகவல் கண்காணிப்புக்குழுவின் தலைமையகத்திற்கும் அதன் கிளிநொச்சி அலுவலகத்துக்கும் தெரிவிக்கப்பட்டதோடு அவர்கள் கண்காணிப்புக்குழு வாகனத்திலேயே ஏற்றப்பட்டனர்.

கண்காணிப்புக்குழுக் கொடி மற்றும் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் இருவர் இருந்தபோது நடந்த பின்வரும் சம்பவங்கள் பாரதூரமான யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறல் என்று நாம் கருதுகின்றோம்.

(1)கண்காணிப்புக்குழுவினருடன் ட்றோலரில் சோதனை நடத்தி அங்கே சட்ட விரோதமான பொருள் ஏதும் இருக்கவில்லை என்று கண்டு கொண்டும் கூட ஸ்ரீலங்கா கடற்படையினர் ட்றோலரைக் காங்கேசன்துறைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தனர். அதுவும் கண்காணிப்புக்குழுவினரும் ட்றோலரில் சட்டவிரோதமான பொருள் எதுவும் இல்லை என்று கூறிய பின்னரும் கடற்படையினர் அப்படி நடந்து கொண்டனர்.

கண்காணிப்புக்குழுவினரின் தொடர்பு சாதனங்கள் இயங்கவில்லை. அதனால் அவர்கள் தமக்குத் தரப்பட்ட தகவலின் அடிப்படையிலேயே நடக்க வேண்டியிருந்தது. அரசியல் தலைமையகத்தில் புலித்தேவன். ட்றோலர் காங்கேசன்துறைக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு சம்மதம் தெரிவித்து விட்டார் என்று ஒரு கட்டத்தில் கண்காணிப்புக்குழுவினருக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அப்படி அவர் சம்மதம் தெரிவிக்கவில்லை.

(2) கடற்படையினர் மூவர் கடலில் பாய்ந்து கடற்படையின் றோடா படகில் ஏறிக் கொண்டதும் அவர்களில் ஒருவர். எங்களுடைய ட்றோலரில் கண்காணிப்பு குழுவினர் இருவர் இருக்கிறார்கள் என்று தெரிந்ததும் ட்றோலரை நோக்கிச் சுட்டார்.

(3) எதுவிதமான தூண்டுதலும் இல்லாமலே ஸ்ரீலங்கா கடற்படையினர் சுட்டனர். மேலும் ஒரு விடயத்தை தங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம். பத்து கடல் மைல் தூரம் எங்கள் பாவனைக்குரிய பாதை என்பதை நாங்கள் உங்களுக்குத் தெளிவு படுத்தியிருக்கின்றோம். அந்தப் பாதைக்கு அப்பால் கடற்படையினர் நிற்க வேண்டும் என்றும் திரும்பத் திரும்ப கேட்டிருக்கிறோம். அப்படியிருந்தும் இலங்கை கடற்படை எங்கள் போக்குவரத்துப் பாதைக்குள் ஊடுருவி எங்களை வலுச் சண்டைக்குத் தூண்டி வருகிறது.

தயவு செய்து இது பாரிய யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறல் சம்பவம் என்பதையும் யுத்தநிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளை முறியடிக்கும் நடவடிக்கை என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றும் தமிழ்ச்செல்வன் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## வடகடலில் புலிகளின் படகு மீது சூடு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஒரு சம்பவமே கடந்த 13ம்திகதி யூலை மாதம் இரணை தீவுக் கடற்பரப்பில் இடம்பெற்றது. இது பற்றிய விபரம் வருமாறு

மன்னார் வளை குடாவிற்குத் வடமேற்கே இரணைதீவிற்குத் தெற்காக விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான இரண்டு ட்றோலர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று மாலை 5.45 மணியளவில் இரணைதீவு நோக்கி கரை திரும்பிக் கொண்டிருக்கையில் இரண்டு றோடா படகுகளில் வந்த கடற்படையினர் ட்றோலரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் ட்றோலர் சேதமடைந்தது.

இச்சம்பவத்தினால் ஏற்படப் போகும் பாரதூரத்தன்மையைப் புரிந்து கொண்ட விடுதலைப்புலிகள் கரையில் உள்ள தமது உயர்பீடத்துடன் தொடர்பு கொண்டனர். கரையில்இருந்த கடற்புலித் தளபதி கடற்படையின் றோடா படகு தளபதியுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினார். அதன்பின் வேறு ஒரு படகில் அவர் டோரா படகினை நோக்கி விரைந்தார்.

அப்போது அந்த றோடா படகில் கண்காணிப்புக்குழுவின் இரு பிரதிநிதிகளும் இருந்தனர். நிலைமையை சமூகமாக முடிக்கும் பொருட்டு தமது ட்றோலரை சோதனை செய்ய கண்காணிப்புக் குழுவினருக்கு விடுதலைப்புலிகள் அனுமதி வழங்கினர்.

கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் ட்றோலரை சோதனையிட்டு அதில் சட்டவிரோத பொருட்கள் இல்லை என்று உறுதிப்படுத்திய பின்னர் கடற்படை ட்றோலரை காங்கேசன்துறை கடற்படை முகாமை நோக்கித் திரும்புமாறு பணித்தது. இதற்கு விடுதலைப்புலிகள் மறுத்தனர். கண்காணிப்புக்குழுவினரும் கடற்படையின் கட்டளைக்குப் பணியுமாறு புலிகளை நிர்ப்பந்தித்தனர்.

1987ம் ஆண்டு தளபதிகள் குமரப்பா. புலேந்திரன் உட்பட 12 வேங்கைகள் பலாலிக்கு கொண்டு செல்லப்பட்டதும் அதன்பின் நடந்த சம்பவங்களும் ட்றோலரில் இருந்த புலிகளுக்கு நினைவுக்கு வந்தன. அதனால் அவர்கள் தமது கன ( ம் பக்கம் பார்க்க)



# யாழ்ப்பாணம் இன்று

சந்திரிகாவின் காலத்தில் யாழ்ப்பாணம் அரசாங்கத்தின் ஷோகேஸ் ஆகவிருந்தது. இப்பொழுது ரணிலின் காலத்தில் குறிப்பாகப் புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பிறகு யாழ்ப்பாணம் ஒரு உல்லாசப் பயணஸ்தலமாக மாறியிருக்கின்றது.

தென்னிலங்கையில் இருந்து சிங்களவர்கள் யாழ்ப்பாணத்தைப் பார்க்க வருகிறார்கள். முதலில் அவர்கள் நயினாதீவுக்குப் போகிறார்கள். பிறகு ஆரியகுளம் சந்தியில் இருக்கும் அடுக்கு மாடிக் கட்டிடத்தில் அல்லது ஏதாவது ஒரு வசதியான படைமுகாமில் சமைத்துச் சாப்பிட்டு ஓய்வெடுத்த பிறகு ஊர் திரும்புகிறார்கள்.

அது மாறி வருகிறது.

அதாவது பல்கலைக்கழகத்திற்குப் போவதை விட வெளிநாட்டுக்குப் போவது மேலானதாக, பாதுகாப்பானதாகக் கருதப்படும் ஒரு நிலை.

முன்பெலாம் யாழ்ப்பாணத்துக்க்கிரிக்கற் அபிமானிகள் குறிப்பாக விடலைப் பருவத்தினர் இந்திய அணியை அல்லது மேற்கிந்திய தீவுகள் அணியைத் தான் ஆதரிப்பது வழமை. ஆனால் இப்பொழுதோவெனில் அவர்கள் அதிகமதிகம் ஸ்ரீலங்கா அணியின் அபிமானிகளாகி வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் புதிதாகக் கட்டிடங்கள்

அதாவது தலைமைத்துவ வெற்றிடம்.

என்றபடியால் தான் இடிபாடுகளை அப்படியே வைத்துக் கொண்டு ஒரு புதிய யாழ்ப்பாணம் கட்டியெழுப்பப்பட்டது. ஒரு தலைமைத்துவம் இருந்தால் ஒரு ஒட்டுமொத்த வேலைத்திட்டம் இருந்திருக்கும். அப்படிப்பட்ட ஒரு வேலைத்திட்டத்தின் கீழ் அழிவுகளையும் இடிபாடுகளையும் அகற்றிய பிறகே புதிய நகர நிர்மாணம் பற்றிச் சிந்திக்கப்பட்டிருக்கும்.

மாறாக தனி மனிதர்கள் தமது வல்லமைக்கு தக்கபடி வீடுகளையும் கட்டிடங்களையும் திருத்துகிறார்கள். அல்லது புதிதாகக் கட்டுகிறார்கள். இதில் திரும்பி வராதவர்களின் வீடுகள் அப்படியே இடிந்து போய்க் கிடக்கின்றன.

மற்றது கிடைத்ததை உடனே அனுபவித்து விடுவது.

அதாவது நிச்சயமற்ற வாழ்வில் சாவதற்கிடையில் எது கிடைக்கிறதோ அதை உடனேயே நுகர்ந்து விடுவது. இது ஒரு வித இராணுவ மனோபாவம் தான். யுத்தம் செய்த எல்லாச் சமூகங்களிலும் இது காணப்பட்டது. குறிப்பாக இளம் விதவையர் பெருகிச் செல்லும் ஒர சமூகப் பின்னணிக்குள் வைத்தும் இதை விளங்கிக் கொள்ள வேண்டும். அநேகமாக விடலைப் பருவத்தினர் மத்தியில் இத்தகைய இச்சைகளைத் தீர்க்கும் போக்கு பரவலாகக் காணப்படும்.

சரியாக அரசியல் மயப்படுத்தப்படாதவிடத்து இலட்சியபூர்வமற்றுப் போகும் விடலைப்



இப்படித்தான் எல்லாவற்றிலும் ஒரு தலைமைத்துவம் அல்லது மைய நிர்வாகம் இல்லாத இடத்தில் தான் கொஸ்மோ பொலிற்றன் மயப்படுவதிலும் லயங்கெட நேரிட்டது.

இதில் ஒன்று நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். நகரங்கள் அவற்றின் வளர்ச்சிப் போக்கில் என்றோ ஒருநாள் கொச்மோ பொலிற்றன் நகரங்களாகின்றன. அதுநிந்தப் பூகோளக் கிராமத்தில் வந்த ஒரு நகரமும் இத்தகைய வளர்ச்சியிலிருந்து விலகிநிற்க முடியாது.

ஆனால் அதேநேரம் எந்தவொரு வளர்ச்சியிலும் லாபம் இருக்க வேண்டும். லயங்கெட்டால் வளர்ச்சி விகாரமாகிவிடும்.

இது தவிர இன்னுமொன்றை முக்கியமாகப் பார்க்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் தற்சயமம் 40.000 துருப்புக்கள் உண்டு. மொத்தச் சனத்தொகையில் சற்றேறக்குறைய பதினைந்தில் ஒரு பங்கு அதாவது யாழ்ப்பாணத்தில் 15 தமிழருக்கு ஒரு சிப்பாய் என்ற விகிதத்தில் துருப்புக்களின் தொகை காணப்படுகிறது. இது ஒரு கணிசமான தொகை. இதுவும் அங்கே சமூக பொருளாதார கலாசார அம்சங்களில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

ஆனால் அவர்களுக்குத் தேவையான மேலதிக மதுவையும் பெண்களையும் அவர்கள் சமூகத்துக்குள்ளிருந்தே பெறுகிறார்கள். இதன்படி பார்த்தால் யாழ்ப்பாணம் இப்பொழுது ஒரு இராணுவக் குடியிருப்பு. அங்கேயுள்ள துருப்புக்களின் தேவையின் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்யும் ஒரு வழங்கல் தளம். இதற்கு லயங்கெட்ட ஒரு கொஸ்மோ பொலிற்றன் பண்பாடு தான் பொருத்தமானது. எனவே அதைப் பேணவே இராணுவம் விரும்பும்.

மற்றது பொதுவாக யுத்தம் என்றாலேயே வாழ்க்கை நிச்சயமற்றதாகி விடும். நிச்சயமின்மையே நிச்சயமாகி எல்லா யுத்தப் பிதேசங்களிலும் பொதுவாக இரண்டு போக்குகள் தலைதூக்கும்.

ஒனஸிறு ஆன்மீகம். மற்றது கிடைத்ததை உடனேயே அனுபவித்துவிடும் இராணுவ மனோபாவம்.

முதலாவது ஆன்மீகம்.

இதில் யுத்தம் செய்யும் ஒரு சமூகம் மரணத்துக்கு மிகவும் நெருக்கமாக வருவதால் மரணத்தைப் பற்றியும் நிலையாமை பற்றியுமான விசாரணைகள் அங்கே அதிகரித்துச் செல்லும் யாழ்ப்பாணத்திலும் யுத்தம் தீவிரமடைய அடைய ஆவிக்குரிய சிறுசபைகளின் வளர்ச்சி அதிகரித்துச் சென்றதை இங்கே குறிப்பிடலாம்.

பருவத்தினர் இத்தகைய போக்கினுள் எளிதில் அள்ளுண்டு போய்விடுவர்.

இத்தகைய நிச்சயமற்ற ஒரு பின்னணியில் தான் தமது பிள்ளைகள் படித்துப் பட்டம் பெறுவதை விட வெளிநாட்டில் உயிரோடு பத்திரமாக இருந்தால் சரி என்ற முடிவை பெற்றோர் எடுக்கிறார்கள். யுத்தம் உள்ள வரை இந்தப் போக்கும் தொடரும்.

இப்படி இந்த எல்லா அம்சங்களும் சேர்ந்துருவாக்கிய புதிய யாழ்ப்பாணம் அதாவது றிவிரசவின் பின்னான யாழ்ப்பாணம் இடிபாடுகளின் நடுவே பகட்டாய் காட்சியளிக்கிறது.

கடந்த சுமார் ஆறு ஆண்டுகளாய் அங்கே நிலவிவரும் தலைமைத்துவம் வெற்றிடம் இன்றுவரை நிரப்பப்படவே இல்லை.

சந்திரிகா அதை தனக்குச் சாதகமாக நிரப்ப முயன்றார். முடியவில்லை. ஸ்ரீதர் தியேட்டரின் வீழ்ச்சி அதைக்கூறும்.

அதே சமயம் ஸ்ரீதர தியேட்டரின் வீழ்ச்சியை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் எழுச்சியாகக் கூறுவோரும் உண்டு. ஆனால் இது சரியானதல்ல. ஏனெனில் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்குப் பின்னால் இருந்த சக்திகள் காரணங்களுக்கூடாகச் சிந்தித்தால் தமிழ்த்தேசிய கூட்டமைப்புங் கூட மேற்படி வெற்றிடத்தை நிரப்பும் நிலையில் இல்லை என்பது தெரியவரும். இந் நிலையில் இடைக்கால நிர்வாகசபை ஒன்று தான் சாத்தியமான ஆகக் குறைந்த பட்ச அடிப்படையாக இருக்கக்கூடும் என்பதை ஈழப்போரின் மெய்நிலை தெரிந்த எவரும் ஒப்புக் கொள்வர். மாறாக இந்த வெற்றிடத்தை நிரப்ப விரும்பாத அல்லது வேறு விதமாக நிரப்ப எத்தணிக்கின்ற எவரும் யுத்த்தை இறுதித் தீர்வாக முன்மொழிபவர்களே.

**"யாழ்ப்பாணத்தில் தற்சயமம் 40.000 துருப்புக்கள் உண்டு. மொத்தச் சனத்தொகையில் சற்றேறக்குறைய பதினைந்தில் ஒரு பங்கு அதாவது யாழ்ப்பாணத்தில் 15 தமிழருக்கு ஒரு சிப்பாய் என்ற விகிதத்தில் துருப்புக்களின் தொகை காணப்படுகிறது. இது ஒரு கணிசமான தொகை. இதுவும் அங்கே சமூக பொருளா தார கலாசார அம்சங்களில் பாரதூர மான பாதிப்பை ஏற்படுத்து கின்றது"**

நாக விகாரைக்கு வரும் யாத்திரிகர்கள் போல அவர்கள் தோன்றினாலும் மெய்யான அர்த்தத்தில் அவர்கள் யாழ்ப்பாணத்தைப் பார்க்க வரும் விடுப்புணர்வு மீதூரப் பெற்ற உல்லாசப் பயணிகளே.

முழுத்தீவையும் ஆட்டிப்படைத்த அந்தக் குட்டிக் குடாநாட்டுக்குள் என்ன தான் புதிர் இருக்கிறது என்று பார்ப்பதே அவர்களின் மெய்யான நோக்கம்.

ஆனால் அவர்களில் அநேகருக்குத் தெரியாது யாழ்ப்பாணத்தின் புதிர் யாழ்ப்பாணத்தவனே என்பது. அவர்கள் அவனுடன் கதைப்பதும் குறைவு. அவனுடைய கதை-களைக் கேட்பதும் குறைவு. பதிலாக அவன்னை விடுப்புப் பார்த்து விட்டு விகாரைகளில் வணங்கிவிட்டு வீடு திரும்புகிறார்கள்.

யாழ்ப்பாணத்தான் எப்போதும் போலவே இப்போதும் ஒரு புதிராக நிற்கிறான்....

இப்படி யாழ்ப்பாணத்தை விடுப்புப் பார்க்கும் சிங்களவரும் அங்கே தமது சொத்துக்களைப் பார்க்க வரும் முஸ்லிம்களும் ஒரு புறம்.

இன்னொருபுறம் யாழ்ப்பாணத்தவரே யாழ்ப்பாணத்தைப் பார்க்கும் விந்தையான காட்சி.

அதாவது றிவிரசவின் அகதியாகி வெளியேறிய யாழ்ப்பாணத்தவரும் புகலிடம் தேடி தூர தேசங்களுக்குப்போன யாழ்ப்பாணத்தவரும் இப்பொழுது ஊரைப் பார்க்க வருகிறார்கள்.

றிவிரசவின் பின் இராணுவத்தின் பிடிக்குள் சிக்கிய யாழ்ப்பாணத்தில் உண்டாகிய மாற்றங்களை மற்றெல்லாரையும் விட அவர்களால் தான் நுட்பமாகவும் கூர்மையாகவும் அவதானிக்க முடிகிறது.

இன்று இப்பத்திரியும் மேற்படி யாழ்ப்பாணத்தைப் பற்றிய தகவல்களின் மீதே வாசகரின் கவனத்தை குவிக்கிறது.

யாழ்ப்பாணத்தைப் பார்த்துவிட்டு வந்த சில பொறுப்பு வாய்ந்த யாழ்ப்பாணத்தவர் கூறிய தகவல்கள் வருமாறு

யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியமே தலைகீழாக மாறி வருகிறது. முன்பெல்லாம் பல்கலைக்கழகத்துக்குப் போக பிள்ளைகளை ஆயத்தம் செய்வதே யாழ்ப்பாணத்துக்குக் கல்விப் பாரம்பரியத்தின் பிரதான இலக்காயிருந்து வந்தது. ஆனால் இப்பொழுதோ பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்ப ஆயத்தம் செய்தால் சரி என்பதாக

எழுந்துள்ளன. பழயனவும் திருத்தப்பட்டுள்ளன. ஆனால் புதிய மற்றும் திருத்தப்பட்டுள்ள கட்டிடங்களின் அருகே சிதைந்த கட்டிடங்கள் வீடுகளின் இடிபாடுகள் அப்படியே அகற்றப்படாது கிடக்கின்றன.

அதாவது இடிபாடுகள் அகற்றப்படாமலே ஒரு புதிய யாழ்ப்பாணம் கட்டியெழுப்பப்பட்டு விட்டது.

யாழ்ப்பாணத்து வாழ்வு மறுபடியும் கோவில் மைய வாழ்வாகி விட்டது. கோயில்களைச் சுற்றிப் பிரச்சனைகள் எழுகின்றன. அவை நீதிமன்றம் வரை போகின்றன. சில சமயம் ஊர்ச்சண்டைகளில் முடிகின்றன.

சண்டித்தனம் நிறுவனமயப்பட்டுள்ளது.

விடலைப் பருவத்தினர் பெரும்பாலும் புலன் வழி செல்வோராகி விட்டனர்.

எமது புதிய ஸ்ரைலோ அதை அப்படியே ஏந்தி எடுப்போராகக் காணப்படுகின்றார்கள்.

மேற்கண்ட தகவல்கள் எல்லாவற்றில் இருந்தும் எமக்கொரு சித்திரம் கிடைக்கிறது. அதன்படி இடிபாடுகளின் நடுவே ஒரு புதிய யாழ்ப்பாணம் கட்டியெழுப்பப்படுகின்றது.

றிவிரசவுக்கு முன்பிருந்த பழைய யாழ்ப்பாணம் இப்பொழுது அநேகமாக இல்லை. அதன் குணம், மணம், ருசி, ரசனை எல்லாமும் மாறி வருகின்றன.

இப்பொழுதுள்ள யாழ்ப்பாணம் தென்னிலங்கையின் கொஸ்கோ பொலிற்றன் கலாசாரத்தின் பலவீனமான தொடர்ச்சி. கொஸ்மோ பொலிற்றன் கலாசாரத்தின் எல்லா நோய் கூறான அம்சங்களையும் அது தன்னுடைய தாக்கிக் கொண்டு விட்டது.

இதெல்லாம் றிவிரச இரண்டின் அது தென்னிலங்கையோடு இணைக்கப்பட்டதிலிருந்து தொடங்கின.

சந்திரிகா அரசு யாழ்ப்பாணத்தைத் தனது ஷோக்கேசாக மாற்றியது. எனவே யாழ்ப்பாணம் தனது நிச்சயமற்ற கடல்வழிகளினூடாக தென்னிலங்கையின் கொஸ்மோ. பொலிற்றன் கலாச்சாரத்துக்குத் திறந்து விடப்பட்டது. இது ஒரு பக்கம்.

இன்னொரு பக்கம் றிவிரச இரண்டின் பின் ஈழப்போரின் நிர்வாகமையம் குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து விட்டது. அப்பொழுதிருந்து உண்டாகிய அரசியல் தலைமைத்துவ வெற்றிடம் இன்று வரை நிரப்பபடவே இல்லை.

இது தான் பிரச்சனை.

# யுத்தம் வெடிக்கும் போது கரும்புலிகள் மகத்துவம் புரியும் என்கிறார் புதுவை

தற்போதைய சமாதான முயற்சிகள் முறிவடைந்து மீண்டும் ஒரு யுத்தம் வெடிக்குமானால் அதன் பிறகு தான் கரும்புலிகள் யார் என்பதையும் அவர்களின் மகத்துவத்தையும் மக்களும் உலகமும் புரிந்து கொள்ளும்.

இவ்வாறு தமிழீழ கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது

சமாதான முயற்சிகள் வெற்றி பெற வேண்டும் என்பதில் நாம் மிகவும் உறுதியாக இருக்கிறோம். எமது மக்களும் நாமும் ஏன் பெரும்பாலான இராணுவத்தினரும் கூட சமாதானம் கிடைக்க வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வத்துடன் தான் இருக்கின்றார்கள்.

இப்பொழுதும் கூட புலிகள் எமது மக்களுக்காகத் தமது உயிரைக் கொடுப்பதற்கு தயாராகவே இருக்கிறார்கள். எப்போதுமே தமது சாவை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்களை விட கரும்புலிகளின் படையணி எம்மிடம் இருக்கிறது. கரும்புலிகள் படையணி நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கின்றது.

அவர்களின் தியாகத்தை எவருமே மதிப்பிட முடியாது. அவர்களின் வரலாறுகள் மிகவும் வித்தியாசமானவை. கரும்புலி கப்டன் மில்லரை வழியனுப்பி வைத்ததிலிருந்து கட்டுநாயக்கா மீது தாக்குதல் நடத்தச் சென்ற கரும்புலிகளுடன் பழகியது வரைக்கும் அவர்களுடன் மிகவும் பரீட்சயமானவன் என்ற ரீதியில் அவர்களின் நெஞ்சுறுதி மிக்க வரலாறுகளை அறிந்து வைத்திருக்கிறேன்.

கட்டுநாயக்கா விமானநிலையம் மீதான வெற்றி எவ்வளவு பெறுமதியானது என்பதை நாங்களே இன்னமும் சரியாக உணரவில்லை என்றே கூற வேண்டும். அவர்களின் நெஞ்சுறுதியையும் வீச்சையும் கொள்கையையும் நாங்கள் விளக்கிக் கூறினால் எவருமே நம்பமாட்டார்கள்.

இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களா என்று அதிர்ந்து போவார்கள். எனவே இப்படியான கரும்புலிகளின் படையணி இருக்கும் வரை நாங்கள் எதற்கும் கலங்கத் தேவையில்லை.

விடுதலைப்புலிகளின் வெளிப்படையான நடவடிக்கைகளையும் செயற்பாடுகளையும் தான் கண்ணுக்குத் தெரிகிறது. ஆனால் அதற்குப் பின்னால் உள்ள அவர்களின் தியாகங்களும் ஈகங்களும் உணர்வுகளும் கண்ணுக்குத் தெரியாதவை. காலப்போக்கில் அவையெல்லாம் எமது மக்களுக்குத் தெரிய வரும் என்றார்.

விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பிரமுகர் பாப்பா உரையாற்றும் போது கூறியதாவது சமாதான முயற்சிகள் ஓரளவு முன்னேற்றமடைந்து செல்கின்றன. பொருளாதாரத்தடை நீக்கம், பாதை திறப்பு அவற்றை தொடர்ந்து பொது இடங்களில் உள்ள படைமுகாம்கள் ஓரளவு வாபஸ் பெறப்படுகின்றன.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் அரசு ஒழுங்காக நிறை வேற்றும் வரை பேச்சுக்கே இடமில்லை. கடந்த காலங்களைப் போல எம்மை இனிமேல் எவரும் ஏமாற்ற முடியாது.

சமாதான காலத்தில் சமாதானத்துக்காக போராளிகளை இழக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம். எம் மக்கள் விரும்பும் சமாதானத்துக்காக நாம் எவ்வளவு தியாகங்களையும் செய்யத் தயாராகவே இருக்கிறோம். திருமலையில் எமது போராளிகள் ஐந்து பேர் படையினரால் கைது செய்யப்பட்டார்கள். தீவுப்பகுதியிலேயே இரண்டு போராளிகள் கடற்படையினராலும் ஈ.பி.டி.பி.யினராலும் தாக்கப்பட்டார்கள்.

இந்த நடவடிக்கைள் நடைபெற்ற பின்னர் நாங்கள் யுத்தத்தை தொடங்கியிருக்க வேண்டும். ஆனால் எமது தலைவர் எம்மை இங்கு அனுப்பும்போது எமக்கு சொல்லி விட்ட கருத்துக்களால் தான் நாம் பொறுமையாக இருக்கிறோம். எத்தகைய இன்னல்கள் வந்தாலும் மக்களுக்காக அவற்றைப் பொறுத்துக் கொள்ளுமாறு தலைவர் எம்மிடம் கூறியுள்ளார்.

கரும்புலிகளின் உறுதி வாய்ந்த தியாகத்தினால் தான் நாம் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறோம். எதிரியின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் கூட பல காலம் வாழ்ந்து விட்டு தருணம் வரும்போது தமத இலக்கை தாக்கி வெடித்துச் சிதறுகின்ற அவர்களின் உறுதி வியந்து போற்றப்பட வேண்டியது என்றார்.

# சித்திரவதை செய்யப்பட்ட குருக்களுக்கு 40ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்க உத்தரவு

கொடுமையான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட இந்துக் குருக்கள் ஒருவருக்கு அரச 40ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நட்டஈடு வழங்க வேண்டுமென உயர்நீதிமன்ற நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ, அமிர் இஸ்மாயில், டி.சில்வா ஆகியோரடங்கிய நீதிமன்று உத்தரவு வழங்கியுள்ளது.

1999 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21ம்திகதி குருக்கள் மூதூர் பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டார். அங்கு வைத்து அவர் கைது செய்யப்பட்டார். மூதூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட சிவஸ்ரீ சிவ சிதம்பர தேசியக்குருக்கள் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டார்.

பின்னர் 1999ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ம்திகதி திருகோணமலை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டார். திருகோணமலைப் பொலிஸ்நிலையத்தில் வைத்துக் குருக்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கியை வாயில் திணித்துத் தாக்கப்பட்டார்.

இதனால் இவரது பற்கள் சேதமடைந்தன. அடுத்தநாள் கண்டி பொலிஸ்நிலையத்திற்கு மாற்றப்பட்டு அங்கும் மோசமாகச் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார். கண்டி பொலிஸ்நிலையத்தில் குருக்களது வாயில் பெற்றோல் ஊற்றப்பட்டு காயங்களுக்குள் மிளகாய்த்தூள் திணிக்கப்பட்டும் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார்.

சிங்களமொழியில் எழுதப்பட்ட காகிதமொன்றில் கையொப்பமிடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். மறுநாள் 29ம்திகதி கண்டி நீதிவான் முன் ஆஜர்படுத்தப்பட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

இவர் தனது கைதும் தடுப்புக்காவலும் அரசமைப்பின் 11வது சரத்தின் கீழ் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகத் தெரிவித்து உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம் மனுதாரர் கொடுமையாகச் சித்திரவதைக்குட்படுத்தப் பட்டது நிருபிக்கப்பட்டுள்ளதால் மனுதாரருக்கு அரசு நட்டஈடாக 40 ஆயிரம் ரூபா வழங்க வேண்டும் என உத்தரவிட்டது.

குருக்கள் தற்போது களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திருகோணமலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கண்டி நாசகாரத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி, சட்டமாஅதிபர், பொலிஸ் அதிபர் ஆகியோர் எதிர்மனுதாரர்களாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# உடத்தலவின்ன படுகொலைகள்: ரத்வத்தை உட்பட 14 பேர் மீதும் 75 குற்றச்சாட்டுக்கள்

உடத்தலவின்ன முஸ்லிம் இளைஞர்கள் பத்துப் பேர் தேர்தல் தினத்தன்று படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை மற்றும் அவரது இரு புதல்வர்கள் உட்பட 15 சந்தேக நபர்கள் மீதும் மொத்தம் 75 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இந்த வழக்கு தென்தெனிய நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குற்றப்பத்திரிகைகள் சந்தேக நபர்களிடம் கையளிக்கப்பட்டன.

மூன்று நீதிபதிகளைக் கொண்ட ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தின் முன் இந்த வழக்கு விசாரணையை நடத்த சட்டமாஅதிபர் தீர்மானித்துள்ளார் என நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. தெல்தெனிய நீதிபதி இனோகா ரணசிங்க வழக்கை 26ம்திகதிக்கு ஒத்தி வைத்தார். இவ்வழக்கு சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த 3 மாதம் சிறையிருந்தர்

# பிரபா – ஹக்கீம் சந்திப்புக்கு கூட்டமைப்புக் குழுவினர் தூது

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஹக்கீமுக்கும் இடையில் நேரடிப் பேச்சுக்களை ஒழுங்கு செய்யும் நோக்குடன் தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் தூதுக்குழு ஒன்று விரைவில் வன்னி செல்ல இருக்கிறது.

அமைச்சர் ரவூப் ஹக்கீமின் விருப்பத்தின் பேரிலேயே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற நீண்ட சந்திப்பின் போது இந்த விடயம் பற்றித் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிகின்றது.

வன்னி செல்லவுள்ள கூட்டமைப்பின் தூதுக்குழுவில் கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தன், காங்கிரஸ் தலைவர் விநாயகமூர்த்தி, ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா ஆகியோர் இடம்பெறுவர்.

இச்சந்திப்பின் போது தற்போதைய தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வரப்பட இருப்பது குறித்தும் ஆராயப்பட்டது. இதுவும் வன்னியில் தெரிவிக்கப்படும்.

# பண்டிதமணி மு.கந்தையா தமிழீழ மண்ணில் காலமானார்

மூத்த சமயப் பெரியாரும் வைசசித்தாந்த ஆய்வாளருமான இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு.கந்தையா தனது 85 வது வயதில் தமிழீழ மண்ணில் காலமானார்.

யாழ்ப்பாணம் ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பத்துக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். நெடுங்காலமாக சமயப்பணி ஆற்றி வந்துள்ளார். அவரது இறுதிக் கிரியைகள் ஏழாலையில் இடம்பெற்ற போது சமயப் பெரியார்கள், இலக்கிய ஆர்வலர்கள் சமூகப் பிரமுகர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அவரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து இந்து சமயப் பேரவை அனுதாபச் செய்தி ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

ஈழநாடு அறிவித்தல்.
விளம்பரத் தொடர்புகளுக்கு
(905) 653 – 3000
(416) 266 – 9919


- மீளப் பெறும் பண வெகுமதியுடன் கூடிய காப்புறுதித் திட்டம்
- முதலீட்டுடன் கூடிய ஆயுள் காப்புறுதித் திட்டம்
- தற்காலிக, மிகவும் விலை குறைந்த ஆயுள் காப்புறுதித் திட்டங்கள்
- விபத்து, காயங்கள் மூலம் ஏற்படும் இயலாமைக்கான காப்புறுதித் திட்டங்கள்
- சேமிப்புகளும் முதலீட்டுத் திட்டங்களும்
- *Investment Fund*
- *RSP* • *RIFs and Annuities*

*SINCE 1847*

*One of the best & leading companies in North America*

CANADA LIFE

மேலதிக பல்வேறு வகையான திட்டங்களை அறிந்து கொள்ள நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன்

சிவ பஞ்சலிங்கம் (B.Comm.)
BUS: (416) 661 - 9155
RES: (416) 321 - 09[illegible]9
FAX: (416) 661 - 9157
5050 DUFFERIN ST # 218
TORONTO - ONT - M3H 5T5

# தமிழீழ விடுதலைப்புலிகளைத் தொடர்ந்து ஆதரிப்போம்

## எந்த ஒரு நிலைமையையும் சந்திக்கத் தயார் – டாக்டர் ராமதாஸ்

தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரிப்பதற்காக பொடோ சட்டத்தின் கீழ் நடவடிக்கையை தமிழ்நாடு அரசு மேற்கொண்டாலும் தமது கட்சி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தொடர்ந்து ஆதரித்து வரும் என்றும் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அறிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் 11ம்திகதி வியாழக்கிழமை பேசிய ராமதாஸ் இதைத் தெரிவித்தார். டாக்டர் ராமதாஸ் மேலும் கூறியதாவது

2001 ஆம் ஆண்டு அ.தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் இலங்கைத் தமிழர்கள் உரிய உரிமைபெறவும் சுயமரியாதையுடன் கூடிய அமைதியான வாழ்வு பெறவும் மத்திய அரசை வற்புறுத்துவோம் என்று உள்ளது.



விடுதலைப்புலிகள் இல்லாமல் இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண முடியாது என்பது இலங்கை அரசுக்கும் இந்தியா, நோர்வே, அமெரிக்கா உட்பட அனைத்து நாடுகளுக்கும் தெரியும்.

ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுப்பது என்பது வேறு. அவர்களுக்கு உதவி செய்வது என்பது வேறு. எனவே விடுதலைப்புலிகளை ஆதரித்தார் என்பதற்காக வை.கோவைக் கைது செய்வது அரசியல் ரீதியான பழிவாங்கும் நடவடிக்கையாகும்.

ஈழத்தமிழர் பிரச்சனையைப் பொறுத்தவரை நாங்களும் விடுதலைப்புலிகளின் கொள்கைகளை ஆதரிக்கின்றோம். ஆனால் உதவி செய்யவில்லை. ஜனநாயகத்தில் பேச்சுரிமை, எழுத்துரிமை அனைவருக்கும் உண்டு. அதற்காக எந்தத் தொடர்பும் இல்லாமல் ஒருவரை கைது செய்வது தவறானது. பொடோ சட்டத்தின்படி வை.கோ.வை கைது செய்வது தேவையற்ற பிரச்சனை. இது போன்ற காரணங்களை வைத்து எங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று கூறப்படுவது யூகத்தில் வெளியாகும் செய்தி தான் என்றும் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் மேலும் தெரிவித்தார்.

# பாலஸ்தீன விடுதலை இயக்கம் இல்லாமல் பாலஸ்தீனப் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியுமா? விடுதலைப்புலிகள் இல்லாமல் இலங்கைப் பிரச்சனைக்கு தீர்வு காண முடியுமா? வை.கோ

பாலஸ்தீன விடுதலை இயக்கம் இல்லாமல் பாலஸ்தீன பிரச்சனைக்குத் தீர்வு காணமுடியுமா? ஐரிஸ் போராளிகள் இல்லாமல் அயர்லாந்து பிரச்சனைக்குத்தீர்வு காண முடியுமா? அதுபோலத் தான் ஈழத் தமிழர் பிரச்சனைக்கும்புலிகள் இல்லாமல் தீர்வு காண முடியாது என்று மும்பையில் பிடிஐ செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் ம.தி.மு.க. பொதுச் செயலாளரும் ஈழத்தமிழரின் இனிய நண்பருமான வை.கோ. தெரிவித்தார்.

அமெரிக்காவில் இருந்து சென்னை திரும்பும் வழியில் மும்பாய் விமானநிலையத்தில் வைத்து மேற்கண்டவாறு வை.கோ. தெரிவித்தார்.

ஸ்ரீலங்காவில் மட்டுமே தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளிப்பதாகவும் தமிழ்நாட்டில் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதை தாம் ஆதரிவிக்கவில்லை என்றும் கூறிய வை.கோ. ஜெயலலிதா பாசிச ஆட்சி நடத்துகிறார் என்றும்



சாடினார். நாள்தோறும் உருவாகும் அனைத்து மக்கள் பிரச்சனைகளையும் திசை திருப்பவே தம்மீது பொடோ சட்டத்தின் கீழ் நடவடிக்கையை ஜெயலலிதா மேற்கொண்டுள்ளார் என்றும் இதை ஜனநாயக ரீதியில் ம.தி.மு.க. எதிர்கொள்ளும் என்றும் தெரிவித்தார்.

இப்பிரச்சனையில் மத்திய அரசை தலையிடுமாறு நாங்கள் வலியுறுத்த மாட்டோம்என்றும் இப்பிரச்சனை குறித்து மக்களிடம் பிரச்சார இயக்கமாக எடுத்துச் செல்வோம் என்றும் கூறிய வை.கோ.

ஆர்ப்பா ட்டம் முழுஅடைப்பு போன்று மக்களுக்கு இடையூறு தரும் எந்தச் செயலையும் கட்சியினர் மேற்கொள்ள வேண்டாம் என்றும் வை.கோ உருக்கமாகக் கேட்டுக் கொண்டார்.

# விடுதலைப் புலிகளை தொடர்ந்து ஆதரிப்போம் என்கிறார்கள் இரண்டு இந்திய அமைச்சர்கள்

இலங்கைத் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பான ஒரே இயக்கமான விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் தங்கள் நிலையில் மாற்றம் இல்லை என்று ம.தி.மு.க.வைச் சேர்ந்த இந்திய அமைச்சர்களான கண்ணப்பன், செஞ்சி ராமச்சந்திரன் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

மும்பையில் வை.கோ.வை வரவேற்று விட்டு சென்னை திரும்பிய இருவரும் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது

கேள்வி - விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக பேசியதற்காக உங்கள் கட்சியைச் சேர்ந்த எட்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வை.கோ.வும் கைதாக உள்ளார். மத்திய அரசிடம் இது குறித்து முறையிடுவீர்களா?

பதில்- மத்திய அரசை தர்மசங்கடத்தில் ஆழ்த்த விரும்பவில்லை. மத்திய அரசிடம் முறையிடுவதாக இல்லை. இங்கு என்ன நடக்கிறது என்பதை பிரதமரும், அத்வானியும் கூர்ந்து பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

கேள்வி - அடுத்து என்ன நடக்கும் என்று எதிரபார்க்கிறீர்கள்?

பதில் - இந்த ஆட்சியில் என்ன நடக்கும் என்பதை யூகிக்க முடியாது.

கேள்வி - இவ்வளவு நடவடிக்கைக்கு பிறகும் விடுதலைப்புலிகளை ஆதரிக்கிறீர்களா?

பதில் - நாங்கள் இந்திய நாட்டில் எந்தப் பகுதியிலும் விடுதலைப்புலிகள் மட்டுமல்ல எந்த தீவிரவாத இயக்கங்களின் நடவடிக்கைகள் இருக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

ஆனால் இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக இருக்கும் ஒரே இயக்கம் விடுதலைப்புலிகள் தான்.

விடுதலைப்புலிகள் தவிர வேறு எந்த இயக்கம் இருந்தாலும் இதே போல் ஆதரிப்போம். எங்களது ஆதரவு தொடரும்.

கேள்வி - விடுதலைப்புலிகளை ஆதரித்ததால் தான் வை.கோ. மீது கைது நடவடிக்கை எடுக்கப்படுகிறதே? உங்கள் மீதும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கருதுகிறீர்களா?

பதில் - அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை.

# ம.தி.மு.க.வுக்குத் தடை: பா.ஜ.க. கருத்து

இந்தியாவில் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரிக்கும் மறுமலர்ச்சி தி.மு.க.வுக்கு தடைவிதிக்கப்படும் என்று தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளது குறித்து பாரதிய ஜனதா கட்சி கருத்துத் தெரிவித்துள்ளது.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பாரதியஜனதாக் கட்சித் தலைவர் வெங்கைய்யா நாயுடு எங்களுக்குத் தெரிந்தவரை எந்த ஒரு அரசியல் கட்சியும் இந்திய அரசியலில் தடை செய்யப்பட்டதாக இல்லை என்று கூறினார்.

இதேவேளை இந்தியாவில் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க த்தை ஆதரிக்கும் மறுமலர்ச்சி தி.மு.க.வுக்கு தடை விதிக்கப்படும் என்று தமிழ்நாடு முதல்வர் ஜெய லலிதா கூறியுள்ளது குறித்து இந்திய தேர்தல் ஆணையம் கருத்துத் தெரிவித்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளைத் தடை செய்யும் அதிகாரம் தங்களுக்கே உண்டு என்றும் மாநில அரசுகள், கட்சிகளைத் தடை செய்யலாமா என்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இது இவ்வாறிருக்க விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசியதற்காக பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ம.தி.மு.க. செயரும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான வை.கோ மதுரைசிறையில்இருந்து வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# தாமரைக்கனியின் இளைய மகனுக்கு கத்திக் குத்து

## மூத்த மகனின் ஆதரவாளர்கள் செயல்

தி.மு.க.வில் உள்ள தாமரைக்கனியின் இளைய மகனை அ.தி.மு.க. எம்.எல்.ஏவாக உள்ள மூத்த மகனின் ஆதரவாளர்கள் கத்தியால் குத்தினர். அவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாமரைக்கனியின் கண் முன்னால் இச்சம்பவம் நடந்தது. அ.தி.மு.க.வில் இருந்த தாமரைக்கனி சமீபத்தில் தி.மு.க.வில் இணைந்தார். இதனையடுத்து மூத்த மகனுக்கு தேர்தலில் சீட் கொடுத்தார் ஜெயலலிதா. இதையடுத்து அப்பாவும் மகனும் ஒருவரையொருவர் வசைபாடி வருகின்றனர்.

சமீப காலமாக தாமரைக்கனிக்கு பல்வேறு சிரமங்களை அ.தி.மு.க. ஆட்சி கொடுத்து வருகின்றது. இந்நிலையிலேயே இளைய மகனுக்கு மூத்தமகனின் ஆதரவாளர்கள் கத்தியால்குத்திக்காயப்படுத்தினர்.



PROFESSIONAL TRUCK TRAINING CENTRE

CLASSES - A,B,C,D,Z மற்றும் Air Brake & Defensive Course, Fork Lift (போக்லிப்ற்) பயிற்சிகளும் வழங்கப்படும்




- EI (வேலையற்றோர் காப்புறுதியில்) இருப்பவர்களுக்கு இலவசப் பயிற்சிகள்
- நியாயமான கட்டணத்தில் பயிற்சி வகுப்புகள்
- அனைத்து பயிற்சியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு
- விசேட தேர்ச்சிபெற்ற பயிற்றுனர்கள்
- வாரத்தில் 7 நாட்களும் வகுப்புகள் உண்டு

START A CAREER YOU CAN FEEL SECURE IN!

விபரங்களுக்கு அழையுங்கள்
TEL: (416) 299-9638
CELL: (416) 771-8041

FAX: (416) 609-9814
www.jaystrans.com

# முஸ்லிம் தலைவர்கள் ஒன்றுகூடி உரிமைகள், அதிகாரப் பகிர்வு குறித்து ஆராய விடுதலைப்புலிகளை பேச்சுக்கு அழைப்பு

முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு. அரசியல் உரிமைகள் போன்றவை தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் நேரடியாகப் பேசித் தீர்வு காண விரும்புகின்றோம். எனவே எங்களுடன் பேச்சு நடத்த விடுதலைப்புலிகள் முன்வர வேண்டும்.

இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கின்றது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சமாதானத்துக்கான ஒன்றியம். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த முஸ்லிம் எம்.பி.க்கள் ஒன்றுகூடி மேற்படி அமைப்பை உருவாக்கியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த அமைப்பின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் 10ம்திகதி புதன்கிழமை ஆலோசனைக்கூட்டம் ஒன்றை நடத்தினர். பின்னர் அங்கு செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர்கள் முஹம்மது. ரவூப்ஹக்கீம், அஸ்வர் மற்றும் பௌஸி உட்பட பத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம் எம்.பிக்கள் பங்குபற்றினர். எனினும் தேசிய ஐக்கிய முன்னணி மற்றும் ஜே.வி.பி.யைச் சேர்ந்த முஸ்லிம் எம்.பி.க்கள் இந்தச் சந்திப்பில் பங்கு கொள்ளவில்லை.

தமது ஆலோசனைக் கூட்டத்தின் பின்னர் முஸ்லிம் எம்.பி.க்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது முஸ்லிம்கள் மத்தியில் பிளவு. கருத்து முரண்பாடு போன்றவை இருப்பதே தற்போதைய பிரச்சனைகளுக்குக் காரணம் என்று சில பத்திரிகைகள் கூறுகின்றன. ஆனால் அது தவறு. நாம் ஒரே குரலில் ஒன்றாக ஒலிப்போம் என்பதை உலகுக்குக் காட்ட விரும்புகின்றோம். முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அரசுத் தரப்பைச் சேர்ந்த எம்.பி.க்கள் இருபிரிவாக புலிகளின் பிரமுகர் கரிகாலனைச் சந்தித்துப்



பேசியுள்ளனர். ஆனால் அதன் பின்னரும் கூட சில பிரச்சனைகள் எழுந்துள்ளன. சில இடங்களில் எமது விவசாயிகள் தமது வயல்களுக்கு இன்னும் செல்லமுடியவில்லை. அவர்களால் சுதந்திரமாக நடமாட முடியவில்லை. ஆகவே முஸ்லிம்களின் பாதுகாப்பு அரசியல் உரிமைகள் ஆகியவை குறித்து புலிகளுடன் நேரடியாகப் பேசி உறுதிப்படுத்திக் கொள்ள முயல்கின்றோம். நாங்கள் எந்தச் சந்தர்ப்பதிலும் புலிகளுக்கு எதிரானவர்கள் அல்லர் என்பதையும் கூறி வைக்க விரும்புகின்றோம். புலிகளுடன் இணைந்தே இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண விழைகின்றோம். எந்தச் சந்தர்ப்பத்திலும் சமாதானப் பேச்சுக்கள் குழம்பி விடக்கூடாது என்பதில் முஸ்லிம்கள் அக்கறை கொண்டுள்ளனர் என்பதையும் தெளிவுபட வெளிப்படுத்துவது நமது கடமை.

முஸ்லிம்களின் நியாயமான பிரதிநிதித்துவம் சுதந்திரமான வாழ்வு சுயாதீனமான செயற்பாடு. பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காகவே புலிகளுடன் பேச விரும்புகின்றோம். எங்களோடு புலிகள் பேச வேண்டும் என்பது குறித்து பிரதமர் ஊடாக நோர்வேக்குழுவிடம் வற்புறுத்துவோம் என்றார்.

நாங்கள் இனரீதியாக சமூக ரீதியாக ஒன்றுபட்டிருக்கின்றோம். எங்களுக்குள் நிலவும் அரசியல் வேறுபாடு. கருத்து முரண்பாடு காரணமாக நமது சமூகம் பாதிப்படைய இடமளிக்க மாட்டோம் என்று சொன்னார் அமைச்சர் முஹம்மது. அரசியல் ரீதியாக நாம் முஸ்லிம்கள் முரண்பட்டிருப்பதை பிரச்சனைகளுக்குக் காரணம் என்று கூறி புலிகளும் ஏனையோரும் உலகுக்குக் காட்ட முயற்சிக்கின்றனர். அது தவறு. நாம் ஐக்கியப்பட்டு ஒரேகுரலில் ஒலிக்க - செயற்பட தயாராக இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்துகிறோம் என்றார் பௌஸி.

## முஸ்லிம் – தமிழ் சமூகங்கள் பிரச்சனைகளை பேசித் தீர்க்க வேண்டும் என்கிறார் கரிகாலன்

எமக்குள் ஏற்படும் பிரச்சனைகளை இரு சமூகங்களும் பேசித்தீர்க்க வேண்டும். அரசியல் பலத்தின் மூலமோ அதிகாரிகளின் அனுசரணையுடனோ எதையும் சாதிக்கக் கூடாது. அவ்வாறான அணுகுமுறை தவறானது. இவ்வாறு மட்டக்களப்பு அம்பாறை சிறப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் ஓட்டமாவடி விவசாயிகள் மத்தியில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் இந்திய அமைதிப்படை இங்கு நிலை கொண்டிருந்த காலத்தில் உணவளித்து எமது இயக்கத்திற்கு உதவி செய்தவர்கள் ஓட்டமாவடி மக்கள். போராட்டத்திற்கு வலுவளித்த இந்த மக்களை நாம் மறக்க முடியாது. சமாதான காலத்தில் கலவரம் வந்தது ஜீரணிக்க முடியாதது. இனி மேலும் இரு இனங்களுக்கிடையில் பிரச்சனை வருவதற்கு அனுமதிக்க முடியாது. நல்லுறவைப் பேணுவதற்கு இரண்டு இனங்களின் மத்தியில் இருந்தும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களுக்கு இரண்டு சமூகங்களும் கட்டுப்பட வேண்டும். முன்னர் எமது இயக்கத்தின் பிரதான போக்குவரத்து மார்க்கமாக மூக்கர்கல் பிரதேசம் இருந்தது. இதன் காரணமாகவே மூக்கர்கல் பிரதேசம் போக்குவரத்துக்காக தடை செய்யப்பட்டதுடன் விவசாயச் செய்கைக்கும் தடை செய்யப்பட்டது. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இப்பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்டுள்ள விவசாய நிலங்களுக்கு முஸ்லிம் விவசாயிகள் வருவது தடைப்பட்டிருந்தது. இனிமேல் முஸ்லிம் விவசாயிகள் அச்சமின்றி வரலாம்.

இனங்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டதால் இரண்டு சமூகங்களுக்கும் பெரிய பாதிப்புக்களும் இழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இழப்பில் இருந்து மீள்வதற்கு நீண்ட காலம் எடுக்கும். முஸ்லிம் தலைவர்களும் எமது தலைவரும் ஒப்பந்தங்கள் பேச்சுக்களை நடத்தி உள்ளார்கள். அவற்றை நாம் நிறைவேற்ற வேண்டும் என்றார் கரிகாலன்.

## இணைந்து செயற்படுவது இரு தரப்புக்கும் நல்லது

அமைதி நிலை ஏற்படுவதை விரும்பாத சில சக்திகள் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே - தலைவர்களிடையே பூசலை உருவாக்கி அதன் மூலம் குளிர்காய விரும்புகின்றன. அதற்கு இடம் கொடுக்காமல் துணிச்சலுடனும் தூரதிருஷ்டியுடனும் செயற்பட வேண்டிய பாரிய பொறுப்பு தமிழ் முஸ்லிம் மலையகத் தலைவர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

துணிச்சலான செயற்பாடுகள். நடவடிக்கைகள் மூலம் தங்களின் சமூகப் பொறுப்பை வெளிப்படுத்துவார்களா அவர்கள்? என சமாதான விரும்பிகள் ஏங்கி நிற்கும்போது கடந்த வாரம் பிபிசி தமிழ்சேவைக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் வழங்கிய செவ்வி தான் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் தாம் என்பதை நிருபித்துள்ளவர்கள் புலிகள். அதே போன்று முஸ்லிம் மக்கள் மத்தியில் அதிக ஆதரவைப் பெற்ற அரசியல் சக்தி முஸ்லிம் காங்கிரஸ் இந்த இரு தரப்புக்கும் இடையிலான முரண்பாடு தமிழர் - முஸ்லிம் பிணக்காகக் கருதப்படக்கூடிய து. கருதப்பட வேண்டியது.

பிபிசி பேட்டியில் புலிகள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை ஹக்கீம் அடுக்கியிருக்கின்றார். அவரது பேட்டியில் இரண்டு அம்சங்கள் நோக்கப்பட வேண்டியவை. ஒன்று - புலிகள் இந்தப் போராட்டத்தை முஸ்லிம்களுக்காகவும் நடத்துகிறார்கள் என்பதை நிருபிக்கத் தவறியிருக்கின்றார்கள் என்பது. மற்றது தமிழ்மக்களும் புலிகளுக்கு வரி செலுத்துகிறார்கள். புலிகளின் போராட்டத்தை ஆதரிக்க வேண்டிய தார்மீக கடப்பாடு அவர்களுக்கு உண்டு. ஆனால் புலிகள் முஸ்லிம்களுக்காகவும் இந்தப் போராட்டத்தை நடத்துகின்றார்கள் என்பதை நிரூபிக்கத் தவறியிருப்பதால் அந்தப் போராட்டத்தை ஆதரிவேண்டிய கடப்பாடு பொறுப்பு முஸ்லிம்களுக்கு இல்லை என்பது.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது இந்தக் கருத்துக்கள் முற்றிலும் சரியானவையே. அதுவும் முஸ்லிம்களுக்காகவும் இந்தப் போராட்டத்தை நடத்துகின்றார்கள் என்பதை புலிகள் நிரிபிக்கத் தவறி விட்டார்கள்என ஹக்கீம் கூறுவதில் நிறைய அர்த்தங்கள் பொதிந்துள்ளன.

ஆனால் இத்தகைய கருத்தை மட்டும் கூறிக் கொண்டு முஸ்லிம்களைத் தனியாகப் பிரித்து வைத்துக் கொண்டு சுயாதீனமாகச் செயற்பட ஹக்கீம் முயற்சிப்பது நியாயமா? அது முஸ்லிம்களதும் தமிழர்களதும் ஒட்டுமொத்த நலனுக்கு உகந்ததா என்பதெல்லாம் சிந்தித்துப் பார்க்கப் பட வேண்டியவை.

ஒரு போராட்டச் சூழலில் அதுவும் பெரும் யுத்தம் வெடித்த ஆயுதப் போராட்ட சூழலில் சில கட்டுப்பாடுகள். மட்டுப்படுத்தல்கள் தடைகள் தவிர்க்க முடியாதவை. என்றாலும் அமைதிக் காண சமாதான முயற்சிகளின் நலன்கருதி சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அத்தகைய செயல்களைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.

அதே சமயம் (25ம் பக்கம் பார்க்க)




BUYING - SELLING

NADA G. NADARAJAH B.V.Se
Sales Representative
Gold Award Winner 2000
5200 Finch Ave. East,
Suite 206, Scarborough
ON M1S 4Z4



Bus: (416) 293-5093
Fax: (416) 293-5237
Res: (905) 472-8703

HOMELIFE
HomeLife Metro
Realty Inc.
Real Estate Broker

வீடுகள் வாங்க அல்லது விற்க, அதற்கான இலவச
ஆலோசனைகள் பெற்றிட, குறைவான வட்டி விகிதத்தில்
அடமான ஒழுங்குகள் செய்திட இன்றே அழையுங்கள்

நடா. ஜி. நடராசா




CHENNAI - 1260.00

LONDON - 669.00

FRANKFURT - 764.00

ZURICH - 870.00

OSLO - 945.00

PARIS - 699.00

COPENHAGEN - 945.00


BANGKOK - 1160.00

SINGAPORE - 1160.00

(Taxes are extra and the fares are subject to availability)



றொரன்றோ - கொழும்பு
சென்றுவர
**$1185.00**
மட்டுமே



# SkyRoute
## TRAVEL SERVICES INC.

1200 MARKHAM ROAD, SUITE 106
SCARBOROUGH, ONTARIO, M1H 3C3

**TEL: 416-439-4000 FAX: 416-439-6463**

TOLL FREE: 1-877-468-6759 - 1-877-GO TO SKY

E-mail: contact@skyroutetravel.net

IATA

TICO

Reg: 04488805 / 04652780

# ஒரு பார்வை: பொடோ சட்டம்

(அமெரிக்கா மீதான தாக்குதலையடுத்து இந்திய அரசு பயங்கரவாத தடுப்புச்சட்டத்தை அறிமுகப் படுத்துவதாக அறிவித்தது. குடியரசுத்தலைவரின் மேலாணைகள் மூலமே இரண்டு முறை நீட்டிப்பு செய்யப்பட்ட இச்சட்டம் இந்திய நாடாளுமன்ற மக்களவையில் நிறைவேற்றப் பட்ட சட்டத்தை நாடாளுமன்ற மக்கள் அவை நிராகரித்தது. இதனால் இந்தியாவின் நாடாளுமன்ற வரலாற்றில் மூன்றாவது முறையாக மக்களவை. மாநிலங்களவை ஆகியவற்றை இணைத்த கூட்டுக் கூட்டத்தின் மூலம் மார்ச் 26ம்திகதி இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது)

பொடோவில் அடங்கியுள்ளமனித உரிமைகளுக்கு எதிரான ஆபத்தான பிரிவுகள் என்ன? தடா சட்டத்தை விட இது மென்மையானது என்ற வாதம் உண்மையா? தடாவுக்கும் பொடோவுக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன? இதோ ஒரு சுருக்கமான ஆய்வு.

தடா சட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நீடிக்க வேண்டும். பொடோவை ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நீடித்தாலே போதும்.

தடா சட்டம் தீவிரவாத விசயங்களில் ஈடுபடும் தீவிரவாதிகளைத் தண்டிக்கக் கொண்டு வரப்பட்டது. ஆனால் பொடோவின் எல்லையோ மிகவும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தீவிரவாத அமைப்புக்கள் என்று அரசு எந்தவொரு அமைப்பையும் முத்திரை குத்தி தடைசெய்ய முடியும். இந்தத் தீவிரவாத அமைப்பின் உறுப்பினர்கள் மட்டுமல்ல ஆதரவாளர்கள். அனுதாபிகளைக் கூ் தீவிரவாதிகள் என்று கூறி இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்ய முடியும்.

இதுவே தடாவை விட இந்தச் சட்டத்தில் பொதிந்துள்ள கடுமையான ஆபத்து.

3(1)வது பிரிவு நாட்டின் ஒற்றுமை. ஒருமைப்பாடு. இறையாண்மை மற்றும் பாதுகாப்புக்கு எதிராக மக்களிடையே பீதியை ஏற்படுத்துவோரையும் அதற்காக வெடிகுண்டுகள். வெடிமருந்துகள். விஷப்பொருட்களைப் பயன்படுத்தி வன்முறையில் ஈடுபடுவோரையும் தீவிரவாதிகள் என்று கூறுகிறது. ஆனால் இந்தச்சட்டம் இதற்கு மட்டுமே பயன்படுத்தப்போவதில்லை. வேறு எவர் மீது வேண்டுமானாலும் இந்தச் சட்டதைப் பயன்படுத்துவதற்கு வசதியாக எந்தத் திட்டவட்டமான அளவுக்கும் இல்லாத ஒரு சொற்றொடர் இதில் இணைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்புக்கான உடைமைகள். அடிப்படைத் தேவைகளுக்கான விநியோகம் தொடர்பானவற்றை சேதப்படுத்திய. அழித்ததோடு இது தொடர்பாக வேறு நோக்கங்களோடு இந்தச் செயல்களில் ஈடுபடுவோரும் தீவிரவாதிகள் என்று சட்டம் கூறுகிறது.

வேறு நடவடிக்கைகள் எது என்பது திட்டவட்டமாக வரையறுக்கப்படாததால் எந்த ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டவர் மீதும் இந்தச் சட்டத்தில் கைது செய்து மரண தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனையோ வழங்க முடியும். இவ்வளவு கடுமையான தண்டனைகள் தரக்கூடிய ஓர சட்டப்பிரிவு. இப்படித் தெளிவற்ற சொற்றொடர்களை உள்ளடக்கிக் கொண்டிருப்பது மிகமிக ஆபத்தானது.

சட்டத்தின் மூன்றாவது அத்தியாயம் - பட்டியலில் அரசால் சேர்க்கப்படும் அமைப்புக்களை எல்லாம் பயங்கரவாத அமைப்புக்கள் என்று கூறுகின்றது.

இந்த அமைப்புக்கள் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பயங்கரவாதத்தை ஊக்குவித்ததாகவோ அல்லது அந்தக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டிருந்தால் கூட பயங்கரவாதம் தான்.

இந்த அமைப்பு பயங்கரவாத செயல்களில் ஈடுபடவில்லை என்றாலும் அதை ஒரு தத்துவமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று மத்திய அரசு தன்னிச்சையாகவே அறிவித்து விட முடியும்.

**“சிறைவாசத்துக்குப் பின் தான் விசாரணைக்கே ஏற்றுக் கொள்ளப்படும். அதுவும் அரச வழக்கறிஞர் எதிர்க்காமல் இருந்தால் தான். குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதி என்று நீதிபதி கருதினால் மட்டுமே பிணையில் விடுதலை பெறமுடியும்”**

இந்த அமைப்பின் உறுப்பினராகக் கூட இருக்க வேண்டாம். அனுதாபிகளாக இருந்தாலே அவர்களைக் கைது செய்து பத்து ஆண்டுகள் சிறைக்குள் தள்ளி விடலாம். எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாமல் அந்த அமைப்பில் உறுப்பினராக இருந்தாலே பத்து ஆண்டு சிறைத்தண்டனை தர முடியும். இந்த அமைப்புக்காக பொது மக்களிடம் நன்கொடை திரட்டினால் அவருக்கு 14 ஆண்டுகள் சிறை.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அரசு ஒருவரை சந்தேகித்தால் அவரது தொலைபேசியை ஒட்டு கேட்கலாம். பதிவு செய்யலாம். கடிதத்தைப் பிடித்துப் படிக்கலாம். கணினியின் மின்அஞ்சலைப் பார்க்கலாம். நேராகவோ அல்லது தூதுவர் வழியாக தகவல் பரிமாற்றங்களிலும் தலையிட்டு அந்தத் தகவலையே நீதிமன்றத்தில் சாட்சியமாக்கலாம். இந்த வேலைகளைச் செய்யக்கூடிய உரிமை. கூட்டுச் செயலாளர் நிலையில் உள்ள ஒரு அதிகாரிக்கு வழங்கப் பட்டிருக்கிறது.

நீ என்னிடம் கடந்தவாரம் கூறியது போல். காரியத்தைக் கச்சிதமாக முடித்து விடு என்று தனது அரசியல் எதிரிக்கு அடையாளம் தெரியாத ஒரேயொரு பெயரில் ஒருவர் மின்அஞ்சல் அனுப்பி அவரைப் பொடோவின் கீழ் கைது செய்துவிடமுடியும்.

குற்றங்கள் நிருபிக்கப்படாதவரை ஒருவர் நிரபராதியே என்று குற்றவியல் கோட்பாடு பொடோவுக்குப் பொருந்தாது. தன்னை நிரபராதி என்று நிரூபிப்பதற்கு கால அவகாசம் தர மறுக்கின்றது இந்தச்சட்டம்.

இப்போது நடைமுறையில் இருக்கும் வருமான வரி சட்டங்கள். போதைமருந்து சட்டங்களில் கூட தன்னைக் குற்றமற்றவர் என்று நிரூபிப்பதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

உதாரணமாக வங்கிக் கணக்கில் அதிகப் பணம் போட்டுள்ள ஒருவரை வருமானவரி அதிகாரிகள் உடனே கைது செய்துவிட முடியாது. தனது வருமானத்துக்கான வாய்ப்புக்களை தெரியப்படுத்தும் உரிமை உண்டு. ஆனால் தான் எதற்காக கைது செய்யப்படுகிறோம் என்பதை அறிவதற்கு முன்பே ஒருவரை சிறையில் தள்ளி விடுகிறது பொடோ.

ஒருவர் சார்ந்திருக்கும் அமைப்பு தடை செய்யப்பட்டால் ஆயுதம் வைத்திருப்பதாக குற்றம் சாட்டப்பட்டாலே போதும். சிறைக்குள் அடைக்கப்பட்டு விடலாம்.பிரிவு 3(8) மற்றும் 14இன் படி பயங்கரவாத நடவடிக்கைகள் நடக்கப் போவதாக தகவல் தெரிந்த ஒருவர் காவல துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்பதைக் கட்டாயப் படுத்துகிறது.

அப்படித் தெரிவிக்கத் தவறினால் அவருக்கு ஓராண்டு சிறைத்தண்டனை.ஒருவர் குற்றத்தை செய்திருக்க வேண்டிய அவசியமில்லை. அதிலிருந்து ஒதுங்கியிருந்தாலே கூட. இந்தச் சட்டத்தில் பயங்கரவாதிகள் காவல்துறையின் உளவாளியாக செயற்பட வேண்டும் என்பது ஒவ்வொரு குடிமகனின் கட்டாயக் கடமையாக்குகிறது இந்தச் சட்டம். இந்தச் சட்டப்பிரிவு வழக்கறிஞருக்கு மட்டும் விதிவிலக்கு தருகிறது. நடுநிலையோடு இந்தச் சட்டம் பயன்படுத்துவதாகக் காட்டுவதற்கான ஒரு தோற்றம் தான் இந்த விதிவிலக்கு என்றே கூற வேண்டும்.

இந்த விதிவிலக்கு. எல்லா வழக்கறிஞர்களுக்கும் பொருந்தாது. குற்றம் சாட்டப்பட்டவருக்காக வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் காலத்தில் மட்டும் தான் என்று கூறுகிறது இந்தப் பிரிவு. எனவே எல்லா வழக்கறிஞர்களுக்கும் எல்லா நேரங்களிலும் பொருந்தக்கூடியது அல்ல இந்த விதிவிலக்கு.

இந்தச் சட்டப்பிரிவில் பாதிக்கப்படக்கூடியவர்கள் பத்திரிகையாளர்கள்.

ஒரு பத்திரிகையாளர் தனது பத்திரிகைக்காக சேகரிக்கும் இது பற்றிய தகவலை காவல்துறையிடம் தெரிவிக்கா விட்டால். பத்திரிகையாளரும் ஒரு பயங்கரவாதியாகக் கருதப்பட்டு கைது செய்யப்படுவார். உள்துறை செயலாளர் கமல் பாண்டே பத்திரிகையாளராக இருந்தாலும் இதில் விதிவிலக்குக் கிடையாது என்று கூறியிருக்கிறார்.

காவல்துறைகளுக்கு தகவல் தெரிவிப்பதைக் கட்டாயமாக்கும் 14வது விதியின்படி காவல் துறையிடம் தகவல் தெரிவிக்காமல் இருப்பது மட்டும் குற்றமல்ல. தெரிவித்தது தவறான தகவல் என்ற அடிப்படையிலும் தண்டிக்கப்பட்டு மூன்று ஆண்டு வரை சிறைத்தண்டனை தரலாம் என்று உள்துறை செயலாளர் மேலும் கூறியிருக்கிறார்.

ஒரு பத்திரிகையாளர் நடக்கவிருக்கும் ஒரு பயங்கரவாதத்தைப் பற்றி நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பதை விட காவல்துறைக்கு தகவல் கூறுவதையே வலியுறுத்துகிறது இந்தப் பிரிவு.

சுதந்திரமாக செய்திகளை வெளியிடுவதற்கு இந்தப்பிரிவுகள் தடை செய்வதோடு. பயங்கரவாதம் தொடர்பான செய்திகளைத் தவிர்த்து விடும் மனநிலையையே பத்திரிகையாளர்களுக்கு உருவாக்கும்.

பிரிவு 7 - சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் உரிமையை காவல்துறையிடம் வழங்குகின்றது.

இது வரை நீதிமன்றத்திடம் இருந்த உரிமை இப்போது காவல்துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. காவல்துறையின் முறைகேடுகளைக் கட்டுப்படுத்தக்கூடிய நீதித்துறையின் அதிகாரம் காவல் துறையினரிடமே போனால் என்னவாகும்?

பிரிவு 23(2) பொடோ வழக்குகளை விசாரிக்கும் தனிநீதிமன்றங்களை எந்தப் பகுதியில் அமைப்பது என்பதைக் குறிப்பிடுகிறது.

ஒரே குற்றத்தை விசாரிக்க மத்திய. மாநில அரசுகள் இரண்டும் தனிநீதி மன்றங்களை அமைத்தால் மத்திய அரசு ஏற்படுத்தும் நீதிமன்றங்களே செல்லத்தக்கவை. மத்திய அரசு அமைக்கும் தனிநீதிமன்றத்தின் நீதிபதியை மத்திய அரசே நியமிக்கலாம். மாநில அரசு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியைக் கலந்து ஆலோசித்து நியமிக்க வேண்டும். தனி நீதிமன்றங்களை அமைப்பது தொடர்பான உரிமை இதுவரை நீதித்துறையிடம் இருந்து வந்தது. இப்போது அந்த உரிமையை அரசு தன் வசம் எடுத்துக் கொண்டுள்ளது.

தீவிரவாத நடவடிக்கைக்கும் பயன்படும் என்று தெரிந்தோ அல்லது சந்தேகித்தோ ஒருவர் நிதியோ. அல்லது சொத்துக்களையோ தந்தால். அவருக்கு 14ஆண்டுகள் வரை தண்டனையும் அபராதமும் விதிக்கலாம்.

இதன்மூலம் சமுதாய மனிதஉரிமை அமைப்பு மக்களுக்கு வாடகைக்குக் கட்டிடங்கள் கிடைப்பது கூடக் கடினம்.

பொதுமக்களிடம் நன்கொடையும் திரட்ட முடியாது. எந்த அமைப்பையும் தீவிரவாத அமைப்பாக அறிவிக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கும் போது எவரும் சமுதாய அமைப்புக்களிடம் நெருங்கவே அஞ்சுவார்கள்.

காவல்துறை அதிகாரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் தந்த பிறகு 48 மணி நேரத்துக்குள் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்று 32(4) வது பிரிவு கூறுகிறது.

காவல்துறையால் துன்புறுத்தப்பட்டதாக புகார் கூறினால் நீதிமன்றக் காவலுக்கு நீதிபதி உத்தரவிட முடியும். காவல்துறையினரிடம் தந்த வாக்குமூலத்தை 48 மணி நேரத்தில் நீதிபதியிடம் மாற்றிச் சொல்லவும் முடியும் என்றெல்லாம் கூறப்பட்டிருந்தாலும் இவைகள் கண்துடைப்புத் தான்.

நீதிமன்றக் காவலில் இருந்து மீண்டும் காவல் துறை விசாரணைக்குக் கொண்டு செல்லும் உரிமையை பிரிவு 48(2- பி) வழங்குகின்றது.

இதனால் ஒருவரை காவல்நிலையத்தில் வைத்து 30 நாளிலிருந்து 180 நாள் வரை விசாரிக்க முடியும். மீண்டும் காவல்துறை விசாரணைக்கு வாய்ப்பு இருக்கும் போது காவல்துறையிடம் தந்த வாக்குமூலத்தை நீதிபதி முன் மாற்றிச் சொல்வதற்கு யாரும் முன் வரமாட்டார்கள்.

காவல் நிலையத்திலேயே ஒருவர் மூன்று மாத காலம் (180) அடைத்து வைக்கப்பட்டிருந்தால் அது எவ்வளவு பெரிய கொடுமை! பொடோவில் கைதான ஒருவரின் பிணை மனு ஓராண்டு.

சிறைவாசத்துக்குப் பின் தான் விசாரணைக்கே ஏற்றுக் கொள்ளப்படும். அதுவும் அரச வழக்கறிஞர் எதிர்க்காமல் இருந்தால் தான். குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதி என்று நீதிபதி கருதினால் மட்டுமே பிணையில் விடுதலை பெற முடியும்.

48(9) வது பிரிவுப்படி கைது செய்யப்பட்டவர் வெளிநாட்டவராக இருந்தால் அவருக்கு பிணையில் விடுதலையாகும் உரிமையே கிடையாது.

ஒரு அமைப்பு தடை செய்யப்பட்டால் நீதித்துறையின் பரிசீலனைக்கு வைக்கவேண்டியது அவசியமாகும்.

ஒரு அமைப்பை செயற்படவிடாது முடக்கும் போது அது அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைக்கு (19- 1- சி) எதிராக இருந்து விடக்கூடாது என்பதற்கு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாகும்.

அதன் காரணமாகத்தான் 1967ம் ஆண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் சட்டத்தின் கீழ் தடை செய்யப்படும் அமைப்புக்கள் கூட உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையின்கீழ் உள்ள நடுவர் மன்றம் முன் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது. ஆனால் பொடோ சட்டம் இருந்த அடிப்படை உரிமைகளையே பறித்து விட்டது.

பொடோ சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட அமைப்பை ஒரு மறு பரிசீலனைக்கமிட்டியே மறு ஆய்வு செய்யலாம். குறைந்தது மூன்று பேர் அடங்கிய கமிட்டியில் நீதித்துறையைச் சார்ந்த ஒருவர் மட்டும் இடம் பெற்றாலே போதும். அவரும் கூட ஓய்வு பெற்ற நீதிபதியாகவே இருக்கலாம். கமிட்டியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் நீதித்துறையைச் சார்ந்தவர்களாகவே இருக்கலாம். இந்த மறுஆய்வு அமைப்பு. நீதித்துறையைச் சார்ந்ததே இல்ல. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் உச்சநீதிமன்றம் அடிப்படை உரிமைப்பற்றி வழங்கிய மிக முக்கியமான தீர்ப்பை பொடோ சட்டம். தூக்கி வீசி எறிந்து விட்டது.

ஒரு பயங்கரவாத அமைப்புடன் சந்தித்தாலோ அல்லது சந்திப்புக்கு ஏற்பாடு செய்தாலோ அதற்கான உதவிகளைப் புரிந்ததாலோ அவரும் பயங்கரவாதியாகக் கருதி தண்டிக்கப்படுவார் என்று 21(2) பிரிவு கூறுகிறது. அண்மையில் ஜம்மு காஷ்மீர் மாநிலப் போராளி அமைப்பின் பிரதிநிதிகளுடன் இந்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தியது. இன்னும் பேச்சுவார்த்தைக்குத் தயாராக (25ம் பக்கம் பார்க்க)



# நம்பிக்கை வரம்புகளை உயர்த்துங்கள்

ஜயதேவா உயங்கொடை
கொழும்புப் பல்கலைக் கழக அரசியல் ஆய்வு மற்றும் பொதுக்கொள்கைத் துறைத் தலைவர்
29.06.2002 சென்னை இந்து நாளிதழில் வெளிவந்த கட்டுரை
தமிழில்: மறவன்புலவு க. சச்சிதானந்தன்,
ஐநா வின்முன்னாள் ஆலோசகர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேரடி பேச்சுத்தொடர்பு இல்லாததால் அமைதித் தீர்வு காண்பயணத்தில் தேக்கம் உள்ளது. போர் நிறுத்த உடன்பாட்டை இந்த ஆண்டின் தொடக்கத்தில் எழுதிய இரு சாராருக்கும் இடையே உள்ள பரஸ்பர நம்பிக்கையும் பாதிப்படைந்துள்ளது. அமைதி முனையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லாத சூழ்நிலையைப் பயன்படுத்தி அமைதியைக் குலைக்க விரும்பும் நச்சுப் பாம்புகள் ஊடுருவத் தொடங்கியுள்ளன. இந் நச்சுப் பாம்புகளின் கைகள் வலுப்பெற்றால் அமைதி முயற்சி தடம்புரளும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனும் அமைதி முயற்சிக்கு அரசியல் புத்துயிர் கொடுத்துத் தங்களுக்கிடையே புரிந்துணர்வை மீளமைத்துப் பொது மக்களிடையே நம்பிக்கை வலுவைக் கட்டியெழுப்ப வேண்டும்.

கவனித்துப் பேணாவிட்டால் அமைதி முயற்சி மீள முடியாத குழிக்குள் புதைந்து விடும். பாங்கொக் பேச்சு முயற்சியை அடிக்கடி பின்போட்டு வருவது நல்லதல்ல. வைகாசியில் நடைபெறுவதாக இருந்தது. ஆனிக்குப் பின் தள்ளியது. ஆடியில் கூட நடைபெறும் போலத் தோன்றவில்லை.

பாங்கொக் செல்லும் வழிக்கு இரு பெரும் தடைகள் உள்ளன. விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க அரசு தயங்குவது முதல் தடை. தடையை நீக்கிய பின்பே அரசுடன் நேரடியாகப் பேசலாம் என்பதுபுலிகளின் நிலை. கொழும்பில் உள்ள சிங்கள எதிர் கட்சிகளின் அழுத்தத்தால் அரசு இதில் ஈடாடுகிறது. பேச்சுக்கு நாட்குறித்துப் பத்து நாட்களுக்கு முன்னதாகத் தடையை நீக்கலாம் என்ற அரசின் கருத்தைப் புலிகள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

பாங்கொக்கில் எதைப் பேசுவது என்பதைப் பற்றியதே இரண்டாவது தடை. வடகிழக்கில் இடைக்கால அரசை (அல்லது) ஆட்சியை அமைப்பது பற்றிப் பாங்கொக்கில் முழுமையாகப் பேசித் தீர்க்கலாம் என்ற புரிந்துணர்வு அரசுக்கும் புலிகளுக்கும் இடையே சில மாதங்களுக்கு முன்புவரை இருந்தது. குடியரசுத் தலைவர் சந்திரிகா தலைமையில் இதற்கு எதிர்ப்புக் கிளம்பியது. பிரதமர் ரணில் இந்த எதிர்ப்பைச் சமாளிக்கத் தனது நிலையிலிருந்து தடம்புரண்டார். அடிப்படை வேறுபாடுகளை பாங்கொக்கில் பேசுவோம் என்கிறார் இப்பொழுது. பிரதமர் ரணில் ஒரு தலைப்பட்சமாகத் தடம் புரண்டதில் புலிகளுக்கு வருத்தமுண்டு. அமைதி முயற்சி தொடர்பாகக் கடந்த சில வாரங்களாகவே புலிகளின் உயர்மட்டத் தலைமை மௌனமாக இருப்பது அரசுக்கு விடுக்கும் எதிர்மறைச் செய்தி. புலிகளுக்கும் அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள தொடர்பு இடைவெளியே இன்றைய நம்பிக்கைக் குறைவுக்கு அடிப்படை. புலிகள் விடுக்கும் முக்கிய குறிப்புணர்த்தல்களை அரசு மதிக்காமல் உள்ளமையும் இந்த நம்பிக்கைக் குறைவை வலுப்படுத்துகிறது.

மூன்று முக்கிய குறிப்புணர்த்தல் களைப் புலிகள் விடுத்தனர். ஏ9 நெடுஞ் சாலையைத்திறந்தனர். தமது கட்டுப்பாடுள்ள வீதிகள் தோறும் உள்ள கண்ணி வெடிகளை அகற்றினர். இடைக்கால அரசு (அல்லது) ஆட்சியை அமைக்கலாம் என முன்மொழிந்தனர். ஏ9 நெடுஞ்சாலையைத் திறந்தமை, முக்கிய வீதிகளில் கண்ணி வெடியை அகற்றியமை ஆகிய இரண்டும் முக்கிய சலுகைகள். அரசியலாரும், படைவல்லுனரும் வியக்கும் சலுகைகள். வன்னியில் தமது பாதுகாப்பு அரண்களை மலடாக்கி, அரசின் திடீர் தாக்குதலை எதிர்கொள்ளத் திணற வேண்டிய புலிகளின் மிகப் பெரிய சலுகைகள் என்றே இவற்றைக் கருத வேண்டும். 1997 தொடக்கம் ஏ9 நெடுஞ்சாலையைக் கைப்பற்றப் பல படையெடுப்புகளை நிகழ்த்தித் தோல்வி கண்டது சந்திரிகா அரசு. இந்த நெடுஞ்சாலையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அதிக விலை கொடுத்து வந்தனர் விடுதலைப் புலிகள். இந்த நெடுஞ்சாலை அரசு கைக்கு மாறினால் புலிகளின் பாதுகாப்பு அரண்கள் பலவீனமாகும். நீண்ட இச்சாலையின் இரு மருங்குகளிலிருந்து அரசுப் படைகள் வன்னிக்குள் ஊடுருவும் வாய்ப்பு அதிகமாகும். புலிகளும் திணற வேண்டியிருக்கும்.

*போர் முனையில் உங்களை எதிர்கொள்ள விரும்பவில்லை, பேச்சு முனையில் உங்களைச் சந்திக்க விரும்புகிறோம்* எனத் தெளிவாக விடுதலைப் புலிகள் அரசுக்குக் கூறியுள்ளனர். படை வலுவைக் குறைத்து அரண்களை மலடாக்கிப் பேச்சுக்காகப் பல தியாகங்களை செய்துள்ளோம் எனப் புலிகள் உலகுக்கு உணர்த்தி வருவதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அடிப்படை வேறுபாடுகள் பற்றிய சர்ச்சைக்குள் மூழ்கினால் அமைதி விரைவில் கிட்டாது. அரசியலமைப்பு விவாதங்களைக் கிளப்பி விடும். எனவே தான் இடைக்கால அரசு (அல்லது) ஆட்சி பற்றிப் பேசுவது நல்லது. ஆனால், அரசு இந்த வழிக்குப் போக விரும்பவில்லை. இது வியப்பாக இருக்கிறது. பிரபாகரன் நீட்டும் கையைப் பற்றிக் கொள்ளாமல் சிங்களப் பாராளுமன்ற எதிர்க் கட்சிகள் வைத்த பொறிக் கிடங்குக்குள் ரணில் விக்கிரமசிங்கா விழக்கூடும். சிங்கள சமூகத்தின் அரசியல் சக்திகள் இன்றைய நிலையிலும் சரி அடுத்த சில ஆண்டுகளுக்கும் சரி, சிங்கள - தமிழ் பிரச்சனைக்கு அரசியலமைப்பு மூலம் தீர்வு காணக் கொழும்பில் உள்ள எந்த அரசுக்கும் ஒத்துழைப்புக் கொடுக்க மாட்டார்கள். விடுதலைப் புலிகளுடன் ஏற்படும் ஒப்பந்தத்தை நடைமுறைக்குக் கொண்டுவர அரசியலமைப்பு அடிப்படை மாற்றங்கள் தேவை. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தால் மட்டுமே அரசியலமைப்பை மாற்றலாம். எதிர்க்கட்சியாகச் சுதந்திரக் கட்சியோ, ஐக்கிய தேசியக் கட்சியோ எந்தக் கட்சி இருந்தாலும் இத்தகைய அரசியலமைப்பு மாற்றத்திற்கு எப்பொழுதும் உடன்படா. கொழும்பு நாடாளுமன்றத்தில் சிங்களவரின் இந்த எண்ணிக்கை விளையாட்டு, தமிழ் இனப் படுகொலைக்கான சாவுடனான விளையாட்டு என்பதை விடுதலைப்புலிகள் நன்கு அறிவார்கள். எனவே தான் இடைக்கால அரசு பற்றிப் பேசுவோம் என்கிறார்கள். 1987இல் இலங்கை - இந்திய உடன்பாடு மற்றும் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் என்பனவற்றுக்குள் இடைக்கால அரசை நடத்திக் கொள்ளலாம் என விடுதலைப் புலிகள் கருதுகிறார்கள்.

விக்கிரமசிங்காவின் அரசுக்கு உள்ள அரசியல் அழுத்தங்களை விடுதலைப் புலிகள் சரியான அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். தமிழ் அரசியலாரைப் பிரபாகரன் தன் கட்டுக்குள் வைத்திருப்பதைப் போல சிங்கள அரசியலார் பிரதமர் ரணிலின் கட்டுக்குள் இல்லை. விடுதலைப் புலிகளுடன் அரசியல் உடன்பாடு காண்பதை நேரிடையாக எதிர்க்கும் பல சக்திகள் சிங்கள அரசியலாரிடம் உள்ளன. ஆழப் பிளவுபட்டும் அச்ச உணர்வுடனும் செயற்படும் சிங்களப் பெரும்பான்மை அரசியலார் தம் இன எதிரிகளான தமிழருடன் இணக்கம் காண முடியாமல் உள்ள நிலையை மாற்றும் பகீரதப் பிரயத்தனத்தில் ரணில் விக்ரமசிங்கா இப்பொழுதும், சந்திரிகா இதற்கு முன்பும் தளராது ஈடுபட்டதை விடுதலைப் புலிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். புரிந்துணர்வு உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதில் பின்னடைவுகள் உள்ளதான அறிக்கைகள் விடுதலைப் புலிகளையோ, தமிழீழ நாட்டினத்தையோ சந்தேகப் பிராணிகளாக மாற்றி விடக் கூடாது. உலக அரசியல் அரங்கின் அண்மைய போக்கையும் தெற்கு ஆசியச் சூழ்நிலையையும் விடுதலைப் புலிகள் உள்வாங்க வேண்டும். பேச்சு முனையிலிருந்து விலகிப் போர் முனைக்கு போவதற்கு இது ஏற்ற தருணம் அல்ல.

அமைதி முயற்சி தளர்ந்துள்ளது. அதற்கு வலிமை சேர்க்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியும், விடுதலைப் புலிகளும் புதிதாக அரசியல் கருத்துப் பரிமாற வேண்டும். இது இன்றைய சூழ்நிலையில் உடனடித் தேவையாகும். சிக்கலைத் தீர்ப்பதற்கு அச்சாணியாக விளங்கும் பரஸ்பர நம்பிக்கையும், அரசியல் தொடர்புகளும் கடந்த சில மாதங்களாக மிகக் குறைந்து போயுள்ளன. நோர்வேயின் உதவி வரப்பெல்லையைத் தாண்ட வேண்டுமா என்பதையும் எடுத்து நோக்க வேண்டும்.

இரு பகுதியாரும் நோர்வேயின் உதவியுடன் தொடர்பாக இருக்கிறார்கள். ஆனால், அரசியல் ஆய்வுகளையோ, விளக்கங்களையோ செய்து கொடுக்கும் பணி நோர்வேக்கு இல்லை. இன்றைய தடங்கலிலிருந்து விடுபட இரு பகுதியாரும் நோர்வேயின் உதவி எல்லையைத் தாண்ட வேண்டும்.

பாங்காக் பேச்சு வழிமுறையைவிட வேறொரு வழிமுறையை இரு சாராரும் நாடி, நேரடியாகப் பேச வேண்டும். ஏனெனில் பாங்காக் பேச்சு மீண்டும் மீண்டும் பின் போடப்பட்டு வருகிறது. பேச்சுமுனை தான் சாத்தியமானது, ஏற்றது, நடைமுறைக்குரியது என்பதைத் தங்களுக்கும், தங்களின் அரசியலாருக்கும்இருபகுதியாரும் நியாயப் படுத்த வேண்டும். இதற்காக இப்பொழுது இருக்கும் வரம்புகளைத் தாண்டிப் புதிய வரம்புகளை இருபகுதியாரும் அமைத்துக் கொள்ள வேண்டும். புதிய வரம்புகளை எந்த அளவில் கட்ட வேண்டும் என்பதையும், தங்களுக்குள் எவ்வளவு நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் இருபகுதித் தலைவர்களும் அவரவர்களுடைய ஆலோசகர்களும் மட்டுமே தீர்க்கலாம். குடிமக்களாகிய நாம் நம்பிக்கையைத் தளர விடாமல், எதுவும் நடக்கலாம் என்ற ஏக்கத்துடன் இருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

WEXFORD CASH MART
FINANCIAL SERVICES
• MONEY TRANSFER (WORLDWIDE) • CHEQUES CASHED
பணமாற்றுச் சேவையில் ஒரு புதிய அலை
தொடர்புகளுக்கு கணேசமூர்த்தி
1823A Lawrence Ave. East, Scarborough, ON M1R 2Y3
TEL: (416) 285-7709 • FAX: (416) 752-1548

கொழும்பு, யாழ் மாவட்டம் முழுவதும் இல்லம் தேடிப் பணம் கொடுக்கின்றோம்.
மற்றும் வன்னி மாவட்டம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஸ்கந்தபுரம், புதுக்குடியிருப்பு மல்லாவிக்கும் எமது சேவை

உங்கள் பணம் உங்கள் உறவினரிடம் உயர்ந்த பெறுமதியில் ஒப்படைக்கப்படும்

• தன்னிகரற்ற சேவை
• நம்பமுடியாத சேவை
• ஒப்பற்ற சேவை
• இணையற்ற சேவை

MONEY ORDER
வசதி உண்டு

WESTERN UNION AGENCY
10 நிமிடத்தில் உலகின் எப்பாகத்திற்கும் பணம் அனுப்பலாம்

தொலைபேசி, மின் அஞ்சல், தொலைநகல் எமக்குத் துணை செய்வதில்லை. காடு, மேடு, கானகம் கடந்த சேவை. போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களில் வாழும் உங்கள் உறவினர் இல்லம் தேடிப் பணம் கொடுக்கின்றோம். பணம் கொடுத்த பின் பதில் பெற்றுத் தருகின்றோம்.

# கொலை வெறி மனிதர்களும் தொலைதூர நம்பிக்கையும்

"இந்த நாட்டில் நிலையான அமைதி ஏற்பட ஒரே வழி தான் உண்டு. அது விடுதலைப் புலிகளை யுத்தத்தில் தோற்கடித்து முற்றாக அழிப்பதேயாகும்" இவ்வாறு கூறியிருப்பவர் வேறு யாருமல்ல பௌத்த சிங்களப் பேரின வாதக்கட்சியான சிஹலஉறுமயவின் பொதுச் செயலாளரான திலக் கருணாரத்ன.

சிங்கள மக்களால் முற்றாகத் தூக்கியெறி யப்பட்ட சிஹல உறுமய தற்போதைய புரிந் துணர்வு உடன்படிக்கைக்கு முற்றிலும் எதிரானதோர் அமைப்பாகும்.

"சமாதானத்திற்கான யுத்தம்" சந்திரிகாவின் கோஷத்தையே சற்று மாற்றி "யுத்தத்தின் மூலமே சமாதானம்" என்ற கொள்கையை வலியுறுத்தும் சிகல உறுமயவின் கருத் தின்படி புருந்துணர்வு உடன்படிக்கை தமிழீழத்திற்கான பாதையை அமைத்துக் கொடுக்கும் ஒரு சிங்கள பௌத்த மக்களு க்கு எதிரான நோர்வேயின் ஆலோசனை யுடன் கூடிய வதி நடவடிக்கை என்றே பிரச் சாரம் செய்யப்படுகின்றது.

தமிழர் தமது தாயகக் கோட்பாட்டை முற் றாக நிராகரிக்கும் சிகல உறுமய ஐ.தே. முன்னணியை தேசவிரோத ஆட்சியாளரென் றும் பொ.ஐ.முன்னணியை சந்தர்ப்பவாதிகள் என்றும். ஜே.வி.பியினரை கொள்கையற்றோ ரின் கும்பல் என்றும் வர்ணிக்கிறது. இதன் மூலம் சிகல உறுமய மட்டுமே சிங்கள பௌத்த ஸ்ரீலங்காவில் பற்றுமிக்க தேச பக்தர்களைக் கொண்ட ஒரேயொரு அமை ப்பு என்று கருத்தினை வெளிப்படுத்த இக் கட்சியினர் முயல்கின்றனர் என்றே கூற வேண்டும்.

பாராளுமன்றத்தில் ஒரேயொரு ஆசனத்தைக் கூட கைப்பற்றிக் கொள்வதற்கு இந்த சிங்களதேச பக்தக் கட்சிக்கு வாக்களித்த சொற்ப தொகையான வாக்காளர்களை விட வும் ஏனைய சிங்கள மக்கள் அனைவரையும் இவர்கள் தேசவிரோதிகள் என்றும் சந்தர்ப்ப வாதிகள் என்றும் கொள்கையற்றோர் என் றுமா கூறப்போகின்றார்கள்?

அண்மையில் ஆங்கில வார இதழ் ஒன்று க்கு திலக் கருணாரத்தின அளித்த செவ்வி யொன்றில் ஸ்ரீலங்காவின் இன்றைய நிலை குமுறுவதற்குக் காத்திருக்கும் எரிமலை போன்றதென வர்ணித்துள்ளார்.

இங்கே தான் ஒரு கேள்வி எழுகின்றது. "எரிமலை" என்று இவர் குறிப்பிடுவது எதை? இன்றைய ஸ்ரீலங்கா ஆட்சியாளரு க்கும் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கும் எதிரான மக்கள் சக்தியையா? அப்படி இருப்பதற்கான சாத்தியமே கிடையாது.

அண்மையில் அரசுக்கும் புரிந்துணர்வு உடன்பாட்டுக்கும் எதிராகத் தென்பகுதியில் மேற்கொண்ட மாபெரும் ஆர்ப்பாட்டங் களில் கலந்து கொண்டவர்களின் தொகை சில நூறு மட்டுமே என்ற செய்தியானது சிகல உறுமயவின் மக்கள் ஆதரவுப் பல வீனத்தை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

ஆகவே திலக் கருணாரத்ன கூறும் எரிமலை வர்ணிப்பின் அர்த்தம் தான் என்ன?

இந்தச் சமயத்தில் நினைவுக்கு வருவது பிந்துனுவெவ படுகொலைச் சம்பவங்கள். இந்தப் படுகொலைச் சம்பவத்தின் பின்னணி யில் சிகலஉறுமயகட்சி இருக்கிறதென்பது பகிரங்கமான உண்மையாகும்.

"கையாலாகாதவன் காடைத்தனம் செய்வான்" என்ற பழமொழியை நினைவு கூர்வது இச்சமயத்தில் தவிர்க்க முடியாத விடயமா கிறது. எனவே அடுத்த கட்டமாக சிகல உறுமய தென்பகுதியில் தமிழ்மக்களுக்கு எதிரான இனக்கலவரம் ஒன்றினை ஏற்படுத்தி தற்போது நடைமுறையில் இருக்கும் அமைதி நிலையைக் குழப்பவும் சமாதான நகர்வுகளைச் சிதைக்கவும் மிகவும் தீவிர மாக இயங்கி வருவதாக தென்பகுதிச் செய்தி கள் கிசுகிசுக்கின்றன.

இவர்களின் இந்த நடவடிக்கையில் சில இனவாத புத்தபிக்குகளும் பின்னணியில் இருப்பதாகத் தெரிகிறது. அதேவேளை மிக அண்மைக்காலத்தில் சிகல உறுமயவுடன் தொடர்புகளை மிக இரகசியமாக மேற் கொண்டு வருகின்ற அயல் நாடொன்றும் இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தையைக் குழப்பும் நோக்குடன் மிக நுணுக்கமாக ஆலோசனை வழங்கி வருவதாகவும் கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள வார இதழ் ஒன்று கூறுகின்றது.

இது எந்தளவுக்கு உண்மை என்று தெரியாவிட்டாலும் இன்றைய ஸ்ரீலங்காவின் ரணில் ஆட்சியைக் குழப்ப சமாதான நகர்வுகளை சிதைக்க சிங்களப் பேரினவாதி களும் சந்திரிகாவும் அவரது தலைமையின் கீழான பொ.ஐ.முன்னணியினரும் அவரது தற்போதைய நெருங்கிய சகாக்களும் அவ ரது கணவர் விஜயகுமாரதுங்காவைக் கொன்ற கொலையாளிகள் என்று அவரா லேயே விரல் சுட்டிக்காட்டி குற்றம் சாட்டப் பட்டவர்களுமான ஜே.வி.பியினரும் பல் வேறு வழிகளில் பகீரதப் பிரயத்தனத்தை மேற் கொண்டு வருகின்றார்கள் என்பது மட்டும் உண்மையாகும்.

இந்த வகையில் சிங்களக் கிராமங்களில் வாழும் தமிழ்மக்களுக்கு எதிரான கலவரங் களை மேற்கொள்வதன் மூலமும் சிறை களுக்குள்ளும் புனர்வாழ்வு மையங்கள் என்று அழைக்கப்படும் தடுப்பு காவல் நிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழ்மக்கள் மீது காடைத்தன த்தை அதிகாரிகளின் அனுசரனையுடன் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கு சினத்தை ஏற்படுத்தி போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் நிலைக்கு அவர்களை நிர்ப்பந்திக்கும் கீழ்த்தரமான சதிமுயற்சியில் சிகலஉறுமய ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

தென்பகுதியில் தமிழ்மக்களுக்கு எதிராக அவ்வப்போது ஒட்டப்படும் அநாமதேயச் சுவரொட்டிகள் சிங்கள இனவெறியாளரை ஆத்திரமூட்டச் செய்வனவாக உள்ளதாகக் கருதப்படுகின்றது. இதன் பின்னணியிலும் சிலக உறுமயவின் கை இருப்பதாகக் கூறப படுகின்றது. கடந்த காலங்களில் இவர்கள் இதே மாதிரியான சிங்கள தேசபக்த கைங் கரியங்களில் ஈடுபட்டவர்கள் என்பது பலரு க்குத் தெரிந்த விடயமாகும்.

ஸ்ரீலங்கா இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற சில இராணுவ அதிகாரிகள் சிகல உறுமயவின் உறுப்பினர்களாக உள்ளனர். லெப்.கேணல் அனில் அமரசேகர, மேஜர் பிரணகம, மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகர போன்றோரை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். இப்போது இராணுவத்தில் இருந்து தப்பியோடிய படையினரை இனங்கண்டு அவர்களை சிகல உறுமய இத்தகைய நடவடிக்கைகளுக்கு பயன்படு த்த முனைவதாகவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை இத்தகைய செயற்பாடுகளுக்கு தேவைப்படும் நிதி மற்றும் ஆலோசனை வளங்கள் அயல் நாடொன்றின் ஊடாகவும் வெளிநாடுகளில் வாழும் சிங்கள பௌத்த இனவெறியர்கள் மற்றும் அமைப்புக்கள் மூலமாகவும் கிடைப்பதாகவும் தெரிய வந்துள்ளது. ஒரு காலத்தில் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை தீவிரமாகக் கொண்டிருந்த சிகல உறுமயக்காரர்கள் இப்போது (இந்தியாவின் உதவியை ஸ்ரீலங்கா இராணுவத்திற்குப் பெற்றுக் கொடுத்து பலாலியைக் காப்பாற்ற வேண டும் என்று பலாலி மீதான தாக்குதல் அச்சம் எழுந்த காலத்தில் குரல் கொடுத்ததை நினைவுபடுத்திக் கொள்வது நல்லது) இந்திய ஆதரவு நிலைப்பாட்டை பகிரங்க மாகவே எடுத்துள்ளமையின் காரணம் உற்று ஆராயப்பட வேண்டியதொன்ற தாகும்.

எல்லாவற்றிலும் மேலாக 1960 களின் ஆரம் பத்தில் தீவிர சிங்களவகுப்புவாதியாக விளங்கிய தமிழரின் தோலில் செருப்புத் தைத்துப் போட்டு நடந்தால் தான் எனது ஆத்மா சாந்திபெறும் என்று பச்சை இனவாதம் கக்கிய கே.எம்.பி.ராஜரத்ன சிகல உறுமயவின் ஞானத்தந்தையாகியுள்ள நிலையானது தமிழ்மக்களுக்கு எதிராக அவர்கள் எதனையும் செய்யத் தயங்க மாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவ தாக அமைந்துள்ளது.

இவையனைத்தையும் ஒன்று சேர வைத்து ஆராயும் போது சிகல உறுமயவின் பொதுச் செயலாளர் கருணாரத்னவின் பேட்டியில் சொல்லப்பட்டுள்ள விடயம் தெரிவிக்கும் சமாதானத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கும் செய்தியைப் புறந்தள்ளி விட முடியாது.

ஒரு சிறு பொறியை பெருந்தீயாக கொழுந்து விட்டு எரிய வைக்கும் பேரினவாத வெறி இந்த மண்ணில் தமிழ்மக்களுக்கான உரிமைகள் குறித்த நியாயபூர்வமான அரசி யல் தீர்வொன்றை எட்டும் வரையிலான சமா தான நடவடிக்கைகளுக்கு இடம்கொக்குமா என்பது சந்தேகம் தான்.

இதேவேளை மற்றுமொரு இனவாதக் கட்சியான புதிய வடிவம் கொண்டு வரும் முன்னாள் சமதர்மவாதிகளான ஜே.வி.பியின ரின் நடவடிக்கைகள் சமாதான முயற்சி களுக்கான மற்றொரு மிக மோசமான அச்சுறுத்தலாக வளர்ந்து வருகிறது.

சந்திரிகாவின் ஆசீர்வாதமும் அனுராவின் தோழமையும் ஜே.வி.பியினரை ஆடாத ஆட்டமெல்லாம் ஆடவைக்கிறது என்றே கூறவேண்டும்.

அக்காவின் ஆதிக்க வெறியும் தம்பியின் ஆட்சி ஆசையும் பண்டா பாரம்பரியத்திற் கேயுரிய இனவாத சிந்தனையின் எச்சசொச்ச மாக இப்போது பேயுருக் கொண்டுள்ள தையே இருவரினதும் அண்மைக்கால பேச்சுக்களும் செயல்களும் தெளிவாகக் காட்டுகிறது.

ஜே.வி.பியைக் கைப்பொம்மையாக வைத் துக் கொண்டு ரணிலின் ஆட்சிக்கும் சமாதான முயற்சிக்கும் எதிரான மற்றொரு கிளர்ச்சியை ஏற்படுத்த சந்திரிகா மேற் கொள்ளும் தந்திரோபாயங்கள் அவரின் சுய வடிவமான இரத்த வெறிகொண்ட கழு கொன்றின் தோற்றத்தை இப்போது இனங் காட்டத் தொடங்கியுள்ளது. அவர் குறித்த "சமாதானப்புறா" பற்றிய மாயத் தோற்றம் முற்றாக மறைந்தே போய்விட்டது.

ஒருபுறம் சிகல உறுமய மறுபுறம் ஜே.வி.பி. இடைநடுவில் சந்திரிகாவும் அவரது சகாக்களும் என அமைதிப்புறாவைக் குறி வைத்து குதறக் காத்திருக்கும் இந்தச் சமயத்தில் ரணிலும் அவரது முக்கிய அமைச்சரவைச் சகாக்களும் முரண்பட்ட நோக்குடனான பயணங்களை வெளிநாடுகளு க்கு மேற்கொண்டு வருகின்றனர்.

ரணில் வெற்றிகரமாக 200வது நாளை நெருங்கிக் கொண்டிருக்கும் தனது ஆட்சிக்கால சாதனைகள் குறித்தும் சமா தான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்தும் இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து, பெரு மையுடன் விளக்கிக் கூறி அரசைக் கொண்டு நடத்துவதற்கான நிதியுதவி களைக் கோரிவரும் அதேவேளை அந்தந்த நாடுகளுடன் பாதுகாப்புடன் தொடர்பு கொண்ட அதே சமயம் பொருளாதாரத்தை யும் குறியாக் கொண்ட ஒப்பந்தங்களையும் ரகசியமாக திடீர் திடீர் என்று மேற்கொண்டு வருகிறார்.

அவரது அமைச்சர்களான மிலிந்தமொற கொட, திலக் மாரப்பன போன்றோர் போராயுதக் கொள்வனவுகள் உட்பட முப் படையினரையும் வலுப்படுத்தும் பன்முகப பட்ட உதவிகளைப் பெறும் நோக்குடனான வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களின் வெளி நோக்கச் சமிஞ்சைகள் அமைதி, சமாதானம் தீர்வு என்ற வகையில் தோற்றம் காட்டினாலும் ஆழ்ந்த உள் நோக்கங்கள் சந்தேகத்திற்குரிய சிதம்பர ரகசியமாகவே உள்ளன. நோர்வேயின் சமாதான நடவடிக்கை அனுசரணையாளர் கள் மட்டும் லண்டன், கொழும்பு, வன்னி நோர்வே என்று பறந்து பறந்து ஏதோ பேசிக் கொள்கிறார்கள் போலத் தெரிகிறது.

காலம் கடந்து கொண்டே போகிறது. புரிந்துணர்வு ஏற்பட வேண்டிய படை யினரிடம் குறிப்பாக கடற்படையினரிடம் அது இன்னமும் புரியப்படாத ஒன்றாகவே உள்ளது.

லண்டனிலும் அமெரிக்காவிலும் இந்தியா விலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் சமாதானம் பற்றி ரணில் நடாத்தி வரும் மந்திராலோசனைகளின் உள்நோக்கம் அவ ருக்கே தெரிந்த ரகசியமாக இருக்கிறது.

ஊடகங்கள் ஒவ்வொன்றும் ஊகங்களை செய்தியாக்கி குழப்ப வைப்பதில் வெற்றி கண்டு வருகின்றன.

ஏ9 யாழ்.கண்டி நெடுஞ்சாலையில் புதிய வீதியில் இடைவிடாது விரையும் தடை நீங்கிய போக்குவரத்து வாகனங்கள் எழுப்பும் புழுதி மண்டலத்தினூடாக சமா தானப் புறாவின் வருகையை தேடும் கண் களுக்கு புழுதியை மேலும் கிளப்பியபடி இறங்கி, ஏறி பறந்து வரும் உலங்கு வானூர்த்தி மனிதர்கள் மட்டுமே அடிக்கடி தென்படுபவர்களாக உள்ளனர்.

## வை.கோ.வை விடுவிக்க வேண்டும்

### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்அறிக்கை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்மையாகக் கண்டிக்கின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தேசிய சக்தி விடுதலைப் புலிகளே என்றும் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு தனித் தமிழீழமே தீர்வு என்றும் ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் எம் சார்பாக குரல் கொடுத்து வந்த எமது உடன் பிறப்பான வை.கோ. இன்று எமக்காக சிறையில் வாடுகின்றமை ஈழத்தமிழர்கள் அனைவரையும் மிகவும் வேதனைக்குட்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் பேய் ஆட்சி நடத்தும் ஜெயலலிதா, தனது அரசியல் பழிவாங்கல்களுக் காகவும் அரசியல் லாபங்களுக்காகவும் ஆயிரம் ஆயிரம் மாவீரர்களின் உயிர் தியாகத்திலும் பல்லாயிரக்கணக்கான போராளிகளினதும் பொது மக்களினதும் இரத்தத்தினாலும் வளர்த்தெடுக்கப் பட்ட எமது விடுதலைப் போராட்டத்தை கொச் சைப்படுத்த நினைப்பதையும் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாளர்களை பழிவாங் கவோ தடை செய்யவோ நினைப்பதையும் எந்தவொரு தமிழனும் தாங்கிக் கொள்ள முடி யாது. எமக்காக இன்று சிறையில் வாடும் வை.கோ.விற்கு எமது முழு ஆதரவினையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

# மரண அறிவித்தல்



மலர்வு
23.09.1942

உதிர்வு
13.07.2002

## திருமதி செந்திரு லிங்கரட்ணம்

*வல்வெட்டித்துறை சிவபுரவீதி வெள்ளை மாளிகையைச் சேர்ந்த திருமதி செந்திரு லிங்கரட்ணம் அவர்கள் 13.07.2002 சனிக்கிழமையன்று கனடாவில் காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற வர்ணகுலசிங்கம் லிங்கரட்ணத்தின் அன்பு மனைவியும்*

*காலஞ்சென்றவர்களான திரு.திருமதி முத்துக்குமாரசாமி தம்பதிகளின் அன்புப் புதல்வியும்*

*காலஞ்சென்ற திரு.திருமதி வர்ணகுலசிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும்*

*றோகன் வர்ணகுலசிங்கம் (லண்டன்) ரமேஷ் வர்ணகுலசிங்கம் (நஷனல் Car Rental கனடா) கயல்விழி (கனடா) பூங்குழலி (அமெரிக்கா) தேன்மொழி (கனடா) கணேஷ் வர்ணகுலசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும்*

*கலைச்செல்வி (லண்டன்) நிர்மலா (கனடா) பாலரஞ்சன் (கனடா) சுரேஷ்குமாரன் (அமெரிக்கா) டாக்டர் விஜயரஞ்சன் (கனடா) கலையரசி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும்*

*வினோதன். ராகுல். பிரவீன். அக்ஷயா. பிரகதீஸ். பிரஹம்யா. சதீஷ்குமாரன். சப்ரீனா செந்திரு. குறிஞ்சிக்குமரன் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.*

*அன்னாரின் பூதவுடல் யூலை மாதம் 15ம்திகதி (இன்று) மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரை இலக்கம் 4164 SHEPPARD AVE EAST இல் அமைந்துள்ள OGDEN FUNERAL HOME இல் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் யூலை மாதம் 16ம்திகதி செவ்வாய்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று DONMILLS SOUTH OF STEELES இல் அமைந்துள்ள HIGHLAND MATORIUM த்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளு மாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.*

*தகவல்: ரமேஸ் (416) 299 - 9900 (நஷனல் Car Rental கனடா) றோகன். கணேஷ் 011 44 208 4713176 (லண்டன்) கயல்விழி பாலரஞ்சன் (416) 297 - 4138 பூங்குழலி சுரேஷ் (843 629 1664 (அமெரிக்கா) தேன்மொழி விஜயரஞ்சன் 902 431 - 2454 (Halifax)*

# இவர்கள் இப்படிச் சொன்னார்கள்

## 'இரண்டாம் தரப் பிரஜைகள் என யாரும் இங்கு இல்லை'



**- மன்னாரில் தகவல் தொழிநுட்ப பூங்கா ஒன்றைத் திறந்து வைத்து புனர்வாழ்வு அகதிகள் மீளக்குடியமர்தல் அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா தெரிவித்தது.**

இலங்கையில் இரண்டாம் தரப் பிரஜைகள் என்று எவரும் கிடையாது. கடந்த ஆட்சிக்காலத்தில் தென்பகுதி மகக்ளுக்கு இருந்த சுதந்திரம் வடக்கு கிழக்குப் பகுதி மக்களுக்கு மறுக்கப்பட்டது உண்மை தான். வடக்கு கிழக்கு மக்களும் இலங்கையின் ஏனைய பகுதி மக்களும் எமது அரசாங்கத்தால் ஒரே மக்களாகத் தான் கணிக்கப்படுகின்றார்கள். எமது நாட்டில் விரைவில் நிரந்தர சமதானம் ஏற்படும்.அதற்காக நாம் ஒவ்வொருவரும் கடுமையான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். வடக்கு கிழக்குப் பகுதிகளில் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கமும் தயாராகவே உள்ளது. இதனை 24 மணி நேரத்தில் செய்துவிடமுடியாது. இதற்கு நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்படவேண்டும்.

## 'புரிந்துணர்வு ஒப்பந்தப்படி மண்ணைப் பாதுகாப்பதற்கு நாம் என்ன செய்துள்ளோம்?'

**- ஈழவிடுதலை அணியைச் சேர்ந்த ம.க.ஈழவேந்தன் கொழும்புத் தமிழ்ப்பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றிலிருந்து.**

திருகோணமலை மண்ணில் பிரிக்கமுடியாத அங்கமாக விளங்கும் திரியாயில் நடைபெறும் சிங்கள இராணுவ வெறியாட்டங்கள் தலை சுற்ற வைக்கின்றன.புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் எமது மண்ணைக் காக்க எதை நாம் நிலைநாட்டினோம் என்ற கேள்வி எம்மை எதிர்நோக்கியுள்ளது. ஒரு இனத்தின் உயிர்நாடியாக விளங்குவது அதனுடைய மரபுவழித்தாயகம். பாரம்பரிய பிரதேசம் .அதனை மீட்கமுடியாவிட்டால் அங்கு சென்று வாழமுடியாவிட்டால் அதன் பொருள் என்ன? திரியாயின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கும்போது அகதிகளாக வெளியேற்றப்பட்ட ஆயிரக்கணக்கான மலையக மக்கள் இங்கு குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதன் மூலமாக மலையகத்தமிழ் மக்களுக்கும் உள்ளூர் தமிழர்களுக்கும் இடையே பிரிக்கமுடியாத ஒரு பிணைப்பு ஏற்பட்டு விட்டது. எனவே திரியாயைப் பாதுகாப்பதற்கு எமது பங்களிப்பையும் உணர்ந்து செயற்படவேண்டும்.

## "ஆறு மாத காலத்துக்குள் மக்களின் நம்பிக்கையை ஐதேக இழந்துவிட்டது'

**- பொதுஜன முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம பத்திரிகையாளர்கள் மத்தியில் தெரிவித்ததிலிருந்து**

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த ஆறு மாத காலங்களுக்கிடையில் மக்களின் நம்பிக்கையை முற்றாக இழந்துள்ளது. அரசு மக்களை பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. தேர்தலின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மறந்து செயற்படுகின்றார். நாட்டின் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. எரிபொருள், மருந்துவகை,உணவுப்பொருட்கள், பஸ் கட்டணங்கள் என்பன கடுமையாக அதிகரித்துள்ளன. நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி மக்கள் படும் கஷ்டங்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஆணையைப் பெற்றுக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஐதேக இன்று மக்களை ஏமாற்றிவிட்டது. இதனால் மக்கள் அரசின் மீது நம்பிக்கையை இழந்துள்ளார்கள்.

## 'இனங்களுக்கு சமவாய்ப்பு வழங்கப்படுதல்வேண்டும்'

**- முன்னாள் யாழ்.மாவட்ட அமைச்சர் யூ.பி.விஜயக்கோன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் தெரிவித்தது.**

இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் சகல இன மக்களுக்கும் சமவாய்ப்பு வழங்கப்படவேண்டும்.இதன் மூலமாகவே உண்மையான சமாதானத்தை எட்ட முடியும்.எல்லோரும் யுத்தம் இல்லாத சமாதான நாட்டைத் தான் விரும்புகின்றோம்.யாழ்ப்பாண மக்களும் யுத்தத்தால் பல்வேறு இழப்புக்களைச் சந்தித்ததுடன் மட்டுமன்றி உறவுகளைப் பிரிந்தும் உள்ளார்கள். இன்றைய அரசு சமாதானத்துக்காகத் தான் உழைத்து வருகின்றது. அனைவரும் ஒன்றுபட்டால் நாம் இந்த ஆண்டிலேயே சமாதானத்தை எட்டிவிடமுடியும். நாம் ஒரு சொல்லை மீண்டும் மீண்டும் உச்சரிப்போமாயின் அச்சொல் நிஜமாகிவிடும். நாம் இன்றைய காலத்தில் அவ்வாறு உச்சரிக்கவேண்டிய சொல் சமாதானம்எ ன்பதாகும்.

## "தேர்தலுக்கு முகம் கொடுக்காமல் அதிகாரத்தைக் கைப்பற்றுவோம்"

**- ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன நீர்கொழும்பில் நடைபெற்ற பொது வைபவம் ஒன்றில்.**

தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்காது ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் தற்போது உருவாகிக்கொண்டிருக்கின்றன. ஆகவே விரைவில் நாம் ஆட்சிக்கு வருவோம். எமது கட்சி தொடர்பான பொய்ப்பிரச்சாரங்களுக்கு மக்கள் ஏமாறாமல் இருக்கவேண்டும்.ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இன்று முக்கியமான ஒருகாலகட்டத்தைக் கடந்து கொண்டிருக்கின்றது. அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களிடையே குத்துவெட்டு . ஒருவர் மீது மற்றொருவர் குற்றச்சாட்டுக்களை சுமத்திக்கொண்டு அடிபட்டுக்கொண்டுள்ளார்கள்.விலைவாசி அதிகரிப்பு தொடர்பாக அவர்களுக்கு இடையே கருத்துவேறுபாடுகள் தோன்றியிருக்கின்றன.

இந்த நிலையில் ஆட்சியமைப்பதற்கான சந்தர்ப்பம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பக்கம் திரும்பிக்கொண்டுள்ளது.

## 'புலிகள் மீதான தடையை நீக்க வேண்டுமானால்..?'



**-பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜெயரட்ண கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தது**

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளை எந்தவிதமான சிக்கலுமின்றி முன்னெடுத்துச் செல்லும் விதத்தில் நடத்த முடியுமானால் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்குவது பற்றி பொதுஜன முன்னணி எதிர்ப்புத் தெரிவிக்காது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம் பெறும் போதே தடையை நீக்குவது பற்றி பொதுஜன முன்னணி எதிர்ப்புத் தெரிவிக்காது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும்போதே தடைநீக்கம் தொடர்பாக ஆராயப்படவேண்டும்.என்றாலும் நிரந்தர சமாதானம் தொடர்பில் புலிகள் இயக்கத்தினரிடையே ஆயத்தம் இல்லையெனில் எந்த வகையிலும் தடை நீக்கப்படக்கூடாது. புலிகள் இயக்கத்தினர் முன் வைத்துள்ள தாயகக்கோட்பாடு ,சுயநிர்ணய உரிமை மற்றும் இடைக்கால நிர்வாகம் ஆகியவற்றை பொதுஜன முன்னணி முழுமையாக எதிர்க்கின்றது.

# வடகடலில் புலிகளின் படகு மீது கடற்படை துப்பாக்கிச்சூடு

(4ம் பக்கத் தொடர்ச்சி) நோக்கி ட்றோலரை செலுத்த முற்பட்டனர். ட்றோலரில் இருந்த கண்காணிப்புக்குழுவினரின் பாதுகாப்பை பலமாக உறுதிப்படுத்தினர். இச்சம்பவமானது கண்காணிப்புக்குழுவினரான வெளிநாட்டவர்களது பார்வையில் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல்களாகத் தெரிந்தாலும் கடந்த காலங்களில் சிங்களப் பேரினவாத அரசுகள் மேற்கொண்ட நயவஞ்சகமான கொலைகளும் சதிகளும் விடுதலைப்புலிகளை இத்தகைய செயலுக்குத் தூண்டியது எனலாம்.

ஆனால் வழமை போல் தென்னிலங்கை ஊடகங்கள் மட்டுமல்ல இந்திய ஊடகங்களும் வெளிநாட்டு செய்தி நிறுவனங்களும் புரிந்துணர்வு உடன்படிக்கையை புலிகள் மீறிவிட்டார்கள் என விமர்சித்துள்ளன. கண்காணிப்புக்குழுவின் தலைவரும் எடுத்த எடுப்பிலே விடுதலைப்புலிகள் மீது குற்றம் சுமத்தி அறிக்கை விடுத்துள்ளார். கடந்த மே மாதம் முதலாம் திகதி தமிழீழத்தின் தென்பகுதியான வாகரைக் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சிங்கள. முஸ்லிம் மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியதும் அதனை விடுதலைப்புலிகளின் ஆயுதப்படகு என்று கடற்படைகூறியதை அப்படியே கண்காணிப்புக்குழு நம்பி அறிக்கை விட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சனிக்கிழமை இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக வெளிநாட்டு செய்தித்தாபனங்கள் பின்வருமாறு தெரிவிக்கின்றன. சனிக்கிழமை மாலை 5.45 மணியளவில் மன்னார் வளைகுடாவிற்கு வடமேற்கே இரணைதீவிற்குத் தெற்காக இரண்டு றோலர்கள்இலங்கை கடற் எல்லைக்குள் வருவது கடற்படையினரால் அவதானிக்கப்பட்டது. அவை தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறும் பொருட்டு அவறங்றை அணமித்த போது அவை விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமானவை என ஓரளவிற்கு அடையாளம் காணப்பட்டன.

அதையடுத்து அவற்றை தமது கண்காணிப்பிற்குள் கொண்டு வர ஸ்ரீலங்கா கடற்படை முயற்சி செய்த போது அவற்றில் ஒரு படகு சம்பவ இடத்தை விட்டு சமயோசிதமாகத் தப்பிச் சென்று விட்டது. மேற்படி தப்பிச் சென்ற படகு இந்திய பதிவு இலக்கத்தையுடையது என்பது அடையாளம் காணப்பட்டாலும் அது குறித்த மேலதிக தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை. மற்றைய படகை சுற்றி வளைத்த கடற்படையினர் மேற்படி படகை சோதனைக்குட்படுத்த விரும்பினர். தற்போதைய புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி புலிகளின் படகைச் சோதனையிடுவதை கண்காணிப்புக்குழுவினரே மேற்கொள்ளலாம் என்ற காரணத்தினால் கண்காணிப்புக்குழுவிற்கு இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது. கண்காணிப்புக்குழு கிளிநொச்சியில் உள்ளபுலிகளின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அனுமதி பெற்ற மேற்படி சம்பவம் நடந்த இடத்திற்கு கடற்பரைடயினரின் படகில் விரைந்தனர்.

நான்கு விடுதலைப்புலிகள் இருந்த மேற்படி படகைச் சோதனையிட இரண்டு கண்காணிப்புக்குழுவினரும் இரண்டு கடற்படையினரும் மேற்படி படகிற்குச் சென்றனர். அங்கு அவர்கள் மேற்கொண்ட சோதனையில் தொலைதொடர்பு சாதனங்கள் மட்டுமே இருந்தது இதையடுத்து இருபகுதியினருடனும் தொடர்பு கொண்ட கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் நான்கு புலிகளையும் கரைக்குச் செல்ல அனுமதிக்குமாறும் படகும் அதில் எடுத்து வரப்பட்ட தொலைதொடர்பு சாதனங்களும் கடற்படையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும் என்றும் அறிவுறுத்தினர். இதனை புலிகள் ஏற்க மறுத்தனர் படகில் இருந்து இறங்க முடியாது எனவும் மறுத்தனர். இந்நிலை இரவு 11.30 மணி வரை நீடித்தது. பின்னர் படகு வன்னியை நோக்கி நரக ஆரம்பித்தது. படகு நகரத் தொடங்கியதும் அதிலிருந்து இரு கடற்படையினரும் கடலில் குதித்து தப்பியுள்ளனர். ஆனால் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் படகில் தடுத்து வைக்கப்பட்டு தமது பயணத்திற்கு கவசமாக்கியுள்ளனர்.

இது ஒரு பாரதூரமான அத்துமீறல் எனத் தெரிவித்துள்ளது கண்காணி ப்புக்குழு. ஆனால் தமிழ்செவ்னது அறிக்கை (4ம் பக்கம்) உண்மை நிலையை விளங்க வைக்கிறது. இதுவே கடலில் நடந்த சம்பவமாகும்.

# குருப்பெயர்ச்சி

அன்பார்ந்த வாசகர்களுக்கு அன்பு வணக்கம்
எல்லாம் வல்ல முருகப்பெருமான் திருவடிகளை வணங்கி இந்த குரு பெயர்ச்சிப் பலன்களை எழுதுகின்றேன்.
திருக்கணித சித்தாந்தபடிப குருபகவான் - இந்த வருடம் சித்திரபானு வருடம் ஆனி மாதம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (ஆங்கில திகதி 05.07.2002) மிதுனராசியிலிருந்து கர்க்கடக ராசிக்கு பெயர்கிறார்.
வாக்கியபஞ்சாங்கப்படி இது ஆனி 16 (30.06.2002) இல் நிகழ்கின்றது.
குரு பகவான் கர்க்கடக ராசியில் சஞ்சரிக்கும் போது பொதுவாக மிதுனம், கன்னி, விருச்சிகம், மகரம்,மீனம் ஆகிய ராசியினர்க்கு நற்பலன்களை அளிப்பார். மற்றைய ராசியினர்க்கு சாதகமற்ற பலன்களை அளிப்பார் எனினும் தன்சார பலத்தினாலும் பார்வையினாலும் நன்மைகளை அளிப்பார்.
கோட்சாரபலனை பார்க்கும்போது ஒவ்வொருவரும் தாம் பிறந்த ஜாதகப்படி நல்ல தெசாபுத்தி நடைபெற்றால் கோட்சாரப்படி கூறப்பட்ட நற்பலன்கள் அதிகமாகவும் சாதகமற்ற தசாபுத்தி நடந்தால் நற்பலன்கள் சுமாராகவும் அமையும். தசாபுத்தி பலன்கள்கோட்சார பலன்கள் இரண்டும் அனுகூலமற்றதாக அமையின் சோதனையாக அமையும் என்பதைக் கருத்திற்கொள்ளவேண்டும்.
குரு பெயர்ச்சி பலன் எழுதும்போது சனி,ராகு,கேது ஆகிய கிரகங்களின் சஞ்சாரமும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.
வாசக அன்பர்கள் நலம் பெற முன்னேற்றம் பெற ஆண்டவனை வழிபடுவதே சிறந்த வழி .அனைவரும் குரு அருளும் இறைவன் அருளும் பெற்று வளமாக வாழ ஆண்டவனை வேண்டுகின்றேன்

அன்புடன் சோதிடர் தர்மர்



## மேஷம்

இதுவரை உங்களுக்கு 3ம் இடத்தில் சஞ்சரித்த குரு பகவான் 05.07.2002 இல் முதல் 4 ஆம் இடத்துக்கு வருகின்றார். அங்கு 30.07.2003 வரை சஞ்சரிப்பார். இக்குருபெயர்ச்சியால் உங்களுக்கு நல்லதும் கெட்டதும் கலந்த பலன்கள் ஏற்படும்.
மூன்றாம் இடத்தில் சஞ்சரித்தபோது பொருளாதார ரீதியில் பிரச்னை பணத்தட்டுப் பாடு இருந்தது. நான்காமிடத்தில் வசிப்பதால் சுகசௌகரியங்களை அதிகப்படுத்திக் கொள்ள வாய்ப்புண்டாகும். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். உத்தியோகத்தில் சிலருக்கு புதுப்பொறுப்புக்கள் ,இடமாற்றம் ஏற்படும்.
வீடு,நிலம் சம்பந்தமான செலவுகள் வரும். வண்டி,வாகனம் என்பவற்றை பராமரிக்கும் திருத்தும் செலவுகள் வந்து சேரும்.ஒரு சிலருக்கு தாயாரின் உடல்நிலை பாதிப்பு, மருத்துவச் செலவு ஏற்படும். உற்றார், உறவினர் நண்பர்களுடன் கருத்து வேறுபாடு தோன்றும். சுகஸ்தானத்தில் இருக்கும் குருவினால் ஓய்வு இல்லாமையால் உடல் நலம் பாதிக்கும்.
'தர்மபுத்திரர் நாலிலே வனவாசம் போம்படி ஆனது' என்ற பாடல்படி துன்பங்கள் வந்து சேரும் என்ற பயம் இருப்பினும் குரு உங்கள் ராசிக்கு 9ம் இடத்துக்கு அதிபதியானதால் துன்பங்கள் அதிகம் ஏற்படாது என்பது நிச்சயம். உங்கள் பிள்ளைகள் வெளிநாடு செல்ல வாய்ப்புக் கிட்டும். நோய்கள் விலகும். தடைப்பட்ட சிகிச்சைகளைச் செய்து முடிக்கக்கூடியதாக இருக்கும்.
குரு பகவான் 4 இல் சஞ்சரிக்கும்போது சனி பகவான் (23.07.2002 முதல்) உங்கள் ராசிக்கு மூன்றாமிடத்துக்கு வருகின்றார். மூன்றா மிடத்துச் சனி நன்மைசெய்வதற்கென்றே உள்ள இடம் என்பது உங்களுக்கு தெரிந்ததே. முயற்சிகளில் வெற்றி கிட்டும் .தொழிலில் ஏற்றமுண்டாகும். உத்தியோகத்தில் மேன்மையும் ஏற்படும்.
இக்காலப்பகுதியில் ராகு 2ம் இடத்திலும் கேது 8 ஆம் இடத்திலும் சஞ்சரிப்பார். இது அனுகூலமாக இல்லை. பணத்தட்டுப்பாடு, காரியத்தடை, தொழில் மந்த நிலை இருக்கும்.சுபகாரியங்கள் சுணங்கும்.புது முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.
குருவின் பார்வை 8,10,12 ஆம் இடங்களுக்கு ஏற்படுவதால் அனுகூலம் நன்மை என்பன ஏற்படும்.
8 ஆம் இடத்துக்கு குருபார்வை ஏற்படுவதால் வழக்கு விவகாரங்கள் சாதகமாகத் தீர்ப்பாகும். 10 ஆம் இடத்துக்கு விழுவதால் உத்தியோகத்தில் இருந்த பிரச்னை தீரும். செல்வாக்கு உயரும். வேலை வாய்ப்புக்காகக் காத்திருப்போருக்கு வாய்ப்பு கிட்டும். வெளி நாடு செல்லும் வாய்ப்பும் சிலருக்கு கிட்டும். 12 ஆம் இடத்துக்கு ஏற்படும் குருபார்வை யால் வீண் விரயங்கள் குறையும். சுபகாரிய ங்கள் தெய்வ வழிபாட்டுக்காரியங்கள் நிறைவேறும்.



## ரிஷபம்

இடபராசிக்கு மூன்றாம் இடமான கர்க்கடகராசிக்கு குரு பகவான் 05.07.2002 இல் இடம் பெயர்ந்து 30.07.2003 வரை அங்கிருப்பார். மூன்றாம் இடத்தில் அமரும் குரு உங்கள் ராசிக்கு எத்தகைய பலன்களை அளிப்பார் என பார்ப்போம்.
குரு 2 இல் இருந்த போது பணவரவு இருந்தது. குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெற்றது. தொழில் உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. இனி 3 ஆம் இடத்தில் ''தீதையே தரும் மூன்றிலே துரியோதனன் படை மாண்டதும்'' என்ற சோதிடப்பாடல் நம்மை பயமுறுத்துகின்றது. குரு மூன்றாமிடத்தில் மறைவு பெறுவதால் திருமணம் போன்ற சுபகாரியங்கள் தாமதமாகும். வேலை அதிகரிக்கும். தொழிலில் மந்த நிலை ஏற்படலாம். கொடுக்கல் வாங்கல் பிரச்னையில் அதிருப்தி ஏற்படும். சொத்து பற்றிய விடயங்களில் இழுபறி நிலை ஏற்படும்.
தனகாரனான குரு மறைவு பெறுவதால் பணத்தட்டுப்பாடு இருக்கும்.புதிய வீடு வாங்கும் முயற்சிகள் பலன் தராது.
ஆனால் 3 இல் உள்ள குரு உங்களுக்கு முயற்சியில் ஊக்கம் தந்து வெற்றி பெற துணைபுரிவர். விடாமுயற்சியுடன் செயற்பட முடியும். இளைய சகோதர வழியில் நன்மையும் நல்லுறவும் ஏற்பட வழியுண்டாகும்.
குரு மூன்றில் சஞ்சரிக்கும்போது சனி 2 ஆம் இடத்துக்கு வருகின்றார். ஏழரைச் சனி கடைக்கூறு. இரண்டாமிட சுற்று சனியாக அமைபவர்களுக்கு நற்பலன்களையும் அளிக்கவல்லவர்.2 இல் உள்ள சனி இதுவரை இருந்ததை விட நல்ல பலன்களையே செய்வார். பொருளாதார கஷ்டங்கள் குறையும். மதிப்பு,மரியாதை அதிகரிக்கும். கௌரவத்தின் பொருட்டு பொருள் விரயங்கள் ஏற்படும். உறவினர் நண்பர் தொல்லை தருவர். எதிலும் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. இக்காலம் ராகு உங்கள் ராசியிலும் கேது 7 ஆம் ராசியிலும் சஞ்சரிப்பர். ராகு பொருள் நட்டம் உடல்நலக்குறை போன்ற சோதனைகளை ஏற்படுத்தும். அடிக்கடி பயணம் செய்தல் ,பொருள் இழப்பு என்பன உண்டாகும்.
7 இல் உள்ள கேதுவும் நன்மை செய்வார் எனக் கொள்ளமுடியாது. உறவினர் விரோதம், பணச்செலவு என்பன ஏற்படும். நண்பர் ஆதரவு காட்டுவர்.
குரு 3 இல் சஞ்சரிக்கும்போது அவரது பார்வை 7,9,11 ஆம் இடங்களுக்கு ஏற்படும். 7ஆம் வீட்டில் ஏற்படும் பர்வையால் திருமணப்பேச்சுவார்த்தையில் திருப்தி ஏற்படும். கணவன்,மனைவி உறவு கலகலப்பாக அமையும். 9ம் பார்வையால் தகப்பனாருக்கு நற்பலன்கள் ஏற்படும். சிலருக்கு பூர்வீக சொத்து மூலம் வருமானம் கிடைக்கும். சிலர் கல்வி சம்பந்தமாக வெளிநாடு செல்லும் வாய்ப்புப் பெறுவர்.
11 ஆம் இடப்பார்வை மூலம் எதிர்பாராத பணவரவு அதிர்ஷ்ட வாய்ப்பு என்பன கிட்டும். சகோதரவகையில் அனுகூலம் உண்டாகும். பெரிய மனிதர் உதவியால் நன்மைகள் பல கிட்டும். ராகு கேதுவுக்கு பீரிதி வழிபாடு செய்யவும். தெட்சணா மூர்த்தியை வழிபடவும்.

சோதிடர் தர்மர்



## மிதுனம்

இந்த ராசிக்கு ஜன்மஸ்தானமான மிதுனத்தில் இதுவரை சஞ்சரித்து வந்த குருபகவான் 05.07.2002 முதல் தனஸ்தானம் என்னும் இரண்டாமிடமான கர்க்கடகராசிக்கு இடம் பெயர்கின்றார். அங்கு 30.07.2003 வரை சஞ்சரிக்கின்றார்.
ஜன்மத்தில் சஞ்சரித்தபோது வேலைகளில் அலைச்சல்,தாமதம்,உடல்நலப்பாதிப்பு ,பணத்தட்டுப்பாடு என்பன இருந்து வந்தன. இனி தனகுடும்பஸ்தானத்தில் இருக்கும் குரு உங்களுக்கு யோகமான பலன்களையும் அதிர்ஷ்டத்தையும் வாரி வழங்குவார்.
பணம் பல வழிகளில் இருந்தும் வந்து சேரும். உங்கள் பொருளாதாரம் உயர்ந்திட சந்தர்ப்பம் கிட்டும்.
உங்கள் சொல்லுக்கு மதிப்பு உண்டாகும். வீட்டிலும் வெளியிலும் அந்தஸ்தும் செல் வாக்கும் உயரும். குடும்பத்தில் சுபகாரிய ங்கள் விமர்சையாக நடைபெறும். புத்திரவ கையில் முன்னேற்றமும் மகிழ்ச்சியும் உண்டா கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். வீட்டுக் குத் தேவையான ஆடம்பரப் பொருட்களும் வாங்கி மகிழலாம். தங்கநகை ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பும்உ ண்டாகும். ஒரு சிலரு க்கு குடும்ப சொத்து சேரும். சிலர் புதுவீடு நிலம் வாங்குவர். சிலர் குடியிருக்கும் வீட்டை விட்டு வசதியான வீட்டுக்கு இடம் மாறுவர்.
குடும்பத்தில் சுபகாரியங்கள் விருந்தளிப்பு உபசாரம் என்பன நிகழும் நிலையுண்டாகும். பெரியமனிதர், அரச அதிகாரிகளின் நட்பு மூலம் காரியங்கள் நடந்து முடியும். உத்தியோகத்தில் மேன்மை, பதவி உயர்வு, விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். வியாபா ரத்தில் அபிவிருத்தியுண்டாகும். சிலருக்கு புதிய தொழில் வாய்ப்பு உண்டாகும்.
இரண்டில் குரு சஞ்சரிக்கும்போது சனி ஜென்மத்தில் சஞ்சரிப்பார். உடல் நிலை பாதிப்பு,உத்தியோகத்தில் அலைச்சல் என்பன இருக்கும்.வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். சிலர் வீட்டை விட்டு வேறிடம் செல்ல நேரிடலாம். ஆனால் குரு பகவான் சாதகமான நிலையில் இருப்பதால் துன்பங்கள் நீங்கி விடும்.
குரு இரண்டில் இருக்கும்போது ராகு 12 இலும் கேது 6 ஆம் இடத்திலும் இருப்பர். ராகுவின் சஞ்சாரத்தால் சில பல தொல்லைகள் ஏற்படலாம். எனினும் நீசமாக அமைவதால் தீமைகள் செய்யும் வல்லமை இருக்காது. 6 மிடத்து கேது தடைகளைக் கடந்து வெற்றி பெற உதவுவார். மனதில் உள்ள சஞ்சலம் குழப்பம் நீங்கி உற்சாகம் பிறக்கும்.
இரண்டில் குரு சஞ்சரிக்கும்போது அவரது பார்வை உங்கள் ராசிக்கு 6,8,10 ஆம் வீட்டிற்கு ஏற்படும்.
6 இல் குருபார்வை இருப்பதால் நோய்,பிணி விலகும். எதிரிகள் கரம் வலிமை குன்றும். வழக்கு வெல்லும். பிரயாணத்தால் வெற்றி ஆதாயம்உ ண்டாகும்.
8 ஆம் இடத்துப் பார்வை குடும்பத்தில் ஏற்கனவே இருந்த சிக்கல் நீங்கும். நல்லுறவு தொடரும். வழக்கு விவகாரங்கள் சாதகமாக தீர்ப்பாகும். கடன்கள் தீரும். வெளிநாடு செல்லும் வாய்ப்புண்டாகும்.
10 இடத்தை நோக்குவதால் தொழில் வியாபாரம்செ சழிக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும்.
(மிகுதி அடுத்த வாரம்)

எஸ். பி. இம்போட்டஸ் S.P. Importers Inc.
ஒரே பிளாசாவில் மூன்று பெரும் தாபனங்கள்

| Fresh Vegetable & Grocery | Fresh Fish Market | FURNITURE |
|---|---|---|
| 2863 Lawrence Ave. East | 2853 Lawrence Ave. East | 2861 Lawrence Ave. East |
| Tel: (416) 261-3881 | Tel: (416) 261-4737 | Tel: (416) 266-3077 |
| | Fax: (416) 261-5843 | |

*Scarborough, Ontario (Brimley & Lawrence)*







## ஒரு நடிகை ரசிகை ஆகிறார்

பார்த்திபன் இயக்கும் 'இவன்' படத்தில் கர்நாடக இசைப்பாடகியாக நடித்திருக்கின்றார் சவுந்தர்யா.
சவுந்தர்யாவைப் பாராட்டிப் பேசும் இசை விமர்சகர் கேரக்டருக்கு நிஜ விமர்சகர் சுப்புடுவை அணுக அவரும் சந்தோஷமாக வந்து நடித்துக் கொடுத்துவிட்டுப் போயிருக்கின்றார்.
இதில் ஹைலைட் காட்சி முடிவதற்குள் சுப்புடுவின் ரசிகையாகிவிட்டாராம் சவுந்தர்யா.

## கன்னடத்தில் மீனா

தமிழ், தெலுங்கு, மலையாளம் வரை மீனாவின் நடிப்புப் பயணம் தொடர்ந்தது. இப்போது கன்னடத்திலும் முதன் முறையாக கால் பதித்து இருக்கின்றார் மீனா.
கன்னட வாய்ப்பு மீனாவுக்கு எப்படி? கேள்வி வரும். தமிழில் மீனா நடித்து வெற்றி பெற்ற 'நாட்டாமை' படம் கன்னடத்தில் ரீமேக் ஆகின்றது. மீனா தமிழில் நடித்த அதே கேரக்டரில் நடிக்க கேட்க மீனாவும் அந்த கேரக்டர் மீதான ஈர்ப்பில் உடனே ஒப்புக் கொண்டு விட்டாராம்.



## மீனா 'தாய்ப்பாசம்'

திருமணம் ஆகாத கன்னிப்பெண்கள் திருமணஞ்சேரி சென்று வழிபாட்டல் உடனே திருமணம் நடக்கும் என்பது ஐதீகம். மீனா சமீபத்தில் இந்த கோவிலுக்குச் சென்று சாமி கும்பிட்டார்.
அதன் பிறகு மீனாவுக்கு மாப்பிள்ளை கிடைத்துவிட்டாரா என்று அவருடைய தாயாரிடம் நிருபர்கள் விசாரித்தனர். மீனாவின் தாயார் சொன்ன பதிலில் ஒரு உண்மையான தாய்ப்பாசம் தெரிந்தது. ''இரண்டரை வருடங்களாக தேடி வருகின்றேன். நல்ல வரன் எதுவும் அமையவில்லை. மகளுக்கு காலா காலத்தில் கல்யாணம் செய்து பார்க்கவேண்டும் என்பது தான் ஒரு தாயின் ஆசையாக இருக்க முடியும். அந்த வகையில் நான் என் மகளுக்கு நல்ல தாயாக இருக்கவிரும்புகின்றேன்'' என்றார்.

## இப்போது பாரதிராஜா

இப்போது படம் பிடிக்கும் வெளிநாட்டுப் பட்டியலில் இலங்கைக்கு முதலிடம். நாசரைத் தொடர்ந்து 'உன்னை நினைத்து' படத்துக்காக விக்ரமன் போய் வந்தார்.
இப்போது பாரதிராஜா முறை. தனது 'கண்களால் கைது செய்' படத்துக்காக புதுநடிகை ரதி, ரமேஷ் கண்ணா உள்ளிட்ட யுனிட்டை அழைத்துக் கொண்டு போயிருக்கின்றார்.
படத்தின் கதை இலங்கைப் பின்னணியில் வருவதால் தொடர்ந்து 20 நாட்கள் அங்கேயே படப்பிடிப்பு தொடருமாம்.

## நலம் பெற்ற பின் ஜோடியாக படப்பிடி…
# சினேகா - ஸ்ரீ…

என்னவளே படத்தில் அறிமுகமாகி புன்னகை தேசத்தில் பிரபலமான சினேகாவுக்கும் ரோஜாக்கூட்டம் படத்தில் அறிமுகமான ஸ்ரீகாந்துக்கும் இடையே காதல் இருந்து வந்ததாக கிசுகிசுக்கப்படுகின்றது.
இருவரும் ஏப்ரல் மாதத்தில் என்ற படத்தில் ஜோடியாக நடிக்கின்றார்கள்.
இந்தப் படத்தின் படப்பிடிப்பிற்காக திருப்பதி சென்றபோது தான் சினேகா கார் விபத்தில் சிக்கினார்.
ஒரு மாத கால ஓய்வுக்குப் பின் குணமடைந்தார். கால்களை லேசாக ஊன்றியபடி மெதுவாக

## போட்டியாக நடிகைகள்

ஷாஜகான் மனைவி பெயரைக் கொண்ட நடிகைக்கு போட்டியாக இரண்டு கதாநாயகிகள் கவர்ச்சிக் களத்தில் இறங்கியிருக்கின்றார்கள். அதில் ஒருவர் 'கவி' நடிகை. இன்னொருவர் மந்தரம். இரண்டு பேரும் எதை உடுத்தச் சொன்னாலும் உடுத்திக் கொள்கிறார்கள். எப்படி ஆடச் சொன்னாலும் 'ஆடுகிறேன்' என்கிறார்கள். ரசிக கண்மணிகளுக்கு வேட்டை தான் போங்கள்.

## இருவரில் இவர்

காயத்ரி ஜெயராம், காயத்ரி ரகுராம் என்று இரண்டு காயத்ரிகள் வரும்போது கோலிவுட் பெயர்க்குழப்பத்தில் தவிக்குமோ என்று கவலைப்பட்டது. இப்போது? பிரச்னை தீர்ந்த மாதிரி தான். 'மனதை திருடிவிட்டாய்' படத்துடன் காயத்ரி ஜெயராம் மூட்டை கட்டிக்கொள்ள காயத்ரி ரகுராமோ சார்லி சாப்ளின் வெற்றியைத் தொடர்ந்து பல படங்களை தொடர்கிறார். அதாவது பந்தயத்தில் காயத்ரி ரகுராம் குதிரை ஜெயித்திருக்கின்றது. காயத்ரி ஜெயராமுக்கோ கையில் ஒரு படம் தான் இருக்கின்றது.

## புதுமுகங்கள் நடிக்கும் தினம் தினம்

புதுமுகங்கள் கதாநாயகன் - கதாநாயகியாக நடிக்க தினம் தினம் என்ற பெயரில் ஒரு படம் தயாராகின்றது.
இதில் கதாநாயகனாக ஷர்வணன், கதாநாயகியாக புதுமுகம் சிறிதேவி நடிக்கின்றார்கள்.
இவர்களுடன் வடிவேல், சாப்ளின் பாலு, அல்வா வாசு, மோகன், டெல்லி கணேஷ், பாத்திமாபாபு, கும்தா மற்றும் பலர் நடிக்கின்றார்கள்.
வித்தியாசமான காதலை மையமாகக் கொண்ட கதை இது.
இந்தப் படத்துக்கான பாடல் காட்சிகள் டென்மார்க், அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் படமாக்கப் பட்டுள்ளது.

ரன் படத்தில் மாதவன் - மீராஜாஸ்மின்



## கொட்டுதுகோடி பாபா கில்லாடி

படம் எடுத்து முடிவதற்குள்ளேயே பாபாவின் விற்பனை கற்பனையையும் மிஞ்சிவிட்டது.
ரஜினியின் படத்தை நெகுலாக திரையிடும் தமிழகத்தில் உள்ள தியேட்டர் உரிமையாளர்கள் ஏற்கனவே அட்வான்சாக கொடுத்த தொகை கோடிகளைத் தாண்டும். இப்போது கர்நாடகாவிலும் அப்படியே. பாபாவின் கர்நாடக விற்பனைத் தொகை சுமார் 2 கோடி என்கிறார்கள். மலையாள திரையோரமும் சளைக்காமல் இதன் மூலம் சினிமா விற்பனையில் கோடி தந்து பாபாவை விலைக்கு வாங்கிவிட்டனர். இதன் மூலம் சினிமா விற்பனையில் பாபா புதிய வரலாற்றையே உருவாக்கியிருக்கின்றார்.
ஸ்டைலில் மட்டுமல்ல பிஸினஸிலும் ரஜினி கில்லாடி என்பதை நிரூபிக்கும் இன்னொரு தகவல். திரையிடும் உரிமை தவிர ஆடியோ, சற்றலைட், அயல்நாடு உரிமைகள் மற்றும் படத்துக்கான ஸ்பொன்ஷோஷிப் என அத்தனை வழிகளிலும் வசூலான தொகை சுமார் 50 கோடியை தொடும் என்கிறார்கள்.
ஓடி விளையாடு பாபா



# ...ப்பிடிப்புக்கு வரும் ஸ்ரீகாந்

நடக்கின்றார்.
இந்த நிலையில் ஏப்ரல் மாதத்தில் படத்தின் சண்டைக் காட்சியில் நடித்தபோது ஸ்ரீகாந்த் விபத்தில் சிக்கினார். இதற்காக ஸ்ரீகாந் சிகிச்சை பெற்று வருகின்றார். இரண்டு பேரும் அடுத்த மாதம் ஜோடியாக படப்பிடிப்பிற்கு வருவார்கள்.

## 'தவம்' விதிக்கும் நிபந்தனைகள்

தன் படங்களில் வேலை செய்யும் எல்லா உதவி டைரக்டர்களுக்கும் ஆங்கிலம் பேச தெரிந்திருக்கவேண்டும். காலையில் படப்பிடிப்புக்கு வரும்போது சென்ட் பூசிக்கொள்ளவேண்டும் என்று அனாவசியமான நிபந்தனைகளை விதித்திருக்கின்றார் 'தவ' நடிகர்.
உதவிடைரக்டர்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக தவம் மீது கடும் கோபத்தில் இருக்கின்றார்கள்.

## தூக்கி வீசப்பட்டார்

சமீபத்தில் திரைக்கு வந்த கவிதை படத்தில் அறிமுகமான இரண்டெழுத்து நடிகை அவர். மன்மதனின் மனைவியின் பெயரைக் கொண்ட அந்த நடிகை 'உலகிலேயே அழகான அழகி நான் தான்' என்கிறார்.
'என் அழகில் மயங்கி அந்த பெரிய ஹீரோ என்னை அழைத்தார். (நடிப்பதற்கு) இந்த இளம் ஹீரோ தினம் தினம் போன் பண்ணி தொந்தரவு செய்கிறார். அந்தப் பெரிய டைரக்டர் என்னைப் பார்த்து ரொம்ப வழிகிறார் என்று ரீல் விடுகிறார். இவர் காட்டிய 'பந்தா' வைப் பார்த்து பயந்து போன இமயம் போன்ற டைரக்டர் தன் படத்தில் இருந்து அந்த நடிகையை தூக்கிவீசி விட்டார்.

## இசையமைப்பாளர் மாற்றம்

அர்ஜுன் நடிக்கும் 'அரசாட்சி' படத்தில் இருந்து இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயரா நீக்கப்பட்டுவிட்டார்.
டைரக்டர் மகாராஜனுடன் ஹாரீஸ் ஜெயரா மோதிக்கொண்டதால் ஏற்பட்ட பிரச்னை இது.
இப்போது 'அரசாட்சி' படத்துக்கு இசையமைப்பாளர் வித்யாசாகர்.

## காதலுக்கு பச்சைக் கொடி

சினிமாவில் எல்லாப் படங்களிலும் மகள் அல்லது மகனின் காதல் திருமணத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பார் விஜயகுமார். ஆனால் நிஜவாழ்க்கையில் அதற்கு நேர்மாறானவர் அவர். மூத்த மகள் வனிதாவின் காதல் திருமணத்துக்கு பச்சைக்கொடி காட்டிய அவர் இப்போது இரண்டாவது மகள் பிரீதாவின் காதலுக்கும் பச்சைக்கொடி காட்டிவிட்டார். பிரீதா டைரக்டர் ஹரியை மணக்கிறார்.

## ரோஜா- செல்வமணி திருமணம்

நீண்ட ஆண்டுகள் காதலர்களாக இருந்து வந்த ரோஜாவும் செல்வமணியும் வரும் செப்டம்பர் 11 ஆம் திகதி திருமணம் செய்ய உள்ளனர்.
செம்பருத்தி திரைப்படத்தின் மூலம் ரோஜாவை திரையுலகிற்கு அறிமுகப்படுத்தியவர் செல்வமணி தான். அதன் பின்னர் இவர்களுக்கிடையே காதல் மலர்ந்தது.
பல ஆண்டுகளாக காதலின் பின் திருமணம் நிறைவேறுவதை இட்டு கோடம்பாக்கம் மகிழ்ச்சிகடலில் திளைத்துள்ளது.




# தமிழ் கன்னடத்தில் தயாராகுகின்றது சவுந்தர்யா நடிக்கும் சண்டைப்படம்



அருணாசலம், படையப்பா உட்பட பல படங்களில் குடும்பப் பாங்கான வேடங்களில் நடித்த சவுந்தர்யா. முதன் முதலாக அதிரடி கதாநாயகியாக ஒரு சண்டைப்படத்தில் நடிக்கின்றார்.
பெயர் சூட்டப்படாத இந்தப் படத்தில் அவருக்கு ஜோடியாக சாய்குமார் நடிக்கின்றார்.
புதுமுகங்கள் சிலரும் பங்கு பெறுகின்றார்கள்.
இந்தப்படத்தின் கதை- திரைக்கதை - வசனம் எழுதி டைரகட் செய்கிறார் பாரதி கண்ணன். இவர் 'அருவா வேலு', 'திருநெல்வேலி', 'கண்ணாத்தாள்', 'ராஜேஸ்வரி', 'பண்ணாரி அம்மன்' ஆகிய படங்களை டைரக்ட் செய்தவர்.
படப்பிடிப்பு சென்னையில் தொடங்குகின்றது.
தமிழ்,கன்னடம் ஆகிய இரண்டு மொழிகளிலும் இப்படம் தயாராகின்றது.

# மீண்டும் டான்ஸ் மாஸ்டர் ஆகிறார் பிரபுதேவா

பிரபுதேவா, டான்ஸ் மாஸ்டராக இருந்து கதாநாயகன் ஆனவர். தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய 4 மொழி படங்களிலும் டான்ஸ் மாஸ்டராக வேலை செய்து இருக்கின்றார்.
ரஜனி, கமல், பிரபு, சரத்குமார், சிரஞ்சீவி போன்ற பெரிய கதாநாயகர்களை எல்லாம் ஆட வைத்தவர். நடனத்தில் கிடைத்த புகழும் பாராட்டும் தான் இவரை கதாநாயகன் அந்தஸ்துக்கு உயர்த்தியது. 'காதலன்' என்ற படத்தின் மூலம் கதாநாயகன் ஆனார்.
மளமள வென்று பல படங்களில் கதாநாயகனாக நடித்தார்..
அவர் நடித்த படங்கள் தோல்வியைத் தழுவியதால் அவருக்கு புதுப்பட வாய்ப்புக்கள் குறைந்தன.
இதனால் அவர் மீண்டும் டான்ஸ்மாஸ்டர் ஆக முடிவுசெய்திருக்கின்றார்.

# 20 ஏக்கர் நிலப்பரப்பில் சர்வாதிகாரிக்காக உருவாகும் ஜெயில் அரங்கு

வாத்தியார் வீட்டுப்பிள்ளை, பிரம்மா, நடிகன் ஆகிய படங்களை தயாரித்தவர் ராபிலிம் இண்டர் நஷனல் உரிமையாளர் ராமநாதன். இவர் கே.சுபாஷ், டைரக்ஷனில் சர்வாதிகாரி என்ற புதிய படத்தை தயாரிக்கின்றார். இந்தப் படத்தில் அர்ஜுன் கதாநாயகனாக நடிக்கிறார்.
அக்கிரமங்களையெல்லாம் ரவுடித்தனத்தையும் அழிக்கும் கண்டிப்பான நேர்மையான பொலிஸ் அதிகாரியாக அவர் தோன்றுகிறார்.
படப்பிடிப்புக்காக ஹைதராபாத்தில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் மிகப்பெரிய ஜெயில் அரங்கம் ஒன்று அமைக்கப்படுகின்றது.
ஆர்ட் டைரக்டர் ஆர்.கே நாகுவின் மேற்பார்வையில் 150 தொழிலாளர்கள் இரவு - பகலாக வேலை செய்து கடந்த ஒரு வாரமாக ஜெயில் அரங்கை உருவாக்கி வருகின்றார்கள்.
இந்தப் படத்தில் அர்ஜுன் ஜோடியாக மும்பை அழகி கஜாலா நடிக்கின்றார்.
ஒரு பாடல் காட்சியை படமாக்க உலக அதிசயங்களில் ஒன்றான பாபிலோன் தொங்கு தோட்டத்தில் படமாக்க திட்டமிட்டு இருக்கின்றார்கள்.



# டி.எஸ், பண்டா வரிசையில் ஸ்ரீமாவின் துரோகங்கள்

ஈழவேந்தன்

யாதும் ஊரே யாவரும் கேளீர் என்பது சங்கச் சான்றோன் புறநானூற்றுப் புலவர் பூங்குன்றனார் புகன்ற கூற்றாகும். அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்கே உலகு என்பது வள்ளுவன் மொழிந்த வாய் மொழியாகும். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது ஐந்தாம் நூற்றாண் டில் வாழ்ந்த திருமூலர் திருமந்திரமாகும். "உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்" என்பது ஒன்பதாம் நூற்றாண்டின் கவியரசன் கம்பன் கழன்ற கருத்தாகும். "உலகெல்லாம் உணர்ந்தோதுதற்கரியவன்" என்பது 12ம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் செப்பிய கருத்தாகும்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது வேயன்றி வேறொன்றறியேன் பராபரமே" என்பது தாயுமானவர் தந்த தண்டமிழ் கூற்றாகும். இவையெல்லாம் எம் முன்னோர் உலகம் தழுவிய நோக்கில் தான் வாழ்ந்தனர்

## "படித்த பலவற்றை மறந்து மறந்த பலவற்றை நினைவு கொள்"

என்பதற்கு சான்று கூறுகின்றன.

ஆனால் அவர்கள் வாழ்ந்த காலம் தமிழன் தன்னைத் தான் ஆண்ட காலமாகும். எனவே உலகம் தழுவிய போக்கில் இவர்கள் சிந்தித் தது சிறப்புடையது என்று கூறலாம். ஆனால் பிற இனங்களின் ஆதிக்கத்துக்கு அடிமையாக விளங்குகின்ற தமிழினம் தன்னை மறந்த நிலையில் உலகம் தழுவ முயன்றால் அது தமிழினத்தின் அழிவில் தான் முடியும் என்பதை மறவாதிருத்தல் நலம்.

தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழி க்கச் செய்வீர் என்பது பாரதி பகிர்ந்த மொழி யாகும். ஆனால் இன்று தமிழனோ தெரு வெல்லாம் தமிழ்முழக்கம் செய்வதற்கு பதில் நாடிழந்து, ஊரிழந்து, வீடிழந்து தெருவில் நிற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளான். இவைஅனைத்தையும் நினைவில் கொண்டு தான் "பெருமனத்தால் கெட்ட பேயன் தமிழன்" என்று தமிழன் நிலையை அறிந்து ஏங்குகின்றான் நம் கவிஞர் காசிஆனந்தன்.

1972 ஆம் ஆண்டு காலகட்டத்திற்கு வாசகர்கள் அழைத்து வரப்படுகின்றனர்.

சேர்.பொன். இராமநாதன் காலம் தொடங்கி தமிழன் ஏமாற்றப்படுகின்றான் என்ற தலைப்பில் தொடர்கட்டுரையை வரைந்து வரும் நான் இன்று வாசகர்களை 1972 ஆம் ஆண்டு காலகட்டத்திற்கு அழைத்து வருகிறேன். இருபதுகளில், முப்பதுகளில், நாற்பதுகளில், ஐம்பதுகளில் அறுபதுகளில், எழுபதுகளில், என ஒவ்வொரு பத்தாண்டு காலகட்டத்திலும் தமிழ் ஏமாந்த வரலாறும் தமிழன் ஏமாற்றப்பட்ட வரலாறும் எம் நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சிகளாகும். எம்மை அடக்கி ஒடுக்க வந்த குடும்பமாக பண்டாரநாயக்கா குடும்பம் விளங்குவதும் எமக்கு எல்லையற்ற கவலையை அளிக்கிறது. ஆனால் இந்த கசப்பான உண்மையை நாம் ஏற்றுத்தான் ஆக வேண்டி இருக்கிறது.

24 மணி நேரத்தில் தனியே சிங்கள மொழியை ஆட்சிமொழியாக்குவேன் என்று கொக்கரித்த சொலமன் வெஸ்ட் றிஜ்வே டயஸ் பண்டாரநாயக்கா 1956இல் ஆட்சிக்கு வந்தார். நாற்பதுகளில் சிங்களமும் தமிழும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்த பண்டாரநாயக்கா இத்தீர்மானம் வாக்குக்கு விடப்பட்ட போது வாக்களியாது நழுவினார். நாட்டிற்கு ஏற படும் விளைவுகள் எதுவாகும் என்பதை பற்றி அவர் கவலை கொள்ளவில்லை. இவரின் இவ் வெறியாட்டத்தினால் நாட்டிற்கு ஏற்பட்ட விளைவுகளை எழுதின் பக்கம் பக்கமாக பெருகும். வெறிகொண்ட சிங்கள பௌத்த பீடத்தின் துணையோடு ஆட்சிக்கு வந்த இவர் அதே பௌத்த தலைமைப் பீடத்திற்கு 1959இல் பலியானார்.

ஒழுக்கம் என்பது உயிரினும் உயர்ந்த தாக ஓம்பப்படும் என்பத வள்ளுவர் வாய் மொழி. இதே ஒழுக்க நெறியை புத்தரும் வலியுறுத்திச் சொன்னதற்கு பௌத்த மெய்யி யல் (தத்துவம்) தக்க சான்றாக அமை கிறது. ஆனால் ஒழுக்கம் என்பது என்ன என்று கேட்குமளவிற்கு ஒழுக்கத்தை உதறி த்தள்ளி வாழ்ந்த புத்தரகித்த தேரோ திரை மறைவில் திட்டங்கள் தீட்ட கூலிப்படை யாக விளங்கிய சோமராம தேரோ தனது துப்பாக்கியால் பண்டாரநாயக்காவின் உயி ரைப் பறித்ததை வரலாற அறியும். வளர்த்த கடா நெஞ்சில் பாயும் என்பதற்கமைய இவர் வளர்த்த வெறிக்கும்பல் இவரையே முடி த்துக் கட்டியது.

1970 பொதுத்தேர்தலில் ஸ்ரீமாவோ பண டார நாயக்கா மீண்டும் ஆட்சிக்கு வந்தார். இந்திராகாந்தியுடன் ஒப்பந்தம் செய்து கச்சதீவை இலங்கைக்குச் சொந்தமாக்கி தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படை யினரால் தொடர்ச்சியாகக் கொல்லப்படு வதற்குக் காரணமானார்.


இதற்கு முன் இவர் செய்த ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் தமிழருக்குச் செய்யப பட்ட பெரும் துரோகம் ஆகும். நேரு - சேனநாயக்கா ஒப்பந்தம், நேரு கொத்தலா வலை ஒப்பந்தம் ஆகியவற்றையும் மிஞ்சி விடும் அளவுக்கு இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழியினருக்கு பெரும் பாத கத்தை இழைத்தது. அத்துடன் இந்த ஒப்பந்தம் இலங்கையில் தமிழர்களின் பலத்தைக் குறைக்கவும் வழிவகுத்தது.

ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் ஐந்தேகால் லட்சம் இந்திய வம்சாவழியினரை இலங் கையில் இருந்து இந்தியாவுக்கு அனுப்ப வழி வகுத்தது. ஆனால் மூன்றரை இலட்சம் மக்களே இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். குடியுரிமை பறிக்கப்பட்ட பின்னர் இந்திய வம்சாவழியினர் நாடு கடத்தப்பட்டது இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளில் மாபெரும் கொடுமை ஆகும்.

இவை அனைத்திற்கும் சிகரம் வைத் தது போன்று மற்றுமொரு நிகழ்வும் இடம் பெற்றது. பிரித்தானிய பேரரசுடன் எமக்கு ள்ள உறவை முற்றாகத் துண்டிக்கின்ற முறையில் குடியரசுப் பிரகடனத்தை இவர் செய்தார்.

சிலோன் என்ற ஆங்கிலத்தில் வழங்கப பட்ட பெயரை மாற்றி சிங்களத்தில் ஸ்ரீலங்கா என்று சூட்டினார். நாம் கல்லூரிகளில் அரச அறிவியல் பயின்ற போது இந்திய அரச மைப்பு தேவையற்று விரிந்து கிடக்கிறது. ஆனால் இலங்கை அரசமைப்போ அனைத் தையும் உள்ளடக்கி சுருக்கி விளக்கம் தரு கிறது என்று எங்கள் ஆசிரியர்கள் விதந்து போற்றியதுண்டு.

இந்திய அரசமைப்பில் அனைத்துச் சிறப்புக்களும் உண்டு என்று நாம் கூறவர வில்லை. ஆனால் சிறுபான்மை இனங் களைப் பொறுத்தவரையில் இலங்கை அரச மைப்புடன் ஒப்பிடும் போது இந்திய



அரசமைப்பில் ஓரளவு பாதுகாப்பு உண்டு என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

இலங்கை அரசமைப்பில் சிறுபான்மை இனங்களுக்கு என்று கொடுக்கப்பட்ட பாது காப்புக்கள் மாற்றமுடியாத அரசமைப்புப் பிரிவு 29 அவசரமாக சட்டங்களை நிறை வேற்றாது தடுப்பதற்கான மேல்அவை சிறு பான்மை மக்களைப் பாதிக்காத வகையில் நடுநிலைமையில் பணியாற்ற அரச ஆணை க்குழு என்பனவாகும்.

ஆனால் 1972இல் இலங்கை குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டபோது அரசமை ப்பின் பிரிவு 29 உட்பட மேலே கூறப்பட்ட அனைத்துப் பாதுகாப்புக்களும் நீக்கப் பட்டன. எனவே தான் இந்த இரு அரச மைப்புக்கள் பற்றி இந்திய இலங்கை கல்வி நிலையங்களில் - பல்கலைக்கழகங்களில் நான் உரைநிகழ்த்துகையில் "படித்த பலவற்றை மறந்து மறந்த பலவற்றை நினைவு கொள்"என்று கூறுவதுண்டு.

ஒருவரின் படித்த படிப்பைக் கொண்டோ அவர் பெற்ற பட்டங்களைக் கொண்டோ அவர்களை அறிஞர்கள் என்று தீர்ப்பு வழங்குவது தவறு. படிப்பதையோ பட்டம் பெறுவதையோ நாம் குறைத்து மதிப்பிட வில்லை. ஆனால் இவற்றுக்கு மேலாக ஒருவரின் நுண்ணறிவு - நுண்மாண் நுழைபுலம் கொண்டே மதிப்பீடு செய்ய முடியும்.

அறிவுடையார் ஆவது அறிவர். அறி விலார் அதறிவிலாதவர் என்பது வள்ளுவரின் அரிய குறள் ஆகும். எமக்கு அரசியல் பயிற்றுவித்தோர் இந்திய அரசமைப்பை எள்ளி நகையாடச் செய்ததோடு இலங்கையின் அரசமைப்பை உச்சிமீது வைத்து உவந்து போற்றினார்.

இலங்கை அரசமைப்பை உருவாக்கிய வர்களில் இருவர் முக்கியமானவர்கள். ஒரு வர் பெருந்தகை சோல்பரி. மற்றவர் இலங் கைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்த ராக விளங்கிய சேர்.ஐவர்ஜெனிங்ஸ். இருவ ரும் உருவாக்கிய இலங்கை அரசமைப்பு இனங்களிடையே சமத்துவத்தை உருவாக் கவோ நாட்டில் அமைதியை உருவாக்கவோ தவறியது.

பீ.எச்.பாமர் எழுதிய பிளவுபட்ட இலங்கை *(Ceylon a divided nation)* என்ற நூலுக்கு அளித்த அணிந்துரையில் தமிழருக்குப் போதிய பாதுகாப்பு கொடுக்கத் தவறி விட்டேன் என்றும் மீண்டும் வாய்ப்பிருப்பின் அரசமைப்பில் திருத்தங்களைக் கொண்டு வர முயல்வேன் என்றும் கூறியிருந்தார்.

சேர்.ஐவர்ஜெனிங்ஸ் பிபிசி.யில் நிகழ்த்திய தொடர் சொற்பொழிவுகளில் தமிழருக்குப் போதிய பாதுகாப்பு அரசமைப்பில் கொடு க்கப்படவில்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன் என்று வருத்தம் தெரிவித்தார்.

தமது தவறை ஒத்துக் கொள்ளுமள வுக்கு அவரிடம் பெருந்தன்மை இருந்தது வரவேற்கத்தக்கது. எனினும் தொலை நோக்கு அற்ற அவர்களின் செயல்கள் எவ்வளவு தூரம் எம் இனத்திற்கு அழிவை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை எண்ணி எண்ணி நாம் ஏங்குகின்றோம்.

எதிர்காலத்தில் எண்ணிப் பார்த்தால் என்து அரச அறிவியலில் ஒரு முக்கிய கோட்பாடு ஆகும். ஆனால் எமது தலைவர் பிரபாகரனிடம் இருக்கின்ற தொலைநோக்கு. சிந்தனைத் தெளிவு மெத்தப் படித்த எந்த மேதாவியிடமும் இல்லாமலிருப்பது தான் எமக்கு வியப்பைத் தருகிறது.

1972 இல் ஆட்சிக்கு வந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரித்தானியாவுடன் நமக்கு இருக்கும் தொடர்பை முற்றாகத் துண்டி த்து இலங்கைக்கு ஸ்ரீலங்கா என்ற பெயர் சூட்டி குடியரசுப் பிரகடனம் செய்ய இருப்பதாக அறிவித்தார்.

இக்குடியரசு அரசமைப்பை உருவாக கும் பொறுப்பு டாக்டர் கொல்வில் ஆர்.டி. சில்வாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் தமிழுக்குச் செய்த மிகப் பெரிய "தொண்டு" சோல்பரி அரசமைப்பில் தமிழருக்கு இருந்த சிறுசிறு சலுகைகளையும் இல்லாது செய்ததே ஆகும். குறிப்பாக மாற்ற முடியாத பிரிவு என்று இருந்த 29ம்பிரிவை முற்றாக நீக்கி சிங்களவர்களிடம் தமிழருக் கிருந்த சிறு நம்பிக்கையையும் சின்னா பின்னப்படுத்தியதாகும்.

இரு மொழி எனின் ஒருநாடு. ஒரு மொழி எனின் இரு நாடுகள் என்று தனிச்சிங்களச் சட்டம் 1956 இல் நிறைவேற்றிய போது ஆவது அறிதல் (தீர்க்கதரிசனம்) நோக் கோடு பேசிய கொல்வின் ஆர்.டி.சில்வாவை ஏதோ ஒரு விதத்தில் தமிழர்களின் அரசியல் வேட்கைகளை நிறைவேற்றத் துணை புரியும்படி முன்னாள் மேலவை உறுப்பினர் நடேசன் கேட்டபோது *(Politocs is the art of the possoble)* இயன்றதைச் செய்வதே அரசியல் கலையாகும் என்று கூறி தமிழ ருக்கு இருந்த சிறு நம்பிக்கையையும் சிதற டித்தவர் மார்க்சியவாதி கொல்வின் ஆர்.டி. சில்வா என்பதை நாம் என்றும் மறாவாதிரு த்தல் நலம்.

சுருங்கக் கூறி விளங்க வைக்கின் 1972 வரை தமிழன் வரலாறு அதுவே ஆகும். இதிலிருந்தும் பாடம் படிக்கத் தமிழன் தவறின் அது அவனின் தலைவிதி என்று கூறி அமைதி காண்போமாக.

இக்கால கட்டத்தில் தான் கவிஞர் காசி ஆனந்தன், மாவை.சேனாதிராசா, வண்ணை ஆனந்தன், ஆகியோர் நீண்ட சிறைவாசத்து க்கு ஆளாகி துன்பங்கள் பல உற்றனர்.

இச்சூழலில் தான் "மாங்குயில் கூவிடும் பூங்சோலை எம்மை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை" என்று பாரதிதாசனின் பாடல் புத்துயிர் பெற்றது.

அத்தோடு வெலிக்கடைச் சிறை எமக்கு வெண்நிலா அறை என்ற பாடலை காசி ஆனந்தனைப் பாடவும் வைத்தது

(வளரும்)

# MILLENNIUM LEISURE TRAVELS INC.




ஆசியா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா,
வட-தென்-மத்திய அமெரிக்க நாடுகளிற்குக்
குறைந்த விலையில் சிறந்த சேவையுடன்
உங்கள் பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எந்த ஐரோப்பிய நாட்டிற்கும் விமானச்சீட்டு
முதல் **EuroRail Pass, Rental Car** வரையில்
சிறந்த விலையில் வசதிசெய்து தரப்படும்

இலங்கையிலிருந்து கனடாவிற்கு மட்டுமல்ல,
வேறு எந்த நாடுகளிற்கும் பிரயாண
ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்படும்



**Florida, Cuba, Carribean**
நாடுகளுக்குக் குடும்பத்துடனோ தனியாகவோ
விடுமுறையைக் கழிக்க விரும்புகிறீர்களா?
நியாயமான விலையில் **Package** வசதிகள்,
**Car Rentals, Cruise** வசதிகளும்
அத்துடன் **Disney World Tickets**
அமெரிக்க டொலர் பெறுமதியைக் கனேடியன்
டொலரில் எம்மிடம் பெறலாம்

நாள்தோறும் எத்தனையோ விளம்பரங்களைப்
பார்க்கிறீர்கள். எங்களுடன் ஒருமுறை
தொடர்புகொண்டு உங்கள்
பயணத்தைத் தொடங்குங்கள்.

விலையிலும் தரத்திலும் சேவையிலும்
நீங்கள் மிகப்பெரிய
வித்தியாசத்தை உணர்வீர்கள்

பலவருட அனுபவம் கொண்ட எங்கள் பிரதிநிதிகளை
உடனே தொடர்பு கொள்ளுங்கள்

**108 Corporate Drive, Suite 8, Scarborough, ON M1H 3H9**
**TEL: (416) 431-9100 FAX: (416) 431-5722**

---

**THE CRISPY MOISTURIZED CHICKEN BY**

**CHESTER FRIED**

**AVAILABLE AT**
**PHALAPPASS**
TAKE-OUT & CATERING
**416-614-9669**

1635 LAWRENCE AVE. W,
UNIT # 5
NORTH YORK, ONTARIO

**CHICKEN TO GO**
**416 248-5999**

நோர்த்யோக் நகரில் உன்னதமான உணவுகளுக்கு **பாலப்பாஸ்.**
ஈழத்தின் சுவைகாண, உணவுகளின் தரம் காண இன்றே நாடுங்கள் **பாலப்பாஸ்.**

உங்களுக்குத் தேவையான அன்றாட உணவுவகைகள், சிற்றுண்டி வகைகள் என நாவிற்கு ருசியான
உணவுகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளத் தயாராகுங்கள்

# பாலப்பாஸ்

**வெள்ளிக்கிழமை விரதச் சாப்பாடு**
(5 மரக்கறி, பாயாசம், அப்பளம், மோர்மிளகாயுடன்)
**FRIDAY SPECIAL $ 4.99**

பிரைட் பிஷ் - Fried Fish ............ $ 1.99

மாதாந்தச் சாப்பாடு **SPECIAL - $ 299**

100 இடியப்பம் சொதி சம்பலுடன் $ 10.00

சனி, ஞாயிறு தினங்களில்
நாவுக்கு ருசியூட்டும்
**கடலுணவுக்கூழ்**

குறிப்பிட்ட பகுதிகளுக்கு $25க்கு
மேற்பட்ட ஓடர்கள் நேரடி விநியோகம்
Lawrence/Bathurst முதல் Weston/Lawrence
வரையான பகுதிகளுக்கு நேரடி விநியோகம்

சிங்கப்பூர் நூடில்ஸ்
பாலப்பாஸ் ஸ்பெஷல் கடலுணவு **$ 5.99**

NORTH YORK தமிழ் மக்களின் உணவுத்
தேவைகளைப் பூர்த்தி செய்யவும் திருமண
விழாக்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள்,
பிறந்தநாள் கொண்டாட்டங்கள் உட்பட சகல
மங்களகரமான நிகழ்ச்சிகளையும் ஒரே
கூரையின் கீழ் ஒழுங்கு செய்து உங்களின் எண்
ணங்களை நிறைவேற்றத் தயாராகி விட்டோம்.

**பாலப்பாஸ்**
பார்ட்டி சேர்விஸ் அன்ட் கேற்றரிங்

**PHALAPPASS**

**1635 LAWRENCE AVE. W,**
**UNIT # 5**
**NORTH YORK, ONTARIO**

**(416) 614-9669**
**(416) 248-5999**




# விபரீத விபச்சாரம்



உலகிலேயே மிகவும் தொன்மையான தொழில் என்ற 'பெருமை' விபச்சாரத்தையே வந்து சேர்ந்திருக்கின்றது. காலங்காலமாக உலகம் முழுவதிலும் பரவிக் கிடந்த இத்தொழிலை விரும்பியோ விரும்பாமலோ செய்துவரும் பெண்கள் ஏராளம். ஒரு தடவை தான் கெட்டுவிட்டேனே என்ற நினைப்பில் விபச்சாரத்தில் இறங்கும் பெண்கள் பலர் இருக்கின்றார்கள். சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட பல இடங்களில் விபச்சாரம் என்பது பணங்காய்க்கும் ஒரு நல்ல தொழிலாக திகழ்கின்றது.

ஆசிய நாடுகளில் குறிப்பாக இந்தியாவின் பல சிவப்பு விளக்குப் பிராந்தியங்களில் இந்தச் சதைவியாபாரம் ஓஹோவென்று நடக்கின்றது. இந்தியாவின் பம்பாய் நகரம் இதற்கு நல்லதொரு உதாரணமாகத் திகழ்கின்றது. இங்கே விபச்சாரிகள் ஏலத்தில் விற்கப்பட்டு வருகின்றார்கள். இளம் பெண்கள் வரிசையாக நிற்க இவர்களை வைத்து ஏலவிற்பனை செய்யும் அவலம் இங்கே தான் நடந்து வருகின்றது. அதிக விலை கூறுபவர் 'பொருளைத்' தனதாக்கிக் கொள்ளலாம்.

இந்த விபச்சாரிகள் வதியும் சேரிப்பகுதிகளில் எலிகள் ஓடித்திரிகின்றன என்கிறார்கள். இங்கே போதை வஸ்துப்பாவனையும் தாராளமாக இருக்கின்றது. இதையெல்லாம் மிஞ்சும் விதமாக எயிட்ஸ் ராஜியம் பலரின் வாழ்க்கைகளை அஸ்தமிக்க வைத்துள்ளது. பாதுகாப்புடன் கூடிய உடலுறவு என்பது இங்கே நடக்கமுடியாத ஒன்று. வாடிக்கையாளர்களின் இச்சைக்கேற்ப இந்தப் பெண்கள் வளைந்து கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

பிரிட்ஷ் இராஜாக்கள் இருந்த காலத்திலேயே இந்த தேவதாசிகள் எனப்படும் விபச்சாரிகள் இருந்திருக்கின்றார்கள். அப்பொழுது இந்தப் பெண்கள் தேவதாசிகளாகத் தொழில் புரிவது தடை செய்யப்பட்டது. பிரிட்டனிடமிருந்து இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் இந்திய அரசும் தேவதாசி முறையைத் தடைசெய்து சட்டம் அறிமுகப்படுத்தியது.

ஆனால் இன்றைய இந்தியாவில் தேவதாசிகள் ஆயிரக்கணக்காக நடமாடி வருகின்றார்கள். ஒரு ஆய்வின்படி தென் இந்திய மாவட்டத்தில் 8000 பேருக்கு மேற்பட்டவர்கள் காணப்படுகின்றார்களாம். படிப்பு வாசனை அடியோடு இல்லாதவர்கள் ,பணம் சம்பாதிக்க இதுவே வசதியான தொழிலாக வாய்த்திருக்கின்றது. பெரும்பாலானவர்களின் வறுமைக்கோலம் இவர்களை இத்தொழிலுக்கு விரட்டியடித்திருக்கின்றது. ஆண்களின் காமப்பசியைப் போக்கிக் கிடைக்கும் உழைப்பில் தம் பிள்ளைகளின் வயிற்றுப் பசியைத் தீர்க்கும்பெண்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமாகவே இருக்கின்றார்கள்.

இதேசமயம் திருமணத்திற்கு முன்பு உடலுறவு கொள்ளும் ஐரோப்பிய கலாச்சாரம், இந்திய இளைஞர்களிடையேயும் நன்றாகவே தொற்றியிருப்பது தெரிய வந்துள்ளது. இந்தியாவில் பிரபலமான காமசூத்திரா ஆணுறைகளைத் தயாரிக்கும் நிறுவனம் நடத்திய நாடளாவிய ஆய்வில் இந்த உண்மையை உறுதிப்படுத்தியிருக்கின்றது. தமக்கு வாக்களித்த ஆண்களில் மூன்றிலொரு பகுதியினர் 21 வயதுக்கு முன்பாக பாலியல் உறவு கொண்டுள்ளதை ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். வாக்களித்த திருமணமானவர்களில் 50 வீதத்திற்கு மேற்பட்வடர்கள் திருமணத்திற்கு முன்பாக தமது மனைவிமாருடன் உடலுறவு கொண்டுள்ளார்களாம். இந்தக் கணிப்பை இணையத்தள இணைப்பின் மூலம் 3000 பேருடன் இந்த நிறுவனம் நடத்தியிருக்கின்றது. இந்தியாவின் 10 வேறுபட்ட நகரங்களில் உள்ளவர்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

இங்கே ஓர் ஆறுதல் என்னவென்றால் 43 வீதமானவர்கள் கொண்டோம் உபயோகித்து பாதுகாப்பான உடலுறவு கொள்கின்றார்கள் என்பது தான்.இவர்கள் படித்தவர்கள் என்பதால் விழிப்புணர்ச்சி இவர்களிடம் இருக்கின்றது போலும்.

என்ன தான்விழிப்புணர்ச்சி இருந்தாலும் வறுமையின் தாக்கத்தில் இதையெல்லாம் யார் சிந்திக்கப்போகிறார்கள்?

# எமனாகிவிட்ட எயிட்ஸ்



மனித குலத்தை அழிக்கவென்றே வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றது. வாழவிட மாட்டேன் என்று ஒறறைக்காலில் நிற்கின்றது. பெண்ணாசை பிடித்தவர்களே பெற்றுக் கொள்ளுங்கள் என் ஆசீர்வாதத்தை என்று பெரிதாய்க் கொக்கரிக்கின்றது. நான் உங்களிடம் வந்தால் உங்கள் வாழ்க்கையில் மீட்சியே கிடையாது என்று மார்தட்டிச் சொல்கின்றது. யாரிவர்? மனிதகுலத்தில் இவருக்கு அப்படி என்ன வெறுப்பு? திருவாளர் எயிட்ஸ் தான் இவர்.

இன்று மனிதகுலத்தை நடுநடுங்க வைக்கும் ஆசாமியாகி இருக்கின்றார் இவர். ஆபிரிக்க கண்டத்தில் இதன் அட்டகாசம் தாங்க முடியாமல் பரிதவிப்பவர்கள் ஏராளம்என்பது ஒரு புறமிருக்க ஆசிய நாடான சீனா விலும் இதன் அட்டகாசம் அதிகரித்திருப்பது தெரிய வந்துள்ளது.

அண்மையில் ஐ.நா. சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. உடனடியாகத் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்காவிடின் நாடு பெரும் அவலத்தைச் சந்திக்க நேரிடும் என்று ஐ.நா.சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

UN AIDS என்று அழைக்கப்படும் எயிட்ஸ் தடுப்பு சம்பந்தமான ஐ.நா. சபையின் நிகழ்ச்சி நிரல் ஒன்றின் அறிக்கையின்படி எயிட்ஸ் வைரஸினால் 1.5மில்லியன் சீனர்கள் கடந்த வருடம் பாதிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. 1999 இல் 50,000 ஆக இருந்த தொகை 2001 இல் இப்படியொரு வளர்ச்சியைக் கண்டிருக்கின்றது.

இத்தோடு சிக்கல் முடியவில்லையே.

2010 ஆம் ஆண்டளவில் இத்தொகை 10 மில்லியனை எட்டிப்பிடிக்கும் என்று எச்சரிக்கின்றாகள் அதிகாரிகள். எச்சரிக்கை கொடுத்தும் சீனா உருப்படியாக எந்த நடவடிக்கையிலும் இன்று வரை ஈடுபடவில்லை என்று சாடுகின்றது ஐ.நா. சபை.

ஹெனான் மாவட்டத்தில் ஏழை விவசாயிகள் சட்டரீதியற்ற இரத்த வங்கிகளுக்கு இரத்தம் விற்பதன் மூலம் இந்த வைரஸை கடத்துகின்றார்கள். இரத்தம் எப்படியானது என்று பரிசோதிக்கப்படாமலேயே இரத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருவதாகக் குற்றஞ் சாட்டப்படுகின்றது. இதைவிட ஆண் - பெண் பாலியல் உறவுகளும் ஓரினச்சேர்க்கைகளும் எயிட்ஸ் வைரஸை வேகமாகப் பரப்பி வருகின்றன.

மக்கள் ஜனசமுத்திரத்திற்குள் இந்தப் பரவுதல் ஊடுருவப்போகின்றது என்பதே எம் பயமாக இருக்கின்றது என்கிறார் ஓர் அதிகாரி. என்றாலும் உலகில் மிக மோச மாகப் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுக ளின் நிலைமையை விட சீனாவில் பரவும் வேகம் குறைவாக இருக்கின்றது என்பது ஓர் ஆறுதலான விடயம் என்கிறார் ஐ.நா. அதிகாரி ஒருவர். இங்கே வேடிக் கையான விடயம் என்னவென்றால் சீனர்கள் பலர் எயிட்ஸ் எப்படிப் பரவுகின்றது என்ப தை அடியோடு அறியாதவர்களாக இருக்கின்றார்கள். கைகளைக் குலுக்குவதாலோ அல்லது நுளம்புக் கடியாலோ இந்த எயிட்ஸ் பரவுவதாக இவர்கள் நம்பிக் கொண்டிருக்கின்றார்கள். பாலியல் பற்றி பகிரங்கமாகப் பேசுவதே அபத்தமானது என்று கருதும் சீனச்சமூகத்தில் இந்த எயிட்ஸின் கொடுமை பற்றி பிரச்சாரம் செய்வது இலேசுப்பட்ட காரியமல்ல என்றும் அதிகாரிகள் கருதுகின்றார்கள். உலக நாடுகளைப் பொறுத்த மட்டில் 28 மில்லியன் ஆபிரிக் கர்களும் 1.5 மில்லியன் சீனர்களும் எயிட்ஸி னால் பாதிக்கப் பட்டிருக்கின்றார்கள். ஏனைய நாடுகளில் பரவலாக மொத்தம் 10.5 மில்லியன் மக்கள் எயிட்ஸினால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

எமனை விரட்ட என்ன செய்யப் போகின்றார்களோ?

# பருத்தவர்கள் பயணம்

உடம்பு மெலிந்திருக்கவேண்டும் என்பதே பலரதும் ஆசையாக இருக்கின்றது. அதிலும் இன்றைய இளஞ்சமுதாயத்தினர் பருத்த உடலை அடியோடு வெறுக்கின்றார்கள். உடலை நன்றாக இளைக்கச் செய்வது இவர்களால் பெரிதும் விரும்பப்படுகின்றது. குறிப்பாக இளம் பெண்கள் எல்லோரும் ஐஸ்வர்யாவின் கொடியிடையோடு நடமாட வேண்டும் என்று ஆசைப்படுகின்றார்கள். சாப்பாட்டை நன்றாகவே குறைத்து மாமிசப் பிரியத்தை அடியோடு தவிர்த்து மெல்லிடை யாள்களாக நடமாடத் துடிக்கின்றார்கள். சுருங்கக் கூறினால் 'கொழுப்பு மிஞ்சினவர்கள்' என்ற பெயர் வாங்க விரும்பாது வாழ விரும்புகின்றார்கள்.

கொழுப்பதை யார் தான் விரும்புவார்கள்?

ஆடு கொழுத்தாலும் அறுபடுவது அதன் தலைவிதி. உடம்பு கொழுப்பவர்கள் பல தொல்லைகளை வாங்கிக் கட்டிக்கொள்வது என்பது தவிர்க்கமுடியாததாகிவிட்டது.

விமான நிறுவனங்களுக்கும் கொழுத்தவர்களைக் கண்டால் பயம் வந்திருக்கின்றது. அமெரிக்காவின் சவுத்வெஸ்ட் விமான நிறுவனம் ஒரு புதிய முடிவெடுத்துள்ளது. அதாவது விமானத்தில் இரண்டு இருக்கை களைப் பிடிக்கும் அளவிற்குப் பருத்த உடல் கொண்டவர்களிடம் இரட்டைக் கட்டணம் இனி வசூலிப்போம் என்று இது அறிவித்து ள்ளது.

இந்த நிறுவனத்தின் விமானங்கள் விசேடமான ஆசனங்களைக் கொண்டுள்ளன. போயிங் 737 விாமனங்களையே சேவைக்கு விடும் இவர்களின் விமானங்களில் ஒவ்வொரு வரிசையிலும் ஆறு ஆசனங்களே உள்ளன. அகன்ற இருக்கைகளுடன் கூடிய முதல் வகுப்பு ஆசனங்கள் இங்கே கிடையாது. முதல் வந்தவர்கள் முதலில் கவனிக்கப்படுவார்கள் என்ற அடிப்படையிலேயே இவர்கள் சேவை நடைபெற்று

(25ம் பக்கம் பார்க்க)

# விடாது தொடரும் விபத்துக்கள்



வாழ்க்கையில் நாம் பிறந்ததே ஒரு விபத்துத் தான் என்று பலர் அபிப்பிராயப்பட்டுக் கொள்கின்றார்கள். இந்த விபத்து என்பது வாழ்க்கையின் பல கட்டங்களிலும் பல வடிவங்களில் நம்மை வந்தடைகின்றன. விஞ்ஞானம் வளர்ந்து விட்டது என்று நாம் குதூகலித்ததாலும் விபத்துக்களின் எண்ணிக்கைகளும் அதிகரித்துவிட்டன என்பது கசப்பான ஒரு நிஜம். இந்த விபத்துக்கள் பணக்கார நாடுகளை விட அபிவிருத்தியடையாத நாடுகளில் எண்ணிக்கையில் அதிகமாக இடம்பெற்று வருகின்றன. ஆபிரிக்க நாடுகளுக்கு என்ன சாபமோ தெரியவில்லை. எயிட்ஸின் தாக்குதல்கள் ஒருபுறம் என்றால் மறுபுறம் வேண்டப்படாத பல வாகன விபத்துக்கள் இடம் பெற்றபடி இருக்கின்றன.

அண்மையில் [illegible]ஈசானியாவில் இடம்பெற்ற ரயில் விபத்து 200க்கு மேற்பட்டவர்களின் உயிர்களைப் பலியெடுத்தது. தொழிநுட்பக் கோளாறு, மனித அஜாக்கிரதை அசட்டையுமே இந்த பாரிய ரயில் விபத்திற்கு காரணம் என்கிறார்கள்.

ஜூன் மாதம் இன்னொரு ஆபிரிக்க நாடான மொசாம்பிக்கில் நடந்த இன்னொரு ரயில் விபத்தில் 200 பேர் வரையில் மரணத்தைத் தழுவினார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் காயத்திற்குள்ளாகினார்கள். என்ஜின் செயற்பட மறுத்தபோது ரயில் பெட்டிகள் உருண்டு ஓடக்கூடாது என்ற எண்ணத்தில் நான்கு பெரிய கற்களைத் சில்லுகளுக்கு குறுக்கே வைத்து. ரயில் பெட்டிகள் கீழிறங்காது தடுக்க முயற்சித்தும் சாரதிக்குவெற்றி கிடைக்கவில்லை.

மாலவி என்ற ஆபிரிக்க நாட்டில் மே 1998 இல் ஒரு ரயில் விபத்து மனித அசட்டையினால் சம்பவித்திருக்கின்றது. இந்த விபத்தில் 23 பேர் இறந்திருக்கின்றார்கள். 160க்கும் மேற்பட்டவர்கள் காயப்பட்டிருக்கின்றார்கள். ஒருவளைவில் பிறேக் செயற்பட மறுத்துவிட்டது. ஆபிரிக்க கண்டத்தில் குறிப்பாக தென் ஆபிரிக்காவில் தான் ரயில் சேவை அதிகம்என்பதால் ஆபிரிக்காவின் அநேகமான ரயில் விபத்துக்கள் இங்கே தான் இடம்பெற்று வருகின்றன. நவம்பர் 2000 இல் தென் ஆபிரிக்காவில் நடந்த விபத்தொன்றுக்கு சிக்னல் பிழையாக காண்பிக்கப்பட்டதே காரணம் என்கிறார்கள். அநியாயமாக 4 பேர் இந்த விபத்தில் உயிரிழந்திருக்கின்றார்கள். 1994 இல் தென் ஆபிரிக்காவில் இடம்பெற்ற மோசமான விபத்தொன்றில் ரயில் தடம் புரண்டு 67 பயணிகள் அநியாயமாக இறந்தார்கள். இந்த வருடம் மார்ச் மாதம் தென் ஆபிரிக்காவின் போக்குவரத்து அமைச்சர் ரயில் பயணங்களில் பாதுகாப்புச் சம்பந்தமாக ஒருபுதிய சட்டமூலத்தை அறிமுகம் செய்துள்ளார்.ஆபிரிக்க ரயில் சேவையை தரமுயர்த்துவது சம்பந்தமாக வருடாவருடம் தென் ஆபிரிக்காவில் மாநாடு ஒன்று இடம்பெற்று வருகின்றது. 1993 இல் நப்தா என்ற இரசாயான எரிபொருளை ஏற்றிச் சென்ற சரக்கு வண்டியொன்று பயணிகளுடன் வந்த வண்டியுடன் மோதியதில் பலர் அநியாயமாக மொறக்கோவில் இறந்திருக்கின்றார்கள். இதேபோல டிசம்பர் 1999 இல்

(25ம் பக்கம் பார்க்க)

# தொல்லியற் சான்றுகள் காட்டும் நாகநாட்டு அரச மரபு

இவ்வாய்வுக் கட்டுரை 05.04.2002 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடந்த யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பத்தாவது மகா நாட்டு ஆய்வரங்கில் வாசிக்கப்பட்டது. ஈழநாடு வாசகர்களுக்காக இதனை தனது தாய் மாமனாரும் சமூகத் தொண்டனுமாகிய சிவராஜா மாஸ்டர் மூலம் அனுப்பி வைத்த கலாநிதி பரமு புஷ்பரட்ணம் அவர்களுக்கு எமது நன்றிகள்.

தனித்துவம் வாய்ந்ததாகக் கணிக்கக் கூடிய பாரம்பரிய வரலாறு இலங்கையின் எல்லாப் பிராந்தியங்களுக்கும் இருப்பதாகக் கூறமுடியாது. ஆனால் வடஇலங்கையைப் பொறுத்தவரை அது பண்டுதொட்டு இலங்கையின் வரலாற்றுப்போக்கில் தனித்து அடையாளப்படுத்தப்பட்டுள்ளதைச் சமகால வரலாற்று மூலங்களில் இருந்து இனம் காண முடிகிறது.

## வரலாறு

இலங்கையின் முதல் வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான மகாவம்சம் கி.மு. 6ம் நூற்றாண்டில் புத்தர் இலங்கைக்கு வந்த இப்பிராந்தியத்தை நாகதீபம் என அழைக்கிறது. கி.பி. 1-2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் கிரேக்க நாட்டவரான தொலமியின் குறிப்பில் வரும் நாகதீபோய் என்ற இடப்பெயர் மகாவம்சம் கூறும் நாகதீபமாக இருக்கலாம் என்ற கருத்துண்டு.

இதை உறுதிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் வல்லிபுரம் என்ற இடத்தில் கிடைத்த கி.பி. 2-3 ஆம் நூற்றாண்டுக்குரிய பொற்சாசனத்தில் நாகதீபம் என்ற இடப்பெயர் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (*Paranavithana 1983: 79- 80*) இப்பெயரே சற்றுப் பிந்திய காலத்திற்குரிய சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தமிழ் நூல்களில் நாகநாடு என்று அழைக்கப்படுகிறது.

இடைக்காலத்திலும் இப்பிராந்தியம் நாகதீபம் என்ற பெயரால் அழைக்கப்பட்டதற்கு பல சான்றுகள் உண்டு. மகாவம்சத்தின் தொடர்ச்சியான சூளவம்சத்தில் இத நாகதீபம் என்ற பெயரோடு உத்தரதேசம் என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது. இந்நூலில் தான் பத்தாம் நூற்றாண்டில் தென்னிந்திய மன்னன் ஒருவன் நாகதீபத்தின் மீது படையெடுத்தான் என்ற முக்கிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. (53:12 -6) இதே காலத்தில் நாக நாட்டை வெற்றி கொண்ட முதலாம் பராந்தக சோழன் அதன் நினைவாக இந்நாட்டை அல்லது இங்கு வாழ்ந்த நான இன மக்களைக் குறிக்கும் "உரக" என்ற பெயரில் நாணயம் வெளியிட்டதற்கு இலங்கையிலும் தமிழுகத்திலும் பல சான்றுகள் காணப்படுகின்றன. 1262 ஆம் நூற்றாண்டுக்குரிய பாண்டியக் கல்வெட்டு ஒன்று சாவக மன்னன் ஆட்சிக்குட்பட்டிருந்த நாகநாட்டை வீரபாண்டிய மன்னன் வெற்றி கொண்டு அங்கு பாண்டியரின் மேலாண்மையை ஏற்கச் செய்தான் எனக் கூறுகிறது.

மேற்கூறிய சான்றுகளில் இருந்து யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 13ம் நூற்றாண்டில் தோன்றிய யாழ்ப்பாண அரசின்ஆதிக்கம் வடஇலங்கையில் பரவ முன்னர் இப்பிராந்தியம் வடமொழியில் நாகதீப எனவும், தமிழில் நாகநாடு எனவும் அழைக்கப்பட்டமை தெரிகிறது.

ஆயினும் இதன் எல்லை அக்காலத்தில் எதுவரை பரந்திருந்ததென்பது தெரியவில்லை. சிலர் இப்பெயர் அனுராதபுரத்திற்கு வடக்கேயுள்ள தற்கால வடஇலங்கையைக் குறித்ததாகவும், வேறு சிலர் யாழ்ப்பாணத்தைக் குறித்ததாகவும் இன்னும் சிலர் நயினாதீவைக் குறித்ததாகவும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆனால் பண்டை கால வரலாற்றில் ஒரு இடத்தின் பெயர் காலப்போக்கில் அந்த நாட்டின் பெயராக மாறியதற்கும், ஒரு நாட்டின் பெயர் பிற்காலத்தில் ஒரு இடத்தின் பெயராக அழைக்கப்பட்டதற்கும் பல சான்றுகள் உண்டு. ஆயினும் நாகதீப அல்லது நாகநாடு என்ற பெயர் குறித்து நிற்கும் பிராந்தியம் பல சந்தர்ப்பங்களில் தற்கால வடஇலங்கையுட்பட கிழக்கிலங்கையின் சில வட்டாரங்களையும் (பதவியா திருகோணமலை) உள்ளடக்கியிருந்ததற்குப் பாளி, சிங்கள, தமிழ்இலக்கியங்களிலும் சோழ, பாண்டிய விஜயநகரக் கல்வெட்டுக்களிலும் சான்றுகள் காணப்படுகின்றன.

பாளி இலக்கியங்கள் ஆதிகால இலங்கையில் வாழ்ந்த மக்களை இயக்கர், நாகர் எனக் கூறுகின்றன. ஆனால் சிங்கள மக்களின் மூதாதையினர் கி.மு. 6ம் நூற்றாண்டளவில் வடஇந்தியாவில் இருந்து வந்து குடியேறிய ஆரியர்களின் வழித்தோன்றல்கள் என்ற கருத்துடைய பேராசிரியர் பரணவிதானா, மெண்டிஸ் போன்ற அறிஞர்கள் இயக்கர், நாகர்களை மனிதப் பிறவியற்ற அமானுசர்கள் எனக் கூறுகின்றனர். பரணவிதான இவர்களை மனிதர்களாகக் கொண்டாலும் அவர்களைத் தமிழர்கள் எனக் கூறமுடியாது எனவும் மாறாக வடஇந்தியாவிலிருந்து வந்தவர்கள் எனக் கூறுவதே பொருத்தமென்கிறார். இதற்கு வடஇந்திய இடப்பெயர்கள் பல நாக என்ற சொல்லை முன்னொட்டாகக் கொண்டு தொடங்குவதைச் சான்று காட்டுகிறார்.

பாளி இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட இலங்கையின் பண்டைய கால மக்கள் பற்றிய ஆய்வு அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளினால் மறுதலிக்கப்பட்டு வருகிறது. இதுவரை கிடைத்த சான்றுகளில் இருந்து வடஇந்தியக் குடியேற்றம் நடந்ததற்கான பாளி இலக்கியங்கள் கூறும் கி.மு. 6ம் நூற்றாண்டுக்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் மனிதன் வாழ்ந்ததற்கான சுவடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

அவற்றுள் காலத்தால் முற்பட்ட மக்களைப் பழைய கற்காலப், புதிய கற்காலப் பண்பாட்டுக்கு உரியவர்கள் எனத் தொல்லியலாளர் குறிப்பிடுகின்றார். ஆயினும் அறுதியிட்டுக் கூறக்கூடிய வகையில் கி.மு. 28000 ஆண்டிலிருந்து மலைநாடு தொட்டு தாழ்நிலம் வரை இடைக் கற்காலப் பண்பாட்டிற்குரிய ஆதி ஒஸ்ரலோயிட் மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகளே பரவலாகக் கிடைத்துள்ளன. இவற்றுள் வடஇலங்கையில் மாதோட்டம், பூநகரி, மாங்குளம் போன்ற இடங்களில் இப் பண்பாட்டிற்குரிய கல்லாயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இப் பண்பாட்டிற்குரிய மக்களும் தென்னிந்தியா அதிலும் குறிப்பாகத் தமிழ்நாடு தேரி மணற்குன்றுப் பகுதியில் வாழ்ந்த மக்களும் மானிடவியல் மொழியியல் மற்றும் பண்பாட்டு அடிப்படையில் ஒரே இன மக்கள் என்ற கருத்துப் பல நிலைகளிலும் இன்று வலுப் பெற்று வருகின்றது. இப்பண்பாட்டையடுத்து கி.மு. 800க்குப் பின்பாக தென்னிந்திய திராவிட மக்களது குடியேற்றம் நடந்ததற்கான சான்றுகள் வடஇலங்கையுட்பட நாட்டின் பல பகுதிகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (வளரும்)

## ஆன்மீகம்

# சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவுகள்

(1893 செப்டம்பர் 11ம்நாள் சிகாகோ நகரத்தில் கூடிய அனைத்துலகச் சமயப் பெருமன்றத்தில் நிகழ்த்திய உரை)

அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே! சகோதர்களே!

இன்பமும் இதமும் கனிந்த உங்கள் வரவேற்புக்கு மறுமொழி கூற, இப்பொழுது உங்கள் முன் நிற்கிறேன். என் இதயத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. அதனை வெளியிட வார்த்தைகள் இல்லை. உலகத்தின் மிகப் பழமை வாய்ந்த துறவியர் பரம்பரையின் பெயரால் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

அனைத்துச் சமயங்களின் அன்னையின்



பெயரால் நன்றி கூறுகிறேன். பல்வேறு இனங்களையும் பிரிவுகளையும் சார்ந்த கோடிக்கணக்கான இந்துப் பெருமக்களின் பெயரால நன்றி கூறுகிறேன்.

இம்மேடையில் அமர்ந்துள்ள பேச்சாளர்களில் சிலர் கீழ்த்திசை நாடுகளில் இருந்து வந்துள்ள பிரதிநிதிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது வேற்றுச் சமயநெறிகளை வெறுக்காத பண்பினைப் பல நாடுகளுக்கு எடுத்துச் சென்ற பெருமை தொலைவிலுள்ள நாடுகளிலிருந்து வந்துள்ள இவர்களைத் தான் சாரும் என்று உங்களுக்குக் கூறினார்கள். அவர்களுக்கும் என் நன்றிகள்.

பிற சமயக் கொள்கைகளை வெறுக்காது மதித்தல், அவற்றை எல்லோரும் ஏற்றுக் கொள்ளுதல், ஆகிய இரு பண்புகளை உலகத்துக்குப் புகட்டிய சமயத்துக்குரியவன் என்பது குறித்து நான் பெருமை அடைகிறேன். எதையும் வெறுக்காது மதிக்க வேண்டும் என்கிற கொள்கையை நாங்கள் நம்புவதோடு எல்லாச் சமயங்களும் உண்மையானவையே என்று ஒப்புக் கொள்கிறோம்.

உலகிலுள்ள அனைத்து நாடுகளாலும் அனைத்துச் சமயங்களாலும் கொடுமைபடுத்தப்பட்டவர்களுக்கும் நாட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்டவர்களுக்கும் புகலிடமளித்த நாட்டைச் சேர்ந்தவன் என்பதில் பெருமைப்படுகிறேன். உரோமானியர்கள் கொடுமையால் தங்கள் புனிதத் திருக்கோயில் சிதைந்து சீரழிந்த அதே வருடமே தென்னிந்தியாவுக்கு வந்து எங்களிடம் தஞ்சமடைந்த அந்தக் கலப்பற்ற இஸ்ரேல் மரபினர்களில் எஞ்சி நின்றவர்களை இதயமாரத் தழுவிக் கொண்டவர்கள் நாங்கள் என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். சிறந்த சொராஸ்திரிய சமயத்தினரில் எஞ்சியிருந்தோருக்கு அடைக்கலமளித்து இன்னும் பேணிக்காத்து வருகிற சமயத்துக்கு உரியவன் என்று பெருமை கொள்கிறேன்.

என் அருமைச்சகோதரர்களே! எனது பிள்ளைப் பருவத்திலிருந்தே நான் பாடிப் பயின்று வருவதும், கோடிக்கணக்கான மக்களால் நாள்தோறும் இன்றும் தொடர்ந்து ஓதப்பட்டு வருவதுமான கீதத்தின் ஒருசில வரிகளை இங்கு உங்கள் முன் குறிப்பிட விரும்புகிறேன்.

"எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்
இறுதியிலே கடலில் சென்று
சங்கமாம் பான்மையினைப் போன்றுலகோர்
பின்பற்றும் தன்மையாலே
துங்கமிகு நெறிபலவாய் நேராயும்
வளைவாயும் தோன்றி னாலும்
அங்கு அவைதாம் எம்பெரும! ஈற்றில் உனை
அடைகின்ற ஆறே யன்றோ!

இதுவரை நடந்துள்ள மாநாடுகளில் மிக மிகச் சிறந்ததாகக் கருதக்கூடிய இப் பேரவை கீதையில் உபதேசிக்கப்பட்டுள்ள பின்வரும் அற்புதமான ஓர் உண்மையை உலகத்துக்குப் பிரகடனம் செய்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

யார் எவ்வழியைப் பின்பற்றி என்னையடைய முயன்றாலும், நான் அவர்களை அடைவேன். பலரும் பல வழிகளில் முயல்கிறார்கள். எல்லா வழிகளும் இறுதியில் என்னையே அடைகின்றன.

அளவுக்கு மீறிய மதப்பற்று மூடப்பக்தி, இவற்றிருந்து தோன்றிய மதவெறி, இவை இந்த அழகிய உலகை நெடுநாளாக இறுகப் பற்றியுள்ளன. வன்முறையை நிரப்பியுள்ளன. அடுத்தடுத்து உலகை உதிரப் பெருக்கில் மூழ்கடித்து நாகரிகத்தை அழித்து, எத்தனையோ சமுதாயங்களை நம்பிக்கை இழக்கச் செய்துவிட்டன. அந்தப் பயங்கரப் பைசாசக் கொடூரச் செயல்கள் தோன்றாதிருப்பின் மனித சமுதாயம் இன்றிருப்பதை விடப் பன்மடங்கு உயர்நிலை எய்திருக்கும்.

ஆனால் அவற்றுக்கு அழிவு காலம் நெருங்கிவிட்டது. இன்று காலையில் இந்தப் பேரவையின் தொடக்கத்தைக் குறிப்பிட ஒலித்த மங்கலமணி, எல்லா மத வெறிகளுக்கும் வாளாலும் எழுதுகோலாலும் நடைபெறுகின்ற கொடுமைகளுக்கும் ஓரே குறிக்கோளை அடையப் பல்வேறு வழிகளில் சென்று கொண்டிருக்கும் மக்களிடையே நிலவும் இரக்கமற்ற உணர்ச்சிகளுக்கும் சாவுமணியாகட்டும் என்று நான் ஆர்வமுடன் வேண்டுகிறேன்.

(தொடரும்)

## ஏட்டுச் சுரக்காய்

மரணித்துப் போன
மனிதம் மீண்டும்
உயிர்த்துக் கொள்ளும் வரை
எங்களின் சமாதானமும் கூட
ஏட்டுச் சுரைக்காய் தான்!

## சுதந்திர வேட்கை

சுதந்திர இறக்கையை சுக்கு நூறாக்கி
இனவெடி பிடித்து
மனிதத்துவத்தை அழிக்க நினைத்து
சட்டத்தினை கையிலெடுத்த
மனிதா - நீ இருளின் பின் விடியல்
உண்டென்பதை உணர்ந்து கொள்

# வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?



அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

வீட்டுப்பெண்ணா அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளிமாணவரா? எவராயிருப்பினும் உங்களால் நஷ்டஈடு பெற முடியும். நீங்கள் சாரதியாகவிருந்தாலும், பாதசாரியாகவிருந்தாலும், பேருந்தில் பயணிப்பவரானாலும், சைக்கிளில் செல்பவரானாலும் இன்னும் தவறு உங்களுடையதாக இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெற முடியும்.

**உங்கள் அறியாமையால் வாரத்திற்கு $1000.00 வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்**

**ஒன்ராறியோவில் மிகப்பெரும் ஸ்தாபனம்**

## கனடாவில் எங்களுக்கு 30 வருடத்திற்கும் அதிகமான அனுபவம் உள்ளது

பண இழப்பீட்டு தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய



# UNITED PERSONAL INJURY ASSOCIATES

*The Car Accident People*



**பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்**



**உங்களுக்குத் தெரியுமா?**

இந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் **$172,000.00** வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடாக பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

**விபத்து உங்கள் தவறானாலும் கூட**

உங்களால் **$172,000.00** டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும். மனரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள் "யுனைட்டட்" (நாம் 25இற்கும் அதிகமான மொழிகளில் சேவையாற்றுகிறோம்)

இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்

**தீபன் (416) 505-9804**

- *5255 Yonge Street, Suite 200, North York (South of Finch, Head Office)*
- *257 Dundas Street. E, Unite 1, Mississauga (Dundas and HWY 10)*
- *29 King Street E, Unit 7, Kitchener*



34

# இரத்தத்தின் தீவு

பொறுப்பாக இருந்த விசேடஅதிரடிப் படை அதிகாரி குள்ளமாக அதேசமயம் நன்கு வலிமை வாய்ந்தவராக இருந்தார். ஏதோவொரு தீயசக்தி அவரிடமிருந்தது. எப்போது நீ புலியுடன் இணைந்தாய்? என்று குரைத்தார். பையன் பயத்தில் நடுங்கினார். நான் தலையிட்டேன்.

கேளுங்கள். அவர் புலியல்ல. அவர் நண்பரின் மகன். அவரின் தந்தை வசதியான வர்த்தகர். பையன் அமெரிக்காவில் படிக்கிறார் என்று கூறினேன். யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் விடுமுறைக்காக அவர் அமெரிக்காவில் இருந்து வந்ததையும் தெரிவித்தேன். இதனைக் கேட்ட அதே சமயம் அவர் முணுமுணுத்தார். நான் அவரைக்கேள்வி கேட்க நீங்கள் ஏன் பதில் கூறுகிறீர்கள்?

ஏனென்றால் நீங்கள் அவரைக் கடுமையாக வெருட்டுகிறீர்கள்? அவர் புலி என்று நினைக்கிறீர்கள். இந்தியனோ அமெரிக்கனோ யார் செய்தாலும் குற்றம் குற்றம் தான். எமக்கு அதைப்பற்றி கவலையில்லை என்றார்.

ஆனால் குற்றமற்றதொன்றை நீங்கள் குற்றமென சொல்கிறீர்களே என்று வாதிட்டேன். அத்துடன் ஒரு அதிகாரியான நீங்கள் சடுதியாக முடிவுக்கு வருகிறீர்களே என்று ஆச்சரியமாக இருக்கிறது. அவர் ஒரு அமெரிக்க மாணவன் என்பதற்கு அவரின் சான்றிதழ்களே சான்றாக உள்ளன. இதனை விட நிரூபிக்க வேறென்ன ஆதாரம் வேண்டும் என்றேன்?

சான்றிதழ்கள் போலியாக இருக்கலாம். இந்தத் தமிழர்கள் எதனையும் செய்வார்கள். எவ்வாறு போலிக் கடவுச்சீட்டுக்களை அவர்கள் தயாரிக்கிறார்கள் என்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? இந்தச் சான்றிதழ்கள் பிரயோசனமற்றவை. போலியானவை. பார்க்காமலேயே இவை போலியானவை என


## கட்டுமஸ்தான உடலுடன் இருந்தால் அந்த நபர் புலி தான் என்ற சந்தேகம்

அது தான் அவர் பயப்படுகிறார் என்றேன். பின்னர் பையனின் பக்கம் திரும்பி எப்போது புலியுடன் சேர்ந்தாய்? என்று கேட்டார்.

அவர் புலியுடன் இல்லை. அப்படி அவர் இருந்தால் ஏன் அவருக்காக நான் பேசுகிறேன் என்றேன்.

அவர் என்மீது நஞ்சைக் கக்கினார். உங்களுடன் அவரைக் கூட்டிக் கொண்டு வர உங்களுக்கு எந்தவித அலுவலம் இல்லை. நீங்கள் ஒரு புலியை கடத்திச் செல்கிறீர்கள். இது குற்றச்செயல் என்றார்.

யாவற்றிலும் பார்க்க முதலாவது விடயம் அவர் ஒரு புலியல்ல. அமெரிக்காவிலுள்ள மாணவர் அவர். அவருடைய பெற்றோர்களை எனக்கு நன்கு தெரியும். இரண்டாவது விடயம் நான் அவரைக் கடத்திக் கொண்டு போகவில்லை. காரின் அடிப்பாகத்திலோ பின் ஆசனத்திற்கு கீழேயோ அவரை நான் மறைத்து வைத்திருக்கவில்லை. கொழும்புக்குப் போவதற்கு வாகனத்தில் இடம் கொடுத்திருந்தேன். ஏனெனில் போக்குவரத்து இல்லையென்ற காரணத்தினாலேயே அவ்வாறு செய்துள்ளேன் என்றேன்.



அனிதா பிரதாப்

கடுகடுப்பான அந்த முகம் நிரம்பவும் பகைமையுணர்வே கொண்டிருந்தது. தலை நிறைய தமிழர்கள் இந்தியர்கள் மீது வெறுப்புணர்வை திரட்டி வைத்திருந்தது போன்று தோன்றியது. இந்தியர்களாகிய நீங்கள் இங்கே வந்து விரும்பியதை செய்து கொண்டு போக முடியும் என்று எவ்வாறு நீங்கள் கூறுவீர்கள்? என்று கேட்டேன்.

அவரை இரண்டாவது தடவை பார்க்காமலேயே அவர் ஒரு புலியெனக் கூறினேனே. அது மாதிரித்தான் இதுவும் என்றார் அவர். அவர் புலியென நீங்கள் ஊகித்துக் கொண்டால் அவரைப் பற்றி மீண்டும் நீங்கள் ஆராயவில்லை.

ஆனால் அவர் புலியென்றால் என்னுடன் ஏன் வர வேண்டும்? பத்திரிகையாளர் மற்றும் பொதுமக்களுடன் புலிகள் வாகனத்தில் செல்வதில்லையே கொழும்புக்கு வேறு வழியில் போகிறார்கள். அது உங்களுக்குத் தெரியும் என்றேன். ஆனால் என்னுடைய தர்க்கம் தோல்வி கண்டது. சுபஜித்தை தடுப்பு முகாமுக்கு கொண்டு செல்லவும் முடிவானது.

இந்தப்புலி கொழும்பை சென்றடையாமல் இருப்பதை நான் ஏதோவொரு வழியில் உறுதிப்படுத்த வேண்டும். நீங்கள் விவாதிப்பதன் மூலம் நீங்கள் இதற்கு குருவியாக செயற்படுகிறீர்கள் என்பதே உண்மையான விடயம். புலிகளை கடத்திச் செல்வதாக உங்களை எம்மால் கைது செய்ய முடியும் என்றார். அவர் குரலில் அபாயம் இருக்கிறதென்பதில் எந்தவித பிழையும் இல்லை.

எனக்கு ஆத்திரம் வந்தது. நான் திரும்பவும் உங்களுக்குச் சொல்கிறேன். அவரை நான் கடத்திக் கொண்டு செல்லவில்லை. போக்குவரத்து இல்லாததால் அவரை கொழும்புக்கு எனது வாகனத்தில் கூட்டிச் செல்கிறேன் என்றேன். ஆத்திரத்தை இழக்காமல் பல்கலைக்கடித்து அடக்கிக் கொண்டேன்.

ஏன் பொதுமக்கள் போக்குவரத்து இல்லை? ஏனென்றால் பிரபாகரன் மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்து விட்டதால் தான் என்றார். பின்னர் பையனை முழித்துப் பார்த்தவாறு உங்கள் நிலைமைக்காக உங்களின் அந்தத் தலைவரை நீங்கள் குற்றம் சாட்டுவதில்லை. ஏனெனில் உங்களுக்கு அந்தத் துணிச்சல் இல்லை. நீங்கள் அடிமைகள். கோழைகள் தமிழராகிய உங்களை நாங்கள் நம்புகிறோம். ஆனால் நீங்கள் பின்னால் தாக்குகிறீர்கள்.

நீங்கள் யாவருமே நச்சுப்பாம்புகள். இரக்கம் காட்டாமல் உங்களை காலுக்கு கீழ் போட்டு நசுக்க வேண்டும். மோசமான கீழ் மக்கள். எமது ஜனாதிபதி பிரபாகரனை நம்பினார். ஆனால் என்ன நடந்தது? அவர் முகத்தில் அறைந்து விட்டார். முழு உலகுமே எங்களைப் பார்த்து சிரிக்கிறது. சரி. பிரபகரன் சண்டையிட விரும்பினால் அதனை அவருக்கு நாங்கள் கொடுப்போம்.

எனது இரத்தம் உறைந்து விட்டது. வெறுப்பு, ஆத்திரம் அந்த மனிதரை ஆக்கிரமித்துள்ளது என்பதை நான் உணர்ந்து கொண்டேன். தப்பபிப்பிராயம் என்ற அந்த குருட்டுச் சுவருக்கூடாக தர்க்கமோ நியாயமோ ஊடுருவிச் செல்வதற்கு வாய்ப்பு இல்லை. இந்த இளம்பையன் தான் பலியாகப் போகிறான். அவனின் முழு எதிர் காலமுமே இந்த அதிரடிப்படை அதிகாரியின் கையில் தான்.

அப்போது அதிகாரியின் கவனம் என் மீது திரும்பியது. நீங்கள் ஏன்இவனில் இவ்வளவு கரிசனையாக இருக்கிறீர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை? விமானத்தைப் பிடிக்க வேண்டுமெனன் கூறினீர்கள் ஏன் போகவில்லை? நாங்கள் உங்களை நிறுத்தவில்லையே? இந்தப் பையன் தொடர்பாக ஏன் இவ்வளவு ஆர்வம் காட்டுகிறீர்கள்? என்று கேட்டார்.

இந்தப் பையனின் பெற்றோர் கூட்டிச் செல்லுமாறு என்னைக் கேட்டுக் கொண்டனர். அவர் மட்டக்களப்பில் தொடர்ந்திருந்தால் உங்கள் ஆட்களோ அல்லது புலிகளோ அவரைப் பிடித்து விடக்கூடும். கொழும்புக்கு ஒருவாறு சென்று விட்டால் அமெரிக்காவுக்கு திரும்பச் சென்று படிப்பை ஆரம்பித்து சாதாரணமான வாழ்வை மேற்கொள்ளலாம் என்றேன்.

இங்கு ஏன் சாதாரண வாழ்க்கை மேற்கொள்ள முடியாது? எல்லாம் அந்த இரத்த வெறிபிடித்த நாய் பிரபாகரனால். அவர் இவர்களை விடமாட்டார். அவர்களின் இரத்தத்தை உறிஞ்சவே அவர் விரும்புகிறார். இந்த முட்டாள்களுக்கு இது விளங்குகிறதில்லை. இப்போதும் அவருக்கு ஆதரவு வழங்குகின்றனர். இது இவனுக்கும் இவரின் குடும்பத்திற்கும் பிரபாகரனுக்கு ஆதரவளிக்கக்கூடாதென்பதற்கான பாடமாக இருக்கட்டும் என்றார் அதிரடிப்படை அதிகாரி.

நீங்கள் பாடம் படிப்பிக்கவில்லை. எந்தக் குற்றமும் இல்லாமல் இவனைத் தண்டிக்கிறீர்கள். பிரபாகரனுடன் தான் நீங்கள் சண்டையிட வேண்டும்? ஏன் இந்த அப்பாவிப் பையனை இழுக்கிறீர்கள்?

நான் களைத்து விட்டேன். வேறு எந்த வழியும் எனக்குத் தோன்றவில்லை. கடைசி வழியாக அவரின் நல்ல அம்சங்களைக் குறிப்பிட்டேன். நீண்ட காலத்திற்கு முன்னால் சின்னப் பிள்ளையாக இருந்த காலத்தில் அவரிடம் நல்ல குணாம்சங்கள் இருந்திருக்கலாமென யோசித்துப் பார்த்தேன். நம்பிக்கையை விட்டுவிட வில்லை. எதையென்றாலும் செய்து விட வேண்டும். அதனால் விநயமாகக் கேட்டேன்.

(அடுத்தவாரத்துடன் முடிவுறும்)

ஈழநாட்டில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்களும் ஐரோப்பிய மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் வெளியாகும் பதிப்புக்களிலும் இடம் பெறும் என்பதையும் ஐரோப்பிய வானொலியில் இலவசமாக ஒலிபரப்பாகும் என்பதையும் அறியத் தருகின்றோம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளவும். (905) 653 - 3000 (416) 266 - 9919

MARCHE
THURGA
444 Jean Talon Ave West
Montreal, Quebec
(514) 276-9262

இலங்கை, இந்தியா, ஆபிரிக்கா, கரிபியன் மற்றும் கனடிய நாட்டு உணவுப் பொருட்களுக்கும் அதி துரித பணமாற்றுச் சேவைக்கும் வாரத்தில் 7 நாட்களும் சேவை ஆற்றும் ஸ்தாபனம்.
மார்ஷே துர்க்கா
இலவச விநியோகமும் செய்து தரப்படும்.

உங்கள் சகல வைபவங்களுக்கும் சிற்றுண்டி வகைகளையும் உணவு வகைகளையும் பதிவு செய்து பெற்றிட எம்மை அழையுங்கள்
மொமோய் வெதுப்பகம்
BOULANGERIE BAKERY
MOMOI
இலங்கை முறையில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட
• பாண்
• பணிஸ்
• றொட்டி
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்



6953 Victoria Ave., Montreal, QUE
(514) 736-1925

உ
ஓம் சக்தி ஓம்

# ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்



அருமறைகள் தழைத்தோங்க அமுதமொழிதான் விளங்க
இருவினைகள் களைந்தே இன்பவொளிதான் பெருக
மீளா வரமளித்தே எம்மை வந்தாண்டு கொள்ளும்
மிஸிஸாகாப் பதியமர் முத்துமாரியை பணிவோம்.

தேன்தமிழும் சைவமும் விளங்கு மிஸிஸாகாவில்
தேடியெமை யாளும் ஸ்ரீமுத்துமாரி அம்பிகையோடு
நல்வரமளிக்கும் சுந்தரனாம் அரிஹரபுத்திரரையும்
நயமாகப் பணிந்து பதம்தொழ பழவினை அறுமே.

## ஐயனார் அலங்காரத்திருவிழா விஞ்ஞாபனம்

### மெய்யடியார்களே:

செந்தமிழும் சைவமும் செழித்தோங்க பக்திமயமான மெய்யடியார்கள் சூழ்ந்த மிஸிஸாகா மாநகரில் வீற்றிருந்து தஞ்சமென வருவோர்க்கு வேண்டும் வரம் சுரக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் எழுந்தருளியிருந்து இட்டசித்திகளை வாரி வழங்கும் பூரணபுஷ்கலா சமேத ஹரிகரபுத்திரப் பெருமானுக்கு நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் ஆனிமாதம் 30ம்(14-07-02)நாள் ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடிமாதம் 08ம்(23-09-02)நாள் செவ்வாய்க்கிழமை வரை பத்து நாட்கள் அலங்காரத்திருவிழா நடைபெற்று 24-07-02 புதன்கிழமை ஐயனார் திருக்கல்யாண வைபவமும் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

முதலாம்,பத்தாம் நாளில் அஷ்டோத்தரசத (108) சங்காபிஷேகமும்,

25-07-02 வியாழக்கிழமை வைரவர் பொங்கலும் நடைபெறும்.

மாலை 5.30மணி – நவகலசஅபிஷேகம்
6.45மணி – கூட்டுப்பிரார்த்தனை
7.30மணி – விஷேடபூஜை, ஐயனார்வீதியுலா,பிரசாதம்வழங்கல்

சங்காபிஷேகம் மாலை 5.00மணிக்கு ஆரம்பமாகும்.

9ம் நாள் (22-07-02) திங்கட்கிழமை இரவு தங்கத்தேரில் ஐயனார் வீதியுலா வரும் திருவருட் காட்சியும் இடம் பெறும்.

23-07-2002 செவ்வாய்க்கிழமை பௌர்ணமி. மாலை அம்பாளுக்கு அபிஷேக ஆராதனையும் மஹாமேருயந்ர பூஜையும் இடம்பெறும்.

பிரதம குருக்கள் – சுவாமி சோமேஸ்வரக்குருக்கள்.
உதவிக்குருக்கள – ராம்.சர்வலோகேஸ்வரக்குருக்கள்.

மங்கள வாத்தியம் – தேவஸ்தான மங்கள இசைக்குழுவினர்.
நாதஸ்வர தவில் மியூஸிக் ஒவ்(f) கனடா

பக்தி நேரகால நியமம் தவறாமல் பூஜை வழிபாடுகள் நடைபெறும் இத்தேவஸ்தானத்தில் திருவிழா காலத்திலும் இவை அனுஷ்டிக்கப்படும். அடியார்கள் அபிஷேகம் பூஜைக்குரிய பொருட்களை கொடுத்துதவி ஐயனார் திருவடிகளை வேண்டி திருவருள் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

3057 Universal Drive
Mississauga
(905) 602 2068 ☎ 629 2050
www.ambaltemple.org

சுவாமி சோமேஸ்வரக்குருக்கள்
பிரதமகுருக்கள்,அறங்காவலர்

# ஒரு பார்வை: பொடோ சட்டம்

(10ம் பக்கத் தொடர்ச்சி) இருப்பதாக. பிரதமரும். உள்துறை. அமைச்சரும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்கிறவர்களையும் பொடோவின் கீழ் கைது செய்ய வேண்டியிருக்குமே!

சட்டத்தின் 30(2) வது பிரிவு சாட்சிகளின் ரகசிய விசாரணைக்கு வழி வகுத்துள்ளது. சாட்சிக் கூறுவோர் பெயர். முகவரி. அடையாளம் ரகசியமாக வைக்கப்படுவதால் குறுக்கு விசாரணைக்கே வாய்ப்பு இல்லை. நீதித்துறை விசாரணையில் குறுக்கு விசாரணை மிகவும் முக்கியமானது.

அரசியல் நிர்ணயசபையில் இது பற்றி விவாதம் வந்தபோது குறுக்கு விசாரணை செய்யும் உரிமையை தனியே குறிப்பிட வேண்டும் என்று சிலர் வாதிட்டனர்.

அதற்குப் பதிலளித்த டாக்டர் அம்பேத்கர் குறுக்கு விசாரணையை - விசாரணையிலிருந்து தனியே பிரித்து விட முடியாது. எனவே அதைக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை என்று கூறியதோடு ஒரு மாகாண அரசுக்கு பைத்தியம் பிடித்தால் தான் இந்த உரிமையைப் பறிக்கும் என்று குறிப்பிட்டார்.

27(1) பிரிவுகள் ரேகை. எச்சில். தலைமுடி. விந்து மற்றும் குரல் பதிவுகளை சாட்சியமாகக் கேட்டால் தரவேண்டும் என்று வற்புறுத்துகிறது. தர மறுத்தால் குற்றவாளியாகக் கருதலாம் என்று கூறுகிறது.

52 (1) பிரிவின்படி குற்றம் நடந்த இடத்தில் கைரேகையோ தலைமுடியோ கிடந்தால் அதற்குரியவர் அதற்குரிய காரணத்தைக் கூற வேண்டும். இல்லை என்றால் குற்றவாளியாக கருதப் படுவார் என்று கூறுகிறது. சந்தேகத்தின் பயன் குற்றம் சாட்டப்பட்டவருக்கே கிடைக்க வேண்டும் என்று குற்றவியல் சட்டம் வழங்கியுள்ள உரிமையை இந்தப்பிரிவு பறித்து விடுகிறது. தடா பயங்கரவாதிகளை குறி வைத்தது. பொடோ பயங்கரவாத அமைப்பைக் குறி வைக்கிறது. பயங்கரவாத அமைப்பை நிர்ணயம் செய்வதற்கு என்ன அளவு கோல்? எதுவும் இல்லை.

வன்முறை செயலில் ஈடுபட்டால் மட்டும் பயங்கரவாத அமைப்பு அல்ல. அப்படி எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாத அமைப்பைக்கூட பயங்கரவாத அமைப்பு என்று அறிவிக்கலாம்.

மத்திய அரசு எந்த அமைப்புக்கு பயங்கரவாத அமப்பு என்ற முத்திரையைக் குத்த விரும்புகிறதோ அந்த அமைப்புக்களை ஒழித்து விடலாம். சொத்துக்களை பறிமுதல் செய்து விடலாம். நீதிமன்றக் கட்டுப்பாடுகள் எதுவும் கிடையாது.

நன்கொடை தந்தவர்களையும் சிறையில் தள்ளலாம். இப்படி அடிப்படை மனித உரிமைகளை மறுக்கும்இந்தச்சட்டம் தடாவை விட மென்மையானதா? இப்படி வாதிடுவது. அப்பட்டமான பொய் அல்லவா? ஒரு ஜனநாயக நாட்டில் இத்தகைய சட்டங்கள் அமுலில் இருக்கலாமா?

## முஸ்லிம் தலைவர்கள் ஒன்றிணைந்து

(8ம் பக்கத் தொடர்ச்சி) அதே சமயம் தமிழரின் விடுதலைப் போராட்டம் நடைபெறும் அவர்களது தாயகத்திலே மொழியாலும் வாழ்க்கை முறையாலும் ஒன்றிணைந்து உணர்வும் உயிருமாகப் பின்னிப் பிணைந்து நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் அந்தப் போராட்டத்தில் இருந்து விலகி நிற்க முடியாது. தள்ளிநிற்க இயலாது. தள்ளிநிற்கக் கூடாது. இருதரப்புப் போராட்டத்திற்கு மத்தியில் தாம் இணைந்து வாழ்ந்த இனத்தை விட்டுப் பிரிந்து நின்று ஒதுங்கி நின்று இருதரப்புக்கும் மத்தியில் லாபம் ஈட்ட முயலும் உத்தி எப்போதும் பலன் தரும் சிந்திக்கக்கூடாது. அடக்கப்பட்ட அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் ஒன்றிணைவதே அடக்கு முறையைத் தடுக்க வழிசெய்யும்.

(நன்றி யாழ்.உதயன்)

## உருளும் உலகில்...

(20ம் பக்கத் தொடர்ச்சி) பருத்தவர்கள். .... வருகின்றது. இந்த நடைமுறை விமான நிறுவ னங்களுக்கு அப்படியொன்றும் புதிதான ஒன்றல்ல. 1980 இலே இது விமான நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்பட்டு விட்டாலும் நடைமுறைக்கு கொண்டு வரப் படவில்லை. ஆனால் இப்பொழுது முறைப்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கி விட்டன.

சவுத்வெஸ்ட் நிறுவனத்தின் 90 வீதமான பயணிகள் தமது இருக்கைகள் சமயா சமயங்களில் ஆக்கிரமிக்கப்பட்டு விடுகின்றன. உடனடியாக நடவடிக்கை எடுங்கள் என்று முறைப்பாடு செய்து வருகின்றார்கள்.

### விடாது....

ஒரு ரயில் பெண் விவசாயிகளுடன் வந்த டிரக் வண்டியொன்றுடன் மோதியதில் 12 பேர் பலியாகியிருக்கின்றார்கள். எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல் 1998 பெப்ரவரியில் கமரூனில் ரயில் விபத்தொன்றில் 100 பேர் வரையில் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். எண்ணெய் ஏற்றி வந்த இந்த ரயில் தடம்புரண்டு வெடித்துள்ளது.


மனித தவறுகள் தான் விபத்துக்காரணம் என்று சொல்லப்பட்டாலும் இயற்கை மீது பழிபோடும் விதத்தில் 1993 இல் இடம்பெற்ற ஒரு மோசமான விபத்தில் 114 பயணிகள் மரணத்தை தழுவினார்கள். வெள்ளப் பெருக்கில் பாலம் அடித்துச் செல்லப்பட்டதால் ரயில் ஆற்றில் தலைகுப்புற வீழ்ந்துள்ளது. கென்யாவில் தான் இந்த மோசமான விபத்து சம்பவித்தது. விடாது தொடரும் விபத்துக்களின் விபரீதங்கள் என்று ஓயுமோ?


வாசகர்களின்
கவனத்திற்கு நக்கீரன்
அவர்கள் எழுதும் சங்கம்
வளர்த்த தமிழ் தொடர்
அடுத்த வாரம்வெளிவரும்


## மணமகள் தேவை

Alliance invited for hand some computer progrmer age 37 years, u.s. citizen, and widower with 2 children, ages 3 2/1, 6 months. seek fair. good looking tamil, hindu girl, must be educated and between the ages of 25 -36 years. if interested please contact with horescope.

E.Mail - sandhyasuren @ yahoo. com


இடியப்ப மெசின்

வர்த்தக ஸ்தாபனங்களுக்கான மிகவும்
புதிய தொழில் நுட்பத்துடன் கூடிய
அதி திறன் கொண்ட இடியப்ப மெசின்
1மணி நேரத்தில் 3000
இடியப்பத்திற்கு மேல் தயாரிக்கலாம்
மற்ற மெசின்களுடன் ஒப்பிடும்போது
75 சத வீத தயாரிப்புச் செலவு மிச்சம்

LIFE TIME WARRANTY
TROUBLE FREE

கல்யாணி, சுவையகம்,
ஆனந்தபவன் மற்றும்
பல ஸ்தாபனங்களில்
பாவனையில் உள்ளது
போலிகளை நம்பி
ஏமாறாதீர்கள்

வீட்டுப் பாவனைகான
இடியப்ப மெசின்

SEYON GROUP
Tel: (416) 291-5656 Fax: (416) 609-9889
205-3852, Finch Avenue East, Scarborough, Ontario M1T 3T9.

உ

சுவாமியே சரணம் ஐயப்பா

# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

## 635 Middlefield Road, Scarborough, Ont. M1V 5B8

**TEL: 416-321-6104 FAX: 416-321-7558 Web: www.ayyappan.com**







# ஸ்ரீ பூரணை புஷ்கலா சமேத ஐயனார் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

**14-07-2002** தொடக்கம் **25-07-2002** வரை

*ஐயன் அடியார்களே!*

*நிகழும் சித்திரபானு வருடம் ஆனி மாதம் 30ம் நாள் (14.07.2002) ஞாயிற்றுக்கிழமை கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் பரிவார மூர்த்தியாக வீற்றிருக்கும் ஸ்ரீபூரணை புஷ்கலா சமேத ஐயனார் அலங்கார உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து 25.07.2002 வியாழக்கிழமை பைரவர் சாந்தி வரை நடைபெற திருவருள் கூடியுள்ளது. 22.07.2002 திங்கள்கிழமை காலை 7.30 மணிக்கு 108 அஷ்டோத்தர சங்காபிஷேகம், விசேட பூசைகள் நடைபெற்று 11.00 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணித்து வெளிவீதி உலா வருவார். திருவிழாக் காலங்களில் அடியார்கள் தினமும் வருகைதந்து ஸ்ரீ பூரணை புஷ்கலா சமேத ஐயனாரை வழிபாடு செய்து திருவருள் பெற்றுய்யுமாறு அன்போடு அனைவரையும் அறங்காவலர் சபையினர் வேண்டிக் கொள்கின்றார்கள்.*

## திருவிழா நிகழ்வுகள்

| நாள் | திகதி | திருவிழா | நாள் | திகதி | திருவிழா |
|---|---|---|---|---|---|
| 1ம் நாள் ஞாயிறு | 14-07-2002 | கொடியேற்றம் | 7ம் நாள் சனி | 20-07-2002 | மஞ்சத்திருவிழா |
| 2ம் நாள் திங்கள் | 15-07-2002 | மங்கள உற்சவம் | 8ம் நாள் ஞாயிறு | 21-07-2002 | வேட்டை, சப்பறம் |
| 3ம் நாள் செவ்வாய் | 16-07-2002 | கைலாசவாகனம் | 9ம் நாள் திங்கள் | 22-07-2002 | தேர் |
| 4ம் நாள் புதன் | 17-07-2002 | மங்கள உற்சவம் | 10ம் நாள் செவ்வாய் | 23-07-2002 | தீர்த்தம் |
| 5ம் நாள் வியாழன் | 18-07-2002 | மங்கள உற்சவம் | 11ம் நாள் புதன் | 24-07-2002 | திருக்கல்யாணம், பூங்காவனம் |
| 6ம் நாள வெள்ளி | 19-07-2002 | வசந்தோற்சவம் | 12ம் நாள் வியாழன் | 25-07-2002 | பைரவர் சாந்தி |

*தேர்த்திருவிழா அன்று சுவாமி 11:30 மணிக்கு தேருக்கு வருவார். ரத உற்சவத்தை தொடர்ந்து 2.00 மணிக்கு பச்சை சாத்துதல் நடைபெறும்.*

குறிப்பு: **அபிசேகத்துக்குரிய பால், தயிர், மலர்கள் முதலியன பொருட்களைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

*இறைசேவையிலுள்ள*
*ஆலய அறங்காவலர் சபையினர்*
*7.07.2002*

சுபம்

*கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்*
*635 மிடில்பீல்ட் றோட், ஸ்காபரோ.*
*தொலைபேசி இலக்கம்: (416)321-6104*

*பிரசுர அன்பளிப்பு: அபிராமி அச்சகம் - யாழ் கேக் ஹவுஸ்*

# மழலைகள் பூங்கா

## கழுதை சிங்கமான கதை

காட்டின் ராஜாவான சிங்கம் வெளியூர் போய்விட்டது. அதனால் கழுதைக்கு தானே ராஜாவாகவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. இதற்கு என்ன செய்யலாம் என்று கழுதை யோசித்தது.
சிங்கத்தின் குகைக்குச் சென்றது. அங்கிருந்து சிங்கத்தின் தோலை எடுத்துக் கொண்டு வந்தது. அந்தத்தோலை தனது உடலில் போர்த்திக் கொண்டது கழுதை.
குகையை விட்டு வெளியேறியதும் மற்ற மிருகங்களைப் பார்த்து சிங்கத்தைப் போல் மிரட்டியது . மிருகங்களும் இந்தப் புதிய சிங்கத்துக்குப் பயந்து நடுங்கின.
திடீரென காற்றும் மழையும் பிடித்துக் கொ ண்டது. சிங்கத்தின் தோலைப் போர் த்திக் கொண் டிருந்த கழுதைக்கு அரிப்பு எடுக்கவே தோலை கழற்றிவைத்தது.
அந்தச் சமயத்தில் தானா அங்கு நரியார் வர வேண்டும். அது கழுதை யின் வேடத்தை கண்டு கொண்டது. உடனே எல்லா மிருகங்களுக்கும் சொல் லிற்று. இதுவரை ஏமாந்த மிருகங்கள் கழுதையை பலமாகத் தாக்கின. கழுதை தனது அவலக்குரலில் அழுது கொண்டே ஓடிற்று.



இரண்டு படங்களுக்குமிடையில் 7 வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவை எவை என்பதைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்

### கூடி வாழ்ந்திடு

குட்டிப் பாப்பா! குட்டிப்பாப்பா!
குறும்பு பண்ணாதே - நீயும்
கொட்டிக் கிடக்கும் மண்ணின் மீதே
குதித்தே ஆடாதே
வெட்டிப் பேச்சும் வீணாய் வம்பும்
விளைத்து நிற்காதே - எதற்கும்
தட்டிக்கேட்கும் துணிவு வேண்டும்
தயங்கி நிற்காதே!
நாடும் வீடும் நன்றாய் வாழ
நாளும் உழைத்திடு - நீயும்
கூடி வாழும் கொள் கையுள்ளம்
கொண்டே வாழந்திடு

## நாடு விட்டு நாடு பறக்கும் வண்ணத்துப் பூச்சி



வண்ணத்துப்பூச்சிகள் பறந்து செல்லும்போது தாங்கள் செல்லும் திசையை நன்கு அறிந்து கொள்ளும் ஆற்றல் உடையது.இதன் வேகம் மணிக்கு 10 கி.மீற்றர் ஆகும். சிலவகை வண்ணத்துப்பூச்சிகள் முட்டையிடுவதற்காக சுமார் 2 ஆயிரம் கிலோ மீட்டர்கள் வரை பறந்துசென்று முட்டையிடுகின்றன.
இமயமலை அடிவாரத்தில் வாழும் சிலவகை வண்ணத்துப் பூச்சிகள் அங்கு கோடைகாலம் ஏற்படும்போது அங்கிருந்து புறப்பட்டு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று விடுகின்றது. இதில் 'லார்ஸ் கேபே ஒயிட்' என்னும் இனத்தைச் சேர்ந்த வண்ணத்துப்பூச்சிகள் இவ்வாறு அடிக்கடி ஐரோப்பிய நாடுகளுக்குப் பறந்து செல்கின்றன. 'ஸ்வாலோ டெயில்' என்னும் இனத்தைச் சேர்ந்த வண்ணத் துப்பூச்சி இந்தியாவில் இருந்து இலங்கைக்கும் பறந்து செல்கின்றன.
நீல நிற வண்ணத்துப்பூச்சிகளில் பெண் இனத்தைச் சேர்ந்த வண்ணத்துப்பூச்சிகள் சுயவரமுறையில் தான் தன்கருப் பிடித்த ஆண் வண்ணத்துப்பூச்சியை தேர்ந்தெடுக்கின்றது.
ஆரஞ்சு வண்ணத்துபூச்சிகள் வேகமாக பறப்பதில்லை.
வண்ணத்துப்பூச்சிகள் முட்டையிடும்போது ஒரே இடத்தில் முட்டையிடாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாக பரவலாக முட்டையிட்டு வைக்கும்.

மங்கையர் பக்கம்

## தாயின் அரவணைப்பு குழந்தைக்கு அவசியம்

கர்ப்பகாலத்தில் இருக்கும்போது குழந்தை எந்த அளவு பாதுகாப்போடு இருக்கின்றதோ அதே பாதுகாப்பை பிறந்த பின்னரும் எதிர்பார்க்கின்றது. சரியான அரவணைப்பு கிடைக்கவில்லை என்றால் - நம்மை யாருமே கவனிக்கவில்லை என்ற எண்ணம் ஏற்படுகின்றது. இது குழந்தையின் சந்தோஷத்தை வெகுவாகப் பாதித்து விடுகின்றது. மனதில் ஒரு பய உணர்வை உண்டாக்கிவிடுகின்றது. இது ஆரோக்கியமானதல்ல. எனவே குழந்தைகளுக்கு இப்படியான ஒரு உணர்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது தாயின் கடமையாகும்.
வெறும் அரவணைப்பு மட்டும் சுகம் தந்துவிடாது. உணர்வு கலந்த அரவணைப்பு அவசியம்.
குழந்தையின் ஒட்டுமொத்த அன்பும் தனக்குரியதாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படாத அம்மாக்களே இருக்கவே முடியாது. அன்பான அரவணைப்போடு மசா உம் செய்தால் குழந்தையின் மனம் அம்மாவின் அன்புக்காக எப்போதும் ஏங்கிக்கொண்டேயிருக்கும்.
குழந்தையின் உள்ளங்காலை மென்மையாக தடவுதல், விரல்களில் ஊதுதல் இப்படிச் செய்தால் குழந்தை மிகவும் பாதுகாப்பாக இருக்கின்றோம் என்று நினைக்கின்றது. சுகத்தில் நிம்மதியாகத் தூங்கவும் ஆரம்பிக்கின்றது. அம்மாக்கள் செய்கின்ற மசா ஆழ்ந்த நித்திரையைத் தழுவுகின்ற குழந்தைகள் நீண்ட நேரம் தூங்குவதோடல்லாமல் தூங்கி எழும்பும்போது களைப்பின்றி எழும்புவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளார்கள்.



மசா செய்வதால் குழந்தையின் எடையில் சாப்பிடுகின்ற உணவின் கலோரியால் வழக்கமாய் பெறுவதை விட அதிகமாகின்றது. மனசுக்கு டென்ஷன் ஏற்படுத்தும் ஹோர்மோன் சுரப்பது குறைகின்றது. அதே நேரத்தில் சுறுசுறுப்பை ஏற்படுத்தும் செரோடோனின் என்ற ஹோர்மோன் அதிகமாகச் சுரப்பதற்கும் மசா உதவுகின்றது. இவ்வாறு செய்வதால் குழந்தை எப்போதும் சுறுசுறுப்புடன் காணப்படும்.
குழந்தைக்கு மசா செய்வதால் அம்மா தன் மீது மிகுந்த அன்போடு இருக்கின்றார் என்ற எண்ணம் மட்டுமல்லாமல் அம்மா எந்தச் சூழலிலும் நம்மைக் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையும் குழந்தைக்கு ஏற்படுகின்றது.
உளரீதியாகப் பார்த்தால் மசா செய்வதன் மூலம் குழந்தைக்கு ஆக்கபூர்வமான எண்ணங்கள் அதிகம் ஏற்படும். குளிர் காலங்களில் குழந்தையின் கைகால்கள் விறைத்துப் போயிருக்கும் இந்த நிலையில் மென்மையாக தடவி சூடான காற்றை ஊதி மசா செய்வதால் குழந்தைகள் மந்த நிலை நீங்கி சுறுசுறுப்புடன் செயற்படுவார்கள்.

## புருவங்கள் அழகாக



பெண்களின் முகத்தின் அழகை வெளிப்படுத்துவதில அவர்களது புருவங்களுக்கு மிக முக்கிய பங்கு உண்டு. புருவங்கள் வெறும் அழகுக்காக மட்டுமன்றி கண்களின் பாதுகாப்பிற்கும் உதவுகின்றன. அவற்றைப் பாமரிக்கும் முறைகள் வருமாறு:
சிலருக்குப் புருவங்களில் போதிய அளவு ரோம வளர்ச்சி இருக்காது. அது பரம்பரைத் தன்மை காரணமாக இருக்கலாம். இன்னும் சிலருக்கு புருவத்திலுள்ள ரோமங்களின நிறம் மாறியிருக்கலாம. இவற்றை சில சிகிச்சைகளின் மூலம் சரி செய்யலாம்.
புருவங்கள் அடர்த்தியாக இருந்தால் தான் அழகு . புருவங்களின் ஆரோக்கியத்தில் மிக முக்கிய பங்கை வகிப்பது ஒலிவ் எண்ணெய். எண்ணெயை சம அளவு எடுத்து புருவங்களின் மேல் மசாசெய்து வரவும். இதனால் அந்த இடங்களில் இரத்த ஓட்டம் அதிகரித்த முடி வளர்ச்சி கூடும்.
எண்ணெய் தடவி மசா செய்வதற்கு முன்பாக புருவங்களை விரல்களால் மென்மையாக கிள்ளி விடவும். சிலருக்குப் புருவங்களில் ஆங்காங்கே புழு வெட்டு மாதிரி இருககும். இவாகள் தோல்வைத்தியரை நாடி அதறகான சிகிச்சையை மேற்கொள்ளலாம்.
ஒலிவ் எண்ணெய்க்கு புருவங்களை கருமையாக்கும் தன்மை உண்டு. அதனால் தினம் ஒரு முறையாவது மசா செய்யவும்.
கண்களில் ஏதேனும் கோளாறுகள் இருந்தாலும் புருவங்களில் உள்ள ரோம வளர்ச்சி அதிகமாகவோ குறைவாகவோ இருக்கக்கூடும். கண் பார்வைக் கோளாறுக்கான சரியான சிகிச்சையை மேறகொள்ள வேண்டும்.
கண்களையும் புருவங்களையும் அடிக்கடி சுருக்கி கசக்கக்கூடாது. அப்படிச் செய்தால் புருவங்கள் மற்றும் கண்களின் அழகு பாதிக்கப்படும்.

## IMMIGRATION SERVICES

- அகதிக் கோரிக்கை
- நிரந்தர வதிவிட உரிமை
- குடிவரவு மேன்முறையீடு
- மனிதாபிமான மனு
- தடை உத்தரவுப் பரிசீலனை
- குடும்ப விவகார வழக்குகள்

அமெரிக்க எல்லைகளில், சிறைகளில் உள்ளவர்களை உடனடியாக விடுவித்தல்

குடிவரவு சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களிலும் நாம் உங்களுக்குச் சிறப்பாக உதவ முடியும்

**குடிவரவுச் சேவைகள்**
**சாம் நாகேந்திரா**
(குடிவரவு ஆலோசகர் / மொழிபெயர்ப்பாளர்)

**ROBERT I. BLANSHAY**
Barrister & Solicitor
49 St. Nicholas Street
*(Yonge/Wellesley)*
TEL: (416) 413-4955
FAX: (416) 413-1649

**SAM NAGENDRA**
**TEL: (905) 405-9615**
24 HRS. PAGER: 360-9230
EMAIL: nage@sprint.ca

**LEGAL AID ACCEPTED**



இரசாயன சேர்க்கை கொண்ட செயற்கை சம்பூக்களை பாவித்து மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?

**கவலையைவிடுங்கள்**

# Vitaplex Shampoo & Conditioner

**(சம்போ அன்ட் கன்டிஷனர்)**

**உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.**

மலிவான செயற்கைச் சம்பூக்கள் உங்கள் மண்டை ஓட்டின் தோலைக் கடினமாக்குவதுடன் மயிர்த்தோலையும் உரிக்கின்றது. இதனால் சொடுகு, கடி வேறு உருவாகின்றது.

**An Innovation from MET Inc.**




கனடாவில் பல வருட ஆராய்ச்சியின் பலனால் இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட வைற்றபிளக்ஸ் சம்பூ அன்ட் கண்டிஷனர் உங்கள் கட்டுப்பாடற்ற காய்ந்த அல்லது எண்ணைத்தன்மையான மண்டையோட்டை ஒழுங்குபடுத்தி உதிரும் தலைமுடியின் விகிதத்தை நன்றாகக் குறைத்து உங்கள் தலைமயிருக்கு புத்துயிர் அளிக்கின்றது.

**குடும்பத்தில் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உபயோகிக்கக்கூடிய தரமான சம்போ அன் கன்டிஷனர்**

**கிடைக்குமிடங்கள்**

| | |
|---|---|
| Vitaplex Shampoo | $9.99 |
| Vitaplex Conditioner | $9.99 |
| Vitaplex Shampoo Plus Conditioner | $18.99 |

Applicable Taxes Extra

ரொரன்ரோ, ஸ்காபரோ, நோர்த்யோர்க், எதோபிக்கோ மிசிசாகா, பிரம்ரன் மொன்றியல், ஒட்டாவா ஆகிய இடங்களில் உள்ள அமோக தமிழ் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

(கனடாவில் தயாரிக்கப்படும் சகல வகையான சம்பூக்களும் கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது)

## கிடைக்குமிடங்கள்

| | | |
|---|---|---|
| **SCARBOROUGH** | | |
| இரா சுப்பர் மார்க்கட் | (Midland & Eglinton) | 416-269-2622 |
| சங்கர் அன் கோ | (Kennedy & Eglinton) | 416-759-5100 |
| சுரபி | (Birchmount & Eglinton) | 416-285-8518 |
| லோட்ஸ் சுப்பர் மார்க்கட் | (Markham & Eglinton) | 416-266-5025 |
| லோட்ஸ் சுப்பர் மார்க்கட் | (New Location) | 416-264-1546 |
| எஸ். பி. இம்போட்டர்ஸ் | (Brimley & Lawrence) | 416-266-3077 |
| நியூ ஸ்பைசி லாண்ட் | (Markham & Sheppard) | 416-292-9769 |
| ஜவ்னா சுப்பர் மார்க்கட் | (Markham & Tuxedo Crt.) | 416-289-8812 |
| யாழ்நகர் ரேடர்ஸ் | (Midland & Ellesmere) | 416-285-0587 |
| யாழ்ரன் மார்க்கட் | (Warden & Finch) | 416-494-9494 |
| டெயிலி நீட்ஸ் | (Pharmacy & Finch) | 416-490-7703 |
| **MARKHAM** | | |
| பிரியாஸ் | (Kennedy & Denison) | 905-944-1229 |
| பிரியாஸ் | (Brimley & Steeles) | 905-415-8501 |
| **BRAMPTON** | | |
| S.T. P. MARKET | (Kennedy / Steeles) | 905-455-3483 |
| **MISSISSAUGA** | | |
| தர்ஷனாஸ் | (Dundas & HWY 10) | 905-270-7576 |
| தர்ஷனாஸ் | (Field Gate & Bloor) | 905-625-8152 |
| **TORONTO** | | |
| துவாரகாஸ் | (Victoria Park & Eglinton) | 416-757-1091 |
| நிகல் குறோசரி | (Victoria Park & St. Clair) | 416-755-6724 |
| றோயல் குறோசரி | (Victoria Park & Danforth) | 416-693-8078 |
| யாழ் சுப்பர் ஸ்ரோஸ் | (Wellesley & Parliament) | 416-923-9806 |
| தனா சுப்பர் மார்க்கட் | (Queen & Jemeson) | 416-534-7770 |
| பாலா பிறதர்ஸ் | (Landsdowne & Bloor) | 416-532-6809 |
| ஏஜிபி | (Landsdowne Subway) | 416-531-3306 |
| **ETOBICOKE** | | |
| சுபீனா சுப்பர் மார்க்கட் | (Keele & Sheppard) | 416-638-9554 |
| ஐயம்ஸ் குறோசரி | (Jane & Finch) | 416-636-0884 |
| உதயாஸ் | (Kipling & Steeles) | 416-740-7971 |
| **MONTREAL** | | |
| மார்சே மாருதி | (155 Jean Talon East) | 514-270-9511 |
| மார்சே எமி | (6455 Victoria Ave.) | 514-731-5368 |
| மார்சே துர்க்கா | (Parc Metro) | 514-276-9262 |
| மார்சே அலெக்ஸ்சாண்டியா | (Cote Desneiges) | 514-737-0612 |
| மார்சே மெயில்ஸ் | (Sauve / St. Laurent) | 514-389-5236 |
| மார்சே A.M.R. | (Cote Vertu / Sauve) | 514-334-6737 |





உங்கள் உடல்,
உள
நலம் பேண

**வைத்திய நிலையம்**

**டாக்டர் யசோ தர்மரத்தினம்**
**குடும்ப வைத்தியர்**
*(யாழ். வைத்தியசாலையில் பலவருட அனுபவம் பெற்றவர்)*

**Dr (Mrs) YASHO THARMARATNAM**
(MBBS, MD), (CCFP)

**FAMILY DOCTOR**




2466 Eglinton Ave. East, Unit 03
Scarborough, ON M1K 5J8
*(Near Kennedy Subway Station)*

**(416) 266-7786**



# ஈழப்பிரச்னையில் இந்தியத் தலையீடு

## 89

ஜுலை 24 ஆம் திகதி விசேட விமானம் ஒன்றின் மூலமாக சென்னைக்கு அழைத்து வரப் பட்ட பிரபாகரனும் அவரது குழுவினரும் முதலில் தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனைச் சந்தித்தார்கள்.
அதனைத் தொடர்ந்து அவர்கள் அங்கிருந்து புதுடில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.
சென்னையில் அப்போது தங்கியிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டார்.
அன்று இரவு புதுடில்லி வந்தடைந்த பிரபாகரனும் குழுவினரும் புகழ் பெற்ற அசோக் ஹோட்டலில் தங்க வைக்கப் பட்டனர். இவர்களுக்காக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.
ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடனான இறுதிக்கட்டப் பேச்சுக்களுக்காக கொழும்பு விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் களது பரிசீலனைக்காகக் கொடுக்கப்படாத நிலையில் இந்த உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு இந்திய அதிகாரிகளால் பிரபாகரன் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளப்பட்டார்.
இந்திய அதிகாரிகள் நடந்து கொண்ட முறையும் அவர்களது அணுகுமுறையும் பிரபாகரனுக்கும் அவரது குழுவினருக்கும் பெரும் அதிர்ச்சியையும் அதிருப்தியையும் கொடுத்தது.
இனநெருக்கடியைக் காரணமாக வைத்து இலங்கையும் இந்தியாவும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடப்போகின்றன என்ற செய்தியே பிரபாகரனுக்கு முதலில் அதிர்ச்சியைக் கொடுத்தது.
விடுதலைப் புலிகளை ஒதுக்கிவைத்துவிட்டு இந்தியாவும் இலங்கையும் செய்து கொண்டுள்ள ஏற்பாடுகளை அவரால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை.
இவ்வாறான ஒரு உடன்படிக்கைக்கு தன்னு டைய அங்கீகாரத்தை வழங்கமுடியாது என்பதையும் அவர் அங்கு திட்டவட்டமாகத் படும் என்ற எதிர்பார்ப்பிலேயே பிரபாகரனும் அவரது குழுவினரும் புதுடில்லி வந்திருந்தார்கள்.
யாழ்ப்பாணத்தில் நடத்திய பேச்சுக்களின் போதும் இந்த விதமான கருத்துக்களைத் தான் பூரி தெரிவித்திருந்தார்.
ஏற்கனவே தயாரிக்கப்பட்டுவிட்ட உடன் படிக்கையைத் தம் மீது திணிப்பதற்கான ஒரு உபாயமாகவே தம்மை இந்திய அரசு புதுடில்லிக்குக் கொண்டு வந்திருக்கின்றது என்பது பிரபாகரனுக்கும் அவரது குழுவி னருக்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது.
இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து தமது கருத்துக்களைத் தெரிவிக்கமுடியும் எனவும் தமது யோசனைகளை உடன் படிக்கையில் இணைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் பிரபாகரன் எதிர்பார்த்ததாக டிக்ஸிற் தன்னுடைய நூலில் தெரிவித்திருக்கின்றார்.
ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் பேச்சுக் களை நடத்தி இந்த உடன்படிக்கைக்கு இறுதிவடிவத்தைக் கொடுக்கவேண்டும் எனவும் பிரபாகரன் எதிர்பார்த்ததாக டிக்ஸிற் சுட்டிக்காட்டுகின்றார்.
விடுதலைப் புலிகளுடைய இந்த எதிர்பார்ப் புக்கள் எப்படியானதாக இருந்தபோதிலும் அதனை ஏற்றுக்கொள்ள இந்தியா தயாராக இருக்கவில்லை.
ஏற்கனவே இறுதிவடிவம் கொடுக்கப்பட்டு விட்ட உடன்படிக்கையை புலிகள் ஏற்றுக் கொண்டாலென்ன, இல்லையென்றாலென்ன அதனை நடைமுறைப்படுத்துவது தான் இந்தியாவின் ஒரே நிலைப்பாடாக இருந்தது.

### புலிகளின் கடும்போக்கும்





வட்டமாக டிக்ஸிற்றிடம் தெரிவித்தார்.
இதனால் இந்தக்கூட்டம் எந்தவித இணக் கப்பாடுகளும் அற்ற ஒரு நிலையில் குழப்பங்களுக்கு மத்தியில் முடிவுக்கு வரவேண்டிய நிலைமை ஏற்பட்டது.
விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு இந்தியாவுக்கு குறிப்பாக டிக்ஸிற்றுக்கு பெரும் அதிருப்தியைக் கொடுப்பதாக அமைந்திருந்தது.
பிரபாகரனைப் பார்த்து டிக்ஸிற் கடுமையான தொனியில் பேசத் தொடங்கினார். "இந்தியப் பிரதமரை ஒரு இக்கட்டான சங்கடமான நிலைக்குள் மாட்டிவிட நீங்கள் மேற் கொள்ளும் நான்காவது முயற்சி இது" என கடுமையாக கூறிய டிக்ஸிற், முதலில் திம்புப் பேச்சுக்களின்போதும் பின்னர் புதுடில்லியில் இடம் பெற்ற பேச்சுக்களின் போதும்

# ஒப்பந்தத்தை ஏற்க மறுத்த பிரபாகரன் இந்தியா கொடுத்த நெருக்குதல்கள்

சென்றிருந்த இந்திய உயர் ஸ்தானிகர் ஜே.என்.டிக்ஸிற்றும் அதே தினம் தான் புதுடில்லியை வந்தடைந்தார்.
மறுநாள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களுடன் இந்திய உயர் அதிகாரிகள் நடத்திய நீண்டபேச்சுக்களின்போது டிக்ஸிற்றும் கலந்து கொண்டார்.
அசோக்ஹோட்டலில் நடைபெற்ற இந்தப் பேச்சுக்களின்போது டிக்ஸிற்றுடன் புலனாய் வுப் பணியகத்தைச்சேர்ந்த எம்.கே. நாரயணன், இணைச்செயலாளர் சகாதேவன், கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிக ராலய முதலாவது செயலாளர்பூரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.
பிரபாகரனுடன் அன்ரன் பாலசிங்கம், திலீபன், யோகி ஆகியோரும் இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

### பிரபாகரன் தெரிவித்த கடும் ஆட்சேபனைகள்

விரிவான முறையில் நடைபெற்ற இந்தப் பேச்சுக்கள் ஆரம்பத்தில் சுமுகமான முறையில் ஆரம்பித்தாலும் போகப்போக சூடு பிடிக்கத் தொடங்கியது.
உடன்படிக்கை தொடர்பாக மேலெழுந்த வாரியாக சில விபரங்களைத் தெரிவித்த

**பண்டிதர் எழுதும் தொடர்**

டிக்ஸிற், இதற்கான அங்கீகாரத்தை விடுதலைப் புலிகள் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்தார்.
உடன்படிக்கையை ஒவ்வொரு பிரிவாக தான் விளக்கியதாக டிக்ஸிற் தெரிவித்திருக்கின்ற போதிலும் இதன் உள்ளடக்கம் தொடர்பாக தமக்கு விரிவான முறையில் கூறப்பட வில்லை எனவும் அவசரமாக அந்த உடன்படிக்கையைக் காண்பித்த இந்திய அதிகாரிகள் பின்னர் அதனைக் கொண்டு சென்றுவிட்டதாகவும் விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தார்கள்.
அதன் போட்டோ பிரதி ஒன்று கூட



தெரிவித்தார்.
தமிழ் மக்களின் பிரதிநிதிகளைக் கலந்தா லோசிக்காமல் அவர்களது அபிப்பிராயத்தை அறியாமல் அவர்களது பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்காக எனக்கூறி இரு நாடுகளும் கைச்சாத்திடவுள்ள உடன்படிக்கை ஒரு சமாதானப் பொறி என பிரபாகரன் கருதினார்.
இந்தப் பொறிக்குள் அகப்பட்டுக் கொண்டு விட அவர் தயாராக இருக்கவில்லை.

### புலிகளின் எதிர்பார்ப்பும் இந்திய நிலைப்பாடும்

உடன்படிக்கை தொடர்பாக அனைத்து முடிவுகளும் எடுக்கப்பட்ட பின்னர் அது தொடர்பாக தகவல்தருவதற்கு மாத்திரமே இந்தியா தம்மை அழைத்துள்ளது என்பதை விடுதலைப்புலிகளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.
சமாதானத் தீர்வுத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதில் தமது கருத்துக்கள் கேட்டுக் கொள்ளப்படும் - அவையும் உள்ளடக்கப்

### இந்தியாவின் கெடுபிடியும்

தாம் திட்டமிட்டதைச் சாதிப்பதற்காக இந்தியா கெடுபிடியாக நடந்து கொள்ளும் என்பதை விடுதலைப் புலிகளும் எதிர்பார்த்தி ருந்தார்கள்.
அதற்காக தமது நிலைப்பாட்டை விட்டுக் கொடுத்து இறங்கிச் செல்வதற்கும் அவர்கள் தயாராக இருக்கவில்லை.
சமாதானம் என்ற பெயரில் தம்மை ஒரு பொறிக்குள் விழுத்துவதற்கு இந்திய அரசு திட்டமிட்ட முறையில் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றது என்பதை விடுதலைப் புலிகள் புரிந்து கொண்டார்கள்.
தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் எந்த ஒரு தமிழ் அமைப்பினது சம்மதத்தையும் பெறறுக்கொள்ளாமல் இந்த உடன்படிக்கை தயாரிக்கப்பட்டுள்ளமையும் புலிகளுக்கு ஆத்திரமூட்டுவதாகவே அமைந்திருந்தது.
இந்தப் பின்னணியில் இந்த உடன்படிக் கைக்கு தம்முடைய அங்கீகாரத்தை தரமுடியாது என்பதை பிரபாகரன் திட்ட

இறுதியாக பெங்களூரில் நடைபெற்ற பேச்சுக்களின் போதும் பிரபாகரன் இவ்வாறு நடந்து கொண்டுள்ளார் என்ற ஒரு குற்றச் சாட்டையும் தூக்கிப் போட்டார்.
விடுதலைப் புலிகள் இவ்விடயத்தில் கடுமையான நிலைப்பாட்டைக் கடைப் பிடிப்பது இந்திய அதிகாரிகளுக்கு பெரும் அதிருப்தியைக் கொடுத்தது.
புலிகள் விடயத்தில் கடுமையாக நடந்து கொள்ளாவிட்டால் நிலைமைகள் மோச மடையலாம் எனவும் அவர்கள் கருதினார்கள்.

### கறுப்புப் பூனைகள் காவல் தொலைபேசியும் துண்டிப்பு

விடுதலைப் புலிகளுடைய அங்கீகாரம் இல்லாமல் உடன்படிக்கையில் கைச்சாத்தி டுவதிலுள்ள சங்கடம் இந்திய அதிகாரி களுக்குப் புரிந்தே இருந்தது.
ஈழத்தமிழர்களின் நலன்களைக் காக்கத்தான் இந்த உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்பட்ட நிலையில் ஈழத்தமிழர்களின் சார்பாக பிரதான அமைப்பாகவுள்ள விடுத லைப் புலிகளின் அங்கீகாரம் பெறப்பட வில்லை என்பது இந்தியாவின் நோக்கங் களுக்கு வேறு அர்த்தங்களைக் கற்பிப்பதாகவே இருக்கும்.
இதனால் உடன்படிக்கை கைச்சாத்திடப் படவுள்ள நிலையில் விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டையிட்டு கருத்துக்களை வெளிப்படுத்துவது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம்என இந்தியா கருதியது.
அதனால் அசோக் ஹோட்டலில் தங்கியுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதி கள் வெளியே செல்வதைத் தடுப்பதற்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் அவர்களைச் சந்திப்பதைத் தடுப்பதற்குமாக கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
இந்தியாவின் கீர்த்தி மிக்க கறுப்புப்பூனைப் படையினர் அசோக் ஹோட்டலில் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டனர்.
விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதி கள் மறைமுகமாக கைதிகள் என்ற நிலைக்கு கொண்டு வரப்பட்டனர்.
அவர்கள் தங்கியிருந்த அறைகளிலிருந்து தொலைபேசி அழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதும் தடுக்கப்பட்டது.
இவ்வாறான நடவடிக்கை மூலம் பிரபாகரனையும் அவரது குழுவினரையும் தனிமைப்படுத்தி அவர்கள் மீது மேலதிக அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கும் திட்டமிடப்பட்டது.
(அடுத்த வாரம் மிகுதி)

# மரண அறிவித்தல்



யாழ்ப்பாணம் பலாலி வீதி திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு நவரட்ணம் தெட்சணாமூர்த்தி அவர்கள் 11.07.2002 அன்று வியாழக்கிழமை திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி நவரட்ணம் - இராசம்மா தம்பதிகளின் அருமை மகனும்

திருமதி நித்தியலஷ்மியின் அன்புக் கணவரும்

காலஞ்சென்ற திரு.திருமதி செல்லத்துரை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்

மோகனதாஸ் (ஜேர்மனி) றஞ்சனதாஸ் (டென்மார்க்) பிறேமினா (மீனா - கனடா) லோகதாஸ் (டென்மார்க்) மாவீரர் சத்தியதாஸ் (மாவீரன் கப்டன் ஜொனி தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம்) பாலதாஸ் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும்

தயா (ஜேர்மனி) டொர்த்தி (டென்மார்க்) மதியழகன் (கனடா) சுகன்யா (இலங்கை) ஆறுமுகதாஸ். சண்முகதாஸ். கருணாதேவன். றோகினி. கனகலிங்கம். பிரிந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும்

நல்லம்மா. செல்லம்மா. இராஜலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்

தயாளலஷ்மி. பாக்கியலஷ்மி ஆகியோரின் அன்பு மைத்துனரும்

ஆரணி. சாயிராம் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும்

நாமகள்தேவி. கருணாகரன். சோபனா. தயாபரன். சுதாகரன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும்

பிரவீணா. சாகித்யன். ஜெனிபர். பிளிண்டா. தனுஜா. ஹறேஷ் ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருநெல்வேலியில் 15.07.2002 திங்கட்கிழமை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**தகவல்: திருமதி பிறேமினா மதியழகன்**
**(மீனா - மகள்) (416) 283 - 9303**

அமரர் உயர்திரு
நவரட்ணம் தெட்சணாமூர்த்தி
(பலாலி வீதி - திருநெல்வேலி வடக்கு)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02.05.1931 | 11.07.2002 |

# மரண அறிவித்தல்



திருமதி
கமலாதேவி தனபாலசிங்கம்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25.07.1938 | 11.07.2002 |

வேலணை மேற்கு தலைகாட்டியைச் சேர்ந்த திருமதி தனபாலசிங்கம் கமலாதேவி அவர்கள் 11.07.2002 வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் ஐயம்பிள்ளை தனபாலசிங்கம் (வவுனியா சமாதான நீதிவான்) அவர்களின் அன்புப் பாரியாரும்

காலஞ்சென்ற அருளம்பலம் - மீனாட்சிபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும்

காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - கோணேஸ்வரி (பொன்னம்மா) தம்பதிகளின் அன்பு மருமகளும்

கமலேஸ்வரன் (ஜேர்மனி) பாலேஸ்வரி (ஆசிரியை - இந்துக்கல்லூரி கோவிற்குளம் - வவுனியா) கணேஸ்வரன் (லண்டன்) ஜெகதீஸ்வரி (லண்டன்) தனேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்

ஹக்கே (ஜேர்மனி) சிவகுலசிங்கம் (வவுனியா) சங்கீதா (லண்டன்) சுரேஸ்வரன் (லண்டன்) ஜனகன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்

ஜொனாட்டஸ் (ஜேர்மனி) கோபிநாத் (வவுனியா) சாருகா (வவுனியா) கிரிஷாந்த் (லண்டன்) கோபிந்த் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேத்தியாரும்

சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற அலுவலர் - வேலணை தபால்கந்தோர் -கொழும்பு) சோமலிங்கம் (வவுனியா) பூலோகசுந்தரம்பிள்ளை (லண்டன்) இராசரெத்தினம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்

தனலட்சுமி (சிங்கப்பூர்) புஸ்பராணி (வவுனியா) விஜயலட்சுமி (லண்டன்) ஞானகலை (யாழ்ப்பாணம்) சோதியம்மா - முத்துசாமி (யாழ்ப்பாணம்) நவமணி - நாகரத்தினம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.07.2002 அன்று வவுனியாவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்: ஜனகன் (மருமகன் - கனடா) (514) 342 - 1536 பூலோகசுந்தரம்பிள்ளை (சகோதரர் - லண்டன்) 44 - 208 931 9893




-- சோதிடர் தர்மர்

| | | | |
|---|---|---|---|
| சந்திரன் | | ராகு புதன்,சனி | சூரியன் வியாழன் செவ்வாய் |
| சந்திரன் | இவ்வார கிரகநிலை | | சுக்கிரன் |
| சந்திரன் | | | |
| | கேது | | |

## மேடம்

சகல சௌபாக்கியங்களும் ஆடையலங்காரமும் கிட்டும். வீண் அலைச்சல் இருக்கும். வீட்டிலும் வெளியிலும்புகழ், மனமகிழ்ச்சி உண்டாகும். அரசவழியில் துன்பங்கள் வர இடமுண்டு. இடமாற்றம் ஏற்படலாம். செய்காரியங்களில் வெற்றியும் புகழும் கிட்டும். தெய்வ பக்தி நன்மை தரும். புதன், வியாழன் நல்ல நாட்கள்.

## இடபம்

புதிய வீடு சேரும் வாய்ப்புண்டு. வழக்குகள் சாதகமாகத் தீர்ப்பாகும். நண்பர்களால் நற்பலன் கிட்டும். கணவன் மனைவி உறவு சீராகும். தொழில் ரீதியாக வளர்ச்சி கிட்டும். உயர்பதவிகளும் வாய்க்கும். பூமியால் லாபங்கள் கிட்டும். மேலதிகாரிகள் தொல்லை தருவர். விபத்துக்கள் வந்து சேரும். பொருள் விரயம் ஏற்படும். மானக்கேடு உண்டாகும். சனியும் ஞாயிறும் நல்ல நாட்கள்.

## மிதுனம்

வாகனங்கள் மூலம் லாபங்கள் உண்டாகும். பெரியோர் மேலதிகாரிகள் ஆதரவு இருக்கும். பந்தயங்களில் வெற்றி கிட்டும். வெளியூர் பிரயாணங்கள் வாய்க்கும். தீயந
தீயகாரியங்களில் ஈடுபடுத்தும். துர்ப்போதனை செய்வோரால் துன்பம் விளையும். குடும்பத்தில் நோய் நொடி ஏற்படும். மருத்துவ செலவு அதிகரிக்கும். வெள்ளி நல்ல நாள்.

## கடகம்

மார்பு சம்பந்தமான நோய்கள் வரலாம். கெட்ட பெயர், கௌரவக் குறைவு ஏற்படும். மனைவி மக்களால் மகிழ்ச்சி உண்டாகும். லாட்டரி போன்றவற்றில் லாபம் கிட்டும். நண்பர், பெரியோர் மேலதிகாரிகள் ஆதரவு இருந்து வரும். பிரயாணம் மகிழ்ச்சி தரும். குடும்ப அங்கத்தவர்களை அனுசரித்துப் போகவும். புதன், வியாழன் அதிர்ஷ்ட நாட்கள்.

## சிம்மம்

எதிலும் வெற்றியுண்டாகும். அதிர்ஷ்ட லாபங்களும் சிலருக்கு வாய்க்கும். சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட வேண்டாம். பலவிதத்திலும் பயம் ஏற்படும். மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாகவேண்டியேற்படும். அவமானம் அடைய நேரிடலாம். செவ்வாய், புதன் நல்ல நாட்கள்.

## கன்னி

சுகபோகங்கள் அதிகரிக்கும். புதுமனை சேரும். அதிகாரத் தன்மையுடைய பதவிகள் வாய்க்கும்.
தனம்,சுகம் சேரும். சொந்த இடத்துக்கு திரும்பிச் செல்லலாம். தொழிலில் நினைத்தது கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கிட்டும்.
பெரியார், அரசாங்க அதிகாரிகள் ஆதரவு இருக்கும். செவ்வாய்,புதன் நல்ல நாட்கள்.

## துலாம்

இடமாற்றம் ஏற்படலாம். தொழில் விடயங்களில் அவதானம் தேவை. நண்பர் ஆதரவு இருந்து வரும். கௌரவம் பெருமை உண்டாகும். வழக்குகளில் நல்ல முடிவுகள் கிட்டும். பிரயாணங்கள் அதிகம்உண்டாகும். பந்தயம்,போட்களில் வெற்றி கிட்டும். பெற்றோர்க்கு தீயபலன்கள் ஏற்படும்.வெள்ளி நல்ல நாள்.

## விருச்சிகம்

தொழிலில் திறமையைக் காட்ட முடியும். நினைத்ததைச் செய்து முடிக்கலாம். திருமண முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பாராத வெற்றி கிட்டும். உறவினர் நன்மை கிட்டும். எதிரிகள் இடையூறு செய்யினும் அதனை வெல்லக்கூடியதாக இருக்கும். வெளியூர் பயணங்கள் மூலம் நன்மை கிட்டும். வெள்ளி, சனி நல்ல நாட்கள்.

## தனுசு

தீய எண்ணங்கள் உண்டாகும். ஆயுதங்களால் தொல்லை விளையும். பகை அதிகமாகும். எதிர்பாராத லாபம் கிட்டும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். மனைவிமக்களுக்கு நற்பலன்கள் கிட்டும். மனைவியுடன் கருத்து வேறுபாடு தோன்றும். நண்பர்களையும் பகைத்துக் கொள்ள நேரிடும். சனி, ஞாயிறு நல்ல நாட்கள்.

## மகரம்

பலவகையிலும் நற்பலன்கள் கிட்டும். திருமண முயற்சிகள் சாதகமாக அமையும். பெரியோர் சந்திப்பும் அதன் மூலம் நன்மைகளும் கிட்டும். அரசாங்க உதவி கிட்டும். எதிலும் எச்சரிக்கை அவசியம். மனம் தளராமல் இருந்தால் நினைத்ததைச் செய்து முடிக்கலாம். கணவன் மனைவி உறவு மகிழ்ச்சியாக அமையும். லாட்டரியில் வெற்றி கிட்டலாம். திங்கள், செவ்வாய் நல்ல நாட்கள்.

## கும்பம்

தொல்லைகள் பெருகும். தொழில் தடங்கல்கள் உண்டாகும். உறவினர் பகையாவர். சண்டை சச்சரவு ஏற்படும். நோயாலும் பகைவராலும் துன்பம் உண்டாகும். வீட்டில் இன்பம் அமைதி இருக்கும். தன்னம்பிக்கை அதிகமாகும். கௌரவம் பெருமை உயரும். கோபத்தைக் கட்டுப்படுத்தவும். வெள்ளி நல்ல நாள்.

## மீனம்

ஆடையாபரணம் சேரும். பொருளாதா முன்னேற்றம் உண்டாகும். மேலதிகாரிகள் ஆதரவு இருந்து வரும். பதவி உயர்வு போன்ற நன்மைகள் கிட்டும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். திருமணமாகாதவர்களுக்கு திருமணம் நடைபெறும் சாத்தியமுண்டாகும். உறவினர், நண்பர்களைப் பகைத்துக் கொள்ளாதிருக்கவும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். சனி, ஞாயிறு நல்ல நாட்கள்.


உங்கள் குழந்தைகளின் ஜாதகக் குறிப்புக்களை சரியாகக் கணிக்க

தொடர்பு கொள்ளுங்கள்

சோதிடர் தர்மர்

A.Tharumalingam
3 Lacey Green
Coulsdon
CR5 1BL
U.K



TORONTO TRUCK
FORKLIFT - HEAVY EQUIPMENT
SCHOOL

15% OFF






இப்பொழுது உங்களது டிரக் லைசன்சுக்குரிய பயிற்சியையும் வகுப்புக்களையும் தமிழ்மொழி மூலம் பெற்றுக் கொள்ளலாம். ஆங்கிலமொழி அறிவு அவசியமில்லை. தமிழ்மொழி மூலமான பயிற்சியும் அறிவுறுத்தலும் உங்களுக்கு இப்போது நேரடியாகவே கிடைக்கின்றது. ஒன்ராறியோவிலேயே மிகப் பெரியதும் திறமைமிக்கதுமான எமது நிறுவனத்தின் மூலம் உங்கள் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வசதிக்காகப் பல பயிற்சி நிலையங்கள் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| REXDALE | (416) 675-7500 |
| SCARBOROUGH | (416) 213-2222 |
| BRAMPTON | (905) 457-7565 |
| HAMILTON | (905) 662-9300 |
| MISSISSAUGA | (905) 270-1999 |
| TORONTO | (416) 675-4444 |

ஈழநாடு
EEZHANADU
P.O.BOX 878 STATION 'Q'
TORONTO - ONTARIO
CANADA -M4T 2N7
TEL: (905) 653- 3000
(416) 266 - 9919
(416) 528 - 1867
FAX: (905) 653 - 4031


N.K.S. DRAPERY & BLINDS
CUSTOM MADE
- VERTICAL BLINDS
- VENETIAN BLINDS
- DRAPERIES
- CURTAINS
- SHUTTERS

For FREE Estimates & Installation Call:
KETHA
(CCTCC's Award Winner – 2001)

210 SILVER STAR BLVD # 825
SCARBOROUGH - ONT
M1V 5J9
(905) 944-0218
(416) 321-6420


# அடுத்த ஆண்டு முற்பகுதியில் நாடாளுமன்றத் தேர்தல்?

அடுத்த ஆண்டு முற்பகுதியில் மீண்டும் ஒரு நாடாளுமன்றத் தேர்தல் ஸ்ரீலங்காவில் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. விரைவிலே நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்குத் தயாராக இருக்குமாறு நாட்டின் இரு பிரதான கட்சிகளான பொ.ஜ. முன்னணியும் ஐ.தே.கட்சியும் தமது அமைப்பாளர்களை மறைமுகமாகப் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் டிசம்பர் மாதத்துடன் தற்போதைய நாடாளுமன்றம் பதவியேற்று ஒருவருட காலம் பூர்த்தியாகின்றது. நாடாளுமன்றம் பதவியேற்ற ஒரு வருடகாலத்தின் பின்னர் அதனைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

அதேசமயம் நாடாளுமன்றத்தில் அரசுக்கு தற்போது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லை. அதனால் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணை மற்றும் கட்சித்தாவல் சட்டமூலம் என்பவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாத நிலை. சமாதான முயற்சிகளை முன்னெடுக்க பல முட்டுக்கட்டைகள். இவ்வாறான சூழலில் புதிய தேர்தல் ஒன்றை நடத்தினால் தாம்மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுவிட முடியும் என்று ஐ.தே. முன்னணி கருதுவதாகத் தெரிகிறது. எனவே நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு புதிய தேர்தல்களை நடத்துவதற்கும் அரசு நினைப்பதாகக் கூறப்படுகின்றது.

இதனால் விரைவில் தேர்தல்களை எதிர்கொள்ளத் தயாராக இருக்குமாறு தமது கட்சிக்காரர்களை ஐ.தே.கட்சித் தலைமைப்பீடம் ஸ்ரீ கோத்தா மறைமுகமாகப் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பொ.ஜ. முன்னணியும் தனது கட்சிக்காரர்களைத் தேர்தலுக்குத் தயாராக இருக்குமாறு பணித்துள்ளது என அந்த கட்சி வட்டாரம் தெரிவித்துள்ளது

# வை.கோ.வை விடுதலை செய்யுமாறு தமிழக, இந்திய அரசுகளிடம் தமிழ்க் கூட்டமைப்பு கோரிக்கை

ம.தி.மு.க பொதுச்செயலாளரும் ஈழத்தமிழரின் இனிய நண்பருமான வை.கோ.வையும் அவருடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள ம.தி.மு.க. தொண்டர்களையும் உடனடியாக விடுதலை செய்வதற்கு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய மத்திய அரசையும், தமிழக அரசையும் வேண்டுகின்றோம். வை.கோ.வை விடுதலை செய்யும் நடவடிக்கை இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கான ஓர் அங்கீகாரமாக அமையும். தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

வை.கோ. கைது தொடர்பாக கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கபட்டுள்ளது. அதில் மெலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வை.கோ. கைது செய்யப்பட்டமை குறித்து தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு ஆழ்ந்த அதிர்ச்சியையும் மனவேதனையையும் தெரிவிக்கின்றது. இலங்கைத் தமிழர்கள் சார்பாக தொடர்ந்து குரல் எழுப்பிய வை.கோ தமிழ்த்தேசிய இனப்பிரச்சனைக்கு நீதியானதும் நிரந்தரமானதுமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி வந்துள்ளார்.

தமிழ்த்தேசிய இனப்பிரச்சனைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் அரசியல் தீர்வைக்காணத் தவறிய தன் விளைவு தான் ஆயுத போராட்டத்திற்கு அடிகோலியது என்ற கருத்தினை அவர் பகிரங்கமாகத் தெரிவித்து வந்திருப்பதோடு இக் காரணத்தினால் ஆயுதப் போராட்டம் நியாயமானது என்பதையும் வலியுறுத்தி வந்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங்குகின்றார் என்ற காரணத்திற்காக வை.கோ. கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டிருப்பது இலங்கை வாழ் தமிழ்மக்களுக்கு ஆழ்ந்த விஷனத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ்மக்கள் சமாதான பேச்சுக்கள் இலங்கை அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தான் நடைபெற வேண்டுமென்ற நிலைப்பாட்டிற்கு தங்கள் அபரிதமான ஒப்புதலை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வழங்கியுள்ளனர் என்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமானது என்றும் கூட்டமைப்பு அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பிரபாவை நாடு கடத்தும் கோரிக்கை வலுவாகவே உள்ளது என்கிறார் இந்திய வெளிவிவகார அமைச்சர் சின்ஹா

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பான விசாரணைக்காக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடு கடத்த வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கை தொடர்ந்து வலுவாகவே உள்ளது. இது இலங்கை அரசுக்குத் தெரியும். இப்படிக் கூறினார் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவர் இந்தியப் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போது இபபடிக் கூறினார். இலங்கையில் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு ஆதரவு வழங்கும் வகையில் பிரபாகரனை நாடு கடத்தும் கோரிக்கையை இந்தியா கைவிடுமா என்று செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார். பிரபாகரனை நாடு கடத்தும் கோரிக்கையில் மாற்றமில்லை. அந்தக் கோரிக்கை சமாதான முயற்சியை எந்தவகையிலும் பாதிக்கப் போவதில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் தொடர்ந்து பதிலளிக்கையில் கூறியதாவது இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா தனது ஆதரவை வழங்கும். அரசும் புலிகளும் விரைவாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். பேச்சுக்கள் ஆரம்பித்து இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# வை.கோ. கைதைக் கண்டித்து எதிர்ப்பு நடவடிக்கை

ஈழத்தமிழரின் இனிய நண்பர் வை.கோ. பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைக்குள் தள்ளப்பட்டதைக் கண்டிக்கும் வகையில் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மேற்கொள்ள இருக்கின்றது.

83முதல் ஈழத்தமிழருக்காகக் குரல் கொடுத்து வரும் வை. கோ. கைது செய்யப்பட்டதைக் கண்டித்து ஈழத்தமிழ் மக்களின் உணர்வு பூர்வமான எதிர்ப்பை வெளிப்படுத்துவதென கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது. அவர் விடுதலை செய்யப்படும் வரை இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதென்றும் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

முதல் நடவடிக்கையாக இந்தியத் தூதுவரை இன்று திங்கட்கிழமை சந்தித்து வை.கோ. வை விடுதலை செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று கூட்டமைப்புத் தலைவர் கோரவுள்ளனர். அடுத்த நடவடிக்கையாக வவுனியா நகரசபை மைதானத்தில் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படவுள்ளது.

# மட்டக்களப்பில் புலிகளின் பகுதிக்குள் இராணுவ உயரதிகாரிகள் சென்று பேச்சு

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குச் சென்ற மட்டக்களப்பு மாவட்ட இராணுவத்தளபதி பிரிகேடியர் அன்ரனீஸ் தலைமையிலான குழு அங்கு விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தி விட்டுத் திரும்பியுள்ளது.

செங்கலடி - பதுளை வீதியைத் திறப்பது தொடர்பாக ஆராய்வதற்காகவே படையினரும் புலிகளும் பேசியுள்ளனர். 1990 முதல் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்த செங்கலடி - பதுளை வீதி இன்று திங்கட்கிழமை 15ம்திகதி திறக்கப் படுகின்றது.

இப்பாதை திறப்புத் தொடர்பாக உயர்மட்ட மாநாடு ஒன்று செங்கலடியில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் மட்டக்களப்பு இராணுவத்தளபதி அன்ரனீஸ், இணைப்பதிகாரி கேணல் குணசேகர ஆகியோரும் விடுதலைப்புலிகள் தரப்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் விசு. துரை ஆகியோரும் பங்கு பற்றினர்.

இந்தப்பாதையில் 20 கிலோ மீற்றர் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது

நீங்கள் வாகன விபத்தில் உங்கள் தவறால் அல்லது மற்றவர் தவறால் பாதிக்கப்பட்டீர்களா?

SIDNEY FINANCIAL AND ACCIDENT BENEFIT SERVICES

SIDNEY K. SITHIRAVADIVEL B.A. (Hons)
(416) 745-2794 (416) 745-0010
FAX: (416) 745-9228
2885 JANE STREET, UNIT # 2, NORTH YORK

அப்படியாயின் அவ் விபத்தால் உங்களுக்குக் கிடைக்கக் கூடிய இழப்பீடுகளான
- நிகழ்கால / எதிர்காலச் சம்பள இழப்பீடுகள்
- உங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான கொடுப்பனவுகள்
- வீட்டைப் பராமரிப்பதற்கான கொடுப்பனவுகள்
- வணிக இழப்பீடுகள்
- கல்வி இழப்பீடுகள்
- மறுதொழில் பயிற்சித்தல்
- சிறப்பு மருத்துவ வசதிகள்

மற்றும் விபத்துப் பற்றிய சட்ட உரிமைகளையும் ஆலோசனைகளையும் தமிழில் பெற்றுக் கொள்வதற்கு நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்

இவற்றுடன் உங்கள்
- INCOME TAX
- BUSINESS ACCOUNTING
- BUSINESS G.S.T, P.S.T.
- PAYROLL
- PERSONAL LOAN & BUSINESS LOAN
- BANKRUPTCY
- PARALEGAL SERVICES (Immigration)

- வருமான வரி
- வியாபாரக் கணக்குகள்
- சம்பளக் கணிப்பீடு
- தனியார், வர்த்தகக் கடன்கள்
- வங்குரோத்து நிலையடைதல்
- குடிவரவு, குடியகல்வு ஆலோசனைகள்